# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2041 மார்கழி 22 வியாழக்கிழமை (06.01.2011) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 041


# குடாநாட்டில் நடந்த குற்றங்கள் குறித்து பதில் தருவதில் அரசுக்குத் தடுமாற்றம்

## மேலும் ஒரு நாள் கால அவகாசம் கேட்கிறது

கொழும்பு, ஜனவரி 6

யாழ். மாவட்டத்தில் இடம்பெறும் தொடர் கொலைகள், கொள்ளை, சட்டவிரோதச் செயல்கள் தொடர்பில் நாடாளு மன்றத்தில் பதில் தருவதற்கு அரசு நேற்றுத் தடுமாறியது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன் வைத்துள்ள குற்றச் சாட்டுக்களின் உண்மைத் தன்மையை அறியாமல் அவை குறித்து உடனடியாகப் பதில் கூறமுடியாது என அது தெரிவித்தது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நேற்று நாடாளுமன்றில் கொண்டு வந்த கவனயீர்ப்புப் பிரேரணை தொடர்பிலேயே நாடாளுமன்றில் அமைச்சர் நிமல் சிறிபால டி.சில்வா இந்தக் கருத்தைத் தெரிவித்தார். பதிலளிப்பதற்கு இன்று வரைக்கும் கால அவகாசமும் கேட்டார் அவர்.

கடந்த இரண்டு மாதங்களாக யாழ். குடாநாட்டில் தொடர்ச்சியாக இடம் பெற்றுவரும் கொலைகள், கொள்ளைகள், ஆள் கடத்தல்கள் ஆகியவை தொடர்பாக திகதி வாரியாகப் பட்டியல் போட்டுக் காட்டிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர் மாவை சேனாதிராஜா இவை தொடர்பாக அரசு பதில் அளிக்க வேண்டும் எனக் கோரிக்கை விடுத்தார். குடாநாட்டு நிலைமைகள் தொடர்பில் நேற்று நாடாளுமன்றில் கவனயீர்ப்புப் பிரேரணை ஒன்றை முன் வைத்து பேசினார் அவர்.

''யாழ். குடாநாட்டில் சட்டமும், ஒழுங்கும் சீர்குலைந்துள்ளன. அடிக்கு அடி இராணுவம் நிலை கொண்டுள்ளது. ஆனால் கொலைகளும், கொள்ளைகளும், கற்பழிப்புகளும், ஆள்கடத்தல்களும் சர்வசாதாரணமாக இடம்பெறுகின்றன.

இந்தச் செயல்கள் ஒருபோதும் பாதுகாப்புத் தரப்பினருக்குத் தெரியாமல் இடம்பெறும் சாத்தியங்கள் இல்லை. இன்று எமது மக்கள் மரண பீதியுடன் வாழும் நிலை ஏற்பட்டுள்ளது'' என்று குற்றஞ்சாட்டினார் மாவை சேனாதிராஜா.

(27ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். கொலை, கொள்ளை குறித்து அரசு அலட்டிக் கொள்ளவில்லை

### இது புலிகளைத் தட்டி எழுப்பும் என்கிறது ஐ.தே.கட்சி

கொழும்பு, ஜன. 06

யாழ்.குடாநாட்டில் இடம்பெற்றுக் கொண்டிருக்கும் அசம்பாவிதங்கள் மூலம் தூங்கிக் கொண்டிருக்கும் புலிகளை மீண்டும் தட்டி எழுப்ப அரசு முயற்சி செய்கிறது என்று ஐ.தே.கட்சி குற்றஞ் சாட்டியுள்ளது.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய ஐ.தே.கட்சியின் தவிசாளரும், எம்.பியுமான காமினி ஜயவிக்ரம பெரேரா இவ்வாறு கூறினார். அவர் இதுதொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

யாழ்ப்பாணத்தில் இப்போது கொள்ளை, கொலை, காணாமல்போதல் மற்றும் பாலியல் வல்லுறவுச் சம்பவங்கள் பெரு

(27ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.நா. நிபுணர் குழு விரைவில் இலங்கை செல்லும்

நியூயோர்க், ஜன. 6

இலங்கையில் இடம்பெற்றதாகக் குற்றஞ்சாட்டப்படும் மனித உரிமை மீறல்கள் மற்றும் போர்க் குற்றங்கள் தொடர்பில் தனக்கு ஆலோசனை வழங்கவென ஐக்கிய நாடுகள் சபை பொதுச் செயலாளர் பான் கீ மூன் நியமித்த நிபுணர் குழு விரைவில் இலங்கைக்குப் பயணம் செய்வதற்கான சாத்தியங்கள் இருக்கின்றன என்று ஐ.நா. பேச்சாளர் மார்ட்டின் நெசர்கி தெரிவித்தார். ஐ.நா. நிபுணர் குழுவுக்குத் தனது இலக்கு என்ன என்பது தெளிவாகத் தெரியும் என்றும் அவர் கூறினார்.

'இன்னர் சிற்றி பிரஸ்' செய்தியாளர் எழுப்பிய கேள்விகளுக்குப் பதில் வழங்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். ''ஏற்கனவே நிபுணர் குழு இலங்கை செல்லத் திட்டமிடப்பட்டிருந்த போது, கட்டுப்பாட்டுடனான வீஸா வழங்குவதாக இலங்கை அரசு அறிவித்ததைத் தொடர்ந்து, அந்தப்

(27ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். மாணவர்களின் கல்வி மேம்பாட்டுக்கு சென்னைப் பல்கலை முழுமையாக உதவும்



### துணைவேந்தர் திருவாசகம் உறுதி

சென்னை, ஜன. 6

யாழ்ப்பாண மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்கு உதவ சென்னைப் பல்கலைக்கழகம் தயாராக உள்ளது என்று தெரிவித்துள்ளார் அப்பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர்.

''எதிர் காலத்தில் சென்னைப் பல்கலைக்கழகம் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றை ஏற்படுத்திக்கொள்ளவும் விரும்புகின்றது. இதற்கான ஏற்பாடுகள் விரைவில் மேற்கொள்ளப்படும். யுத்தச் சூழலில் வாழ்ந்து கொண்டிருக்கின்ற மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு ஒத்துழைப்பதற்கு நாம் எப்போதும் தயாராகவே உள்ளோம்'' என்றார் துணைவேந்தர் பேராசிரியர் திருவாசகம்.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக ஊடகவளங்கள் மற்றும் பயிற்சி மையத்தின் 36 மாணவர்கள் புத்தாக்கப் பயிற்சிக்காக சென்னைக்குச் சென்றுள்ளனர்.

(27ஆம் பக்கம் பார்க்க)

## ஒட்டகம், தீக்கோழி இலங்கை வருகின்றன

கொழும்பு, ஜன.06

மத்திய கிழக்கு நாடுகளிலிருந்து ஒட்டகம் மற்றும் தீக் கோழி களை இறக்குமதி செய்ய அரசு ஆலோசித்து வருகின்றது. நாட்டில் ஏற்பட்டுள்ள பால் மற்றும் முட்டையின் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யவே இவற்றை இறக்குமதி செய்ய ஆலோசிக்கப்பட்டு வருவதாக கால்நடை மற்றும் கிராமிய சமூக பிரதி அமைச்சர் எச்.ஆர்.மித்திரபால தெரிவித்துள்ளார்.

இதன் மூலம் இலங்கைக்கு வரும் உல்லாசப் பயணிகளைக் கவரும் வகையில் வித்தியாசமான உணவு வகையை வழங்க முடியுமென அவர் குறிப்பிட்டுள்ளார். தேயிலை மற்றும் இறப்பர் என்பன எமது நாட்டுக்குரிய தாவரங்கள் அல்ல. அவை ஆங்கிலேயரால் இலங்கைக்கு அறிமுகப்படுத்தப்பட்டவை. அதுபோலவே ஒட்டகங்கள் மற்றும் தீக் கோழிகளையும் இறக்குமதி செய்யத் தீர்மானித்துள்ளோம் என கால்நடை மற்றும் கிராமிய சமூக பிரதி அமைச்சர் எச்.ஆர்.மித்திரபால சுட்டிக்காட்டியுள்ளார். (உ)

## இறுதிப் போரின்போது அமெரிக்கா இலங்கைக்கு எச்சரிக்கை விடுத்தது

### விக்கிலீக்ஸ் கசியவிட்ட தகவல்

கொழும்பு, ஜன. 06

இறுதிக்கட்ட யுத்தத்தின் போது ஈரான், வட கொரியா ஆகிய நாடுகளுடன் ஆயுதக் கொள்வனவில் இலங்கை அரசு ஈடுபட்டால் அதன் மீது கடுமையான நிபந்தனைகளை விதிக்க நேரிடும் என்று அமெரிக்கா எச்சரித்திருந்தது என 'விக்கிலீக்ஸ்' இணையத்தளத்தை மேற்கோள் காட்டி நோர்வேயின் ஆப்டன் போஸ்டன் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

மேற்படி கொள்வனவானது ஐ.நாவின் 1718ஆம் இலக்க தீர்மானத்துக்கு முரணானது என அமெரிக்கா சுட்டிக்காட்டியிருந்தது எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இத்தகைய கொள்வனவு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமாயின் இலங்கையுடனான அனைத்து வர்த்தக நடவடிக்கைகளையும்

(27ஆம் பக்கம் பார்க்க)

## திருநெல்வேலியில் கத்திக்குத்துச் சம்பவம் இளைஞர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஜன. 6

திருநெல்வேலி, பணிக்கர் வீதியில் நேற்று மாலை நடைபெற்ற கத்திக்குத்துக்கு இலக்காகி இளைஞர் ஒருவர் உயிரிழந்தார்.

சம்பவத்தில் உயிரிழந்தவர் அதேஇடத்தில் வசிப்பவரான கே.உதயன் (வயது-26) என்று அடையாளம் காணப்பட்டுள்ளது. நெஞ்சில் கத்திக்குத்துக்கு இலக்கான நிலையில் இவரது சடலம் நேற்று இரவு யாழ்.

(27ஆம் பக்கம் பார்க்க)

### உலகக் கிண்ண கிரிக்கெட் காரணமாக

## 6 உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்களைப் பிற்போட முடிவு

கொழும்பு, ஜன. 06

உலகக் கிண்ண கிரிக்கட் போட்டிகள், பயிற்சிகள் ஆகியவை நடைபெறும் கிரிக்கட் மைதானங்கள் அமைந்துள்ள மாநகர சபைகள், பிரதேச சபைகளுக்கான தேர்தலை பின்போடுவதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

கொழும்பு, கண்டி, காலி மாநகரசபைகள், சூரியவெவ, குண்டகசாலை பிரதேச சபைகள், தம்புள்ள நகரசபை ஆகியவற்றின் தேர்தல்களே இவ்வாறு பிற்போடப்படவுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி பிரதேசங்களில் உள்ளூராட்சிச் சபைத் தேர்தல்களை நடத்துவதால், உலகக் கிண்ணப் போட்டிகளுக்கு இடையூறுகள் ஏற்படுமென முன்னாள் இலங்கை கிரிக்கட் அணித் தலைவர் அர்ஜுன ரணதுங்க

(27ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# குடாநாட்டில் நடந்துவரும் அராஜகங்கள் நாடாளுமன்றில் நேற்று கிளம்பியது 'சூடு'!

யாழ். குடாநாட்டில் இடம்பெற்று வரும் தொடர்கொலைகளும், கொள்ளைகளும், பாலியல் வல்லுறவுகளும் உண்மையான வைதானா என்ற சந்தேகத்தைக் கிளப்புகின்றார் சபை முதல்வரும் அமைச்சருமான நிமால் சிறிபால டீ சில்வா.

பொறுப்பு வாய்ந்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும், வடபகுதி மக்களின் பெரும் ஆதரவைப் பெற்றவருமான கூட்டணி உறுப்பினர் மாவை சேனாதிராஜாவும் அங்கு இடம்பெறும் சட்டவிரோதச் செயல்களை பட்டியல் போட்டுக் காட்டிய பின்னரும் அமைச்சர் நிமல்சிறிபால டீ சில்வா இப்படிக் கூறியது சபையில் பெரிய சலசலப்பை ஏற்படுத்தி விட்டது.

நேற்றுப் பிற்பகல் ஒருமணிக்கு சபாநாயகர் சமல் ராஜபக்ஷ தலைமையில் சபை கூடியது.

வன்னி மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் நுர்தீன் மசூரின் மறைவினால் ஏற்பட்ட வெற்றிடத்திற்குப் முத்தலிப் பாபா பாருக் பதவிப் பிரமாணம் செய்து பதவியேற்றுக் கொண்டார்.

கடந்த பொதுத்தேர்தலின் போது, ஐக்கிய தேசியக் கட்சியின் யானைச் சின்னத்தில் இவர் போட்டியிட்டவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இப்பதவியேற்பு நிகழ்வைத் தொடர்ந்து வழமையான வாய்மூலமான கேள்விகளுக்கு பதில்கள் அளிக்கப்பட்டன.

நேற்றைய அமர்வின்போது குறிப்பிடத்தக்க இரண்டு சட்டமூலங்களுக்கான முன்அறிவித்தல்கள் சபையில் சமர்ப்பிக்கப்பட்டன.

### துள்ளிப் பாய்ந்து துடித்து விழுந்த அஸ்வர்

முதியோர்களின் உரிமைகளைப் பாதுகாத்தல் திருத்தச் சட்டமூலத்திற்கான முன் அறிவித்தலை சமூகசேவைகள் அமைச்சர் சபையில் சமர்ப்பித்தார்.

அடுத்ததாக ஆளும் தரப்பு உறுப்பினரும், பிரபல நடிகையுமான மாலினி பொன்சேகா 'லெஸ்டர் பீரிஸ்' மற்றும் சுமந்திர பீரிஸ் மன்றத்தை கூட்டிணைப்பதற்காக சட்டமூலத்திற்கான முன்மொழிவை சபையில் சமர்ப்பித்தார்.

இந்தச் சந்தர்ப்பத்தில் கலைஞர்களான லெஸ்டர் பீரிஸும், சுமித்ரா பீரிஸும் பார்வையாளர்கள் கலரியில் இருந்தனர்.

நடிகை மாலினி பொன்சேகா முன்மொழிந்து உரையாற்றி அமர்ந்தவுடன், ஆளும் தரப்பு உறுப்பினரான ஏ.எச்.எம். அஸ்வர் இதனை வழிமொழிவதாகக் கூறி துள்ளி எழுந்தார்.

அஸ்வர் உறுப்பினர் அவர்களே, இந்தப் பிரேரணையை முன்மொழிந்தவர் கே.ஆர்.பி.சூரியபெருமதான். நீங்கள் அல்ல என்றார் சபாநாயகர். இதனால் ஏமாற்றமடைந்த அஸ்வர் எம்.பி. துள்ளிப் பாய்ந்த வேகத்தில் துடித்து அமர்ந்தார்.

இவற்றையெல்லாம் தொடர்ந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர் மாவை சேனாதிராஜா சபையில் கவனயீர்ப்புப் பிரேரணை ஒன்றை முன்வைத்தார்.

இந்தக் கவனயீர்ப்புப் பிரேரணை நேற்றுமுன்தினமே சபையில் சமர்ப்பிக்கப்படவிருந்தது. சில நடைமுறைக் குளறுபடிகளினால் இன்று சமர்ப்பிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

கடந்த இரண்டு மாதங்களாக தொடர்ச்சியாக இடம்பெற்ற கொலைகள், கொள்ளைகள், பாலியல் வல்லுறவுகள், ஆள்கடத்தல்கள் என்பனவற்றைப் பட்டியல் போட்டுக் காட்டினார் மாவை சேனாதிராஜா. சங்கானையில் குருக்கள் கொல்லப்பட்ட




சம்பவத்துடன் தொடர்புடைய இராணுவத்தினரையும் மற்றும் இரு சந்தேக நபர்களையும் மட்டுமே பொலிஸார் கைது செய்துள்ளனர். ஆனால், வேறு எவருமே கைதுசெய்யப்படவில்லை என்று கூறினார் அவர்.

இதற்கு அரசே பதில் கூறவேண்டும் என்றும் வலியுறுத்தினார் மாவை.

### முழுப் பூசணிக்காயை சோற்றில் மறைக்க முயற்சித்த அமைச்சர்

இதே விடயங்களைத்தான் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் சபையில் விசேட உரையின் மூலம் சமர்ப்பித்தார். ஆனால், அவரது தொனி மறுக்கப்பட்டதாக இருந்தது. அப்போது எவரும் மறுக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. ஆனால், இதே விடயங்களை மாவை சேனாதிராஜா குறிப்பிட்டபோது இவை தொடர்பாக உண்மைத் தன்மை கண்டறியப்பட வேண்டும். அதன்பின்னரே பதில் அளிக்க முடியும் என்று வாதிட்டார் சபை முதல்வர் நிமால்சிறிபால டி சில்வா.

எனினும் சபாநாயகர் இருதரப்பு வாதங்களையும் அவதானித்த பின்னர், நாடாளுமன்ற நிலையியற் கட்டளைகளில் உள்ள சில நெளிவு சுழிவுகளை மேற்கோள்காட்டி இருதரப்பினருக்கும் பாதிப்பு ஏற்படாத வகையில் இவ்விடயத்திற்கு நாளை (இன்று) பதிலளிக்கப்படும் என்று கூறி தர்க்கத்திற்கு முற்றுப் புள்ளி வைத்தார்.

ஒவ்வொரு மாதமும் வடக்கு கிழக்கு உட்பட நாட்டில் பரவலாக இடம்பெறும் கொலைகள், சட்டவிரோத சம்பவங்கள் தொடர்பாக பட்டியல் போட்டுக்காட்டும் பிரதமர் கண்டுபிடிக்கப்பட்ட ஆயுதங்களையும் குண்டுகளையும் மட்டுமே பட்டியல் போட்டுக் காட்டினார்.

அப்படியானால் யாழ் குடாநாட்டில் அன்றாடம் இடம்பெற்றுவரும் கொலைகள், கொள்ளைகள், ஆள்கடத்தல்கள் பொலிஸ் நிலையங்களில் பதியப்படுவது இல்லையா. அவை பாதுகாப்பு மத்திய நிலையத்திற்கு அறிவிக்கப்படுவது இல்லையா என்ற கேள்வியும் எழும்புகின்றது.

நேற்றைய விவாதத்தின்போது நாடாளுமன்றத்தில் ஒலித்த தமிழ்க் குரல்கள் அனைத்தும் வடபகுதியில் இடம்பெற்றுவரும் சட்டவிரோத நடவடிக்கைகளைப் பெரிதும் கண்டித்தன.

நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவரும் ஈ.பி.டி.பி. உறுப்பினருமான முருகேசு சந்திரகுமார் உரையாற்றும் போது, அவர் ஆளும் தரப்பில் இருந்து பேசுகின்றாரா, இல்லை எதிர்த்தரப்பு வரிசையில் இருந்து பேசுகின்றாரா என்று சிந்திக்கும் வகையில் அமைந்திருந்தது. அவரது பேச்சு உணர்வு பூர்வமானதாகவும் உருக்கமானதாகவும் காணப்பட்டது.

### வரைபடத்தில் இருந்து சம்பூரை நீக்க முயற்சி

கூட்டமைப்பின் யாழ். மாவட்ட உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் ஒரு முக்கியமான விடயத்தைச் சுட்டிக்காட்டினார்.

அதாவது திருகோணமலை மாவட்டத்தில் இருநூறு வருடங்களுக்குமேல் பழைமையான இடம் சம்பூர். அங்கு வாழ்ந்த சுமார் ஆயிரம் குடும்பங்கள் உயர் பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் வெளியேற்றப்பட்டுள்ளன. இவர்கள் பல வருடங்களாகவே அகதி முகாம்களில் வாழ்கின்றனர்.

அண்மையில் குடிசன மதிப்பீடும் ஆள்பதிவும் இடம்பெற்றபோது இவர்களுடைய சொந்த இடம் சம்பூர் எனக் குறிப்பிடக்கூடாது என்றும் அகதி முகாம் விலாசத்தையே பதியவேண்டும் எனக் கட்டாயப்படுத்தியுள்ளனர்.

அப்படியானால் சம்பூர் என்ற பெயரையே இல்லாதொழித்து இலங்கை வரைபடத்தில் இருந்தே சம்பூரை நீக்கிவிட முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றனவா என்றும் சுரேஷ் பிரேமச்சந்திரன் கேள்வி எழுப்பினார்.

இது 'சீரியஸாக' சிந்திக்க வேண்டிய விடயமே.

### தமிழர்கள் வாழும் இடமெல்லாம் வெள்ளமும் போகிறதே

மட்டக்களப்பு மாவட்ட கூட்டணி உறுப்பினரான பொன்.செல்வராஜா உரையாற்றும்போது, கிழக்கு மாகாணத்தில் ஏற்பட்டுள்ள வெள்ளப்பெருக்கினால் ஏற்பட்ட பாதிப்புகள் தொடர்பாகத் தெளிவுபடுத்தினார்.

வடக்கில் கொலைகளும் கொள்ளைகளும் இடம்பெறும் அதேவேளை, கிழக்கில் பெரும் இயற்கை அனர்த்தம் ஏற்பட்டுள்ளது. நான்கு லட்சத்திற்கும் அதிகமான குடும்பங்கள் வீடு வாசல்களை இழந்து அதிகளாகி விட்டனர். பல ஆயிரம் ஏக்கர் விவசாயக் காணிகள் நாசமாக்கப்பட்டுள்ளன. இதற்கு நிவாரணம் வழங்கப்பட வேண்டும். ஆனால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான நிவாரணங்கள் எல்லாம் பேச்சளவில் மட்டுமே. நிவாரணம் தான் கிடைக்கவில்லை என்று சுட்டிக்காட்டினார்.

---

உதயன் சபைச் செய்தியாளர்
இரா.புத்திரசிகாமணி

---

இறுதியாக அவர் கூறியது சபையில் ஒரு உணர்வை ஏற்படுத்தியது. அதாவது தமிழர்கள் வாழும் இடங்களுக்கு எல்லாம் இந்த வெள்ளமும் போகின்றதே என்று வேதனையுடன் கூறினார் பொன் செல்வராஜா.

### வடக்கு கிழக்கு மாகாணங்கள் ஜனாதிபதி நிர்வாகத்தில் இல்லையா?

யாழ்.மாவட்ட கூட்டமைப்பு உறுப்பினர் ஈ.சரவணபவன் சபையில் சர்ச்சைக்குரிய ஒரு விடயத்தைக் கிளப்பி விட்டார். அதாவது வடக்கிலும் தெற்கிலும் பல உயிர் இழப்புக்களைக் காணிக்கையாக்கி யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்ததாக ஜனாதிபதி கூறுகின்றார்.

ஆனால், யாழ். குடாநாட்டில் தினசரி கொலைகளும், கொள்ளைகளும், பாலியல் வல்லுறவுகளும் இடம்பெற்ற வண்ணமே இருக்கின்றன. எனினும் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டவேண்டிய பாதுகாப்புப் படையினர் கண்டும் காணாததுபோல் இருக்கின்றனர். அப்படியானால் வடபிராந்தியம் ஜனாதிபதியின் நிர்வாகத்தில் இல்லையா என்று அவர் கேட்டார்.

அப்படியானால் ஆயிரம் ஆயிரம் படையினரையும், இளைஞர், யுவதிகளையும் பலி கொண்டதில் பயன் ஏதும் இல்லையே என்றும் அவர் கூறினார்.

இறுதியாக உரையாற்றிய அமைச்சர் விமல்வீரவன்ஸ, யாழ். குடாநாட்டில் இடம்பெறும் சட்டவிரோதச் செயல்களின் பின்னணியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக் கூட இருக்கலாம் என்று விமர்சித்தார்.

விமல் வீரவன்ஸவின் கூற்றை கூட்டமைப்பு உறுப்பினரான சரவணபவன் வன்மையாகக் கண்டித்தார். அவர் ஆங்கிலத்தில் கூறியது அமைச்சர் விமல் வீரவன்ஸவுக்கு உறைக்கவில்லை போலும்.

# யாழ்ப்பாணத்தில் நடக்கும் கொலைகள் குறித்து பிரதமருக்குத் தெரியாதிருப்பது வேதனைமிக்கது

## சபையில் சுரேஷ் எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 06

குடாநாட்டில் மீட்கப்பட்டு வரும் ஆயுதங்கள் தொடர்பாக நன்கு தெரிந்து வைத்திருக்கும் பிரதமருக்கு, அங்கு இடம்பெற்றுவரும் கொலை, கொள்ளை, கடத்தல் தொடர்பான விவரங்கள் தெரியாதிருப்பது வேதனையளிக்கிறது - என்று தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நடாளுமன்ற உறுப்பினர், சுரேஷ் பிரேமச்சந்திரன் நேற்றுத் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒருமாத காலத்திற்கு நீடிப்பது தொடர்பான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு -

கடந்த இரண்டு மாதங்களில் யாழ்.குடாநாட்டில் பல்வேறு கொலை, கொள்ளை, கடத்தல் பாலியல் முறைகேடுகள் ஆகியன தொடர்ந்து இடம்பெற்றுள்ளன. இக்குற்றச் செயல்களின் பின்புலங்கள் பல கேள்விகளை எழுப்புகின்றன.

புனர்வாழ்வு முகாம்களில் இருந்து விடுவிக்கப்படுபவர்கள் கொல்லப்படுகிறார்கள்; கடத்தப்படுகிறார்கள். அதேவேளை, உரும்பிராயில் பிரதிக் கல்விப்பணிப்பாளர் ஒருவர் ஆயுதக் குழுக்களால் சுட்டுக் கொலை செய்யப்பட்டிருந்தார். தேசிய கீதத்தை சிங்களத்தில் பாடுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்ததால் அவர் சுட்டுக் கொல்லப்பட்டனர் எனக் கூறப்படுகிறது.

ஆனால், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஊடகமொன்றுக்கு வழங்கிய செவ்வியில் குறித்த கல்விப்பணிப்பாளர் சித்த சுவாதீனமற்றவர் என்று கூறியிருந்தார். அப்படிப்பட்டவர் எவ்வாறு வலயக்கல்விப் பணிப்பாளராக ஆக முடியும்? அதுவே உண்மை என நினைத்தாலும்கூட சித்தசுவாதீனமற்றவர் கொல்லப்படலாமா?

யாழ். மாவட்டத்தில் இடம்பெறும் இச்சம்பவங்கள் ஏனைய பிரதேசங்களிலும் இடம்பெறக் கூடியதொன்று என்று யாழ் மாவட்ட இராணுவத்தளபதி கூறியிருக்கின்றார். தென்னிலங்கையில் ஒருவர் கொல்லப்படுகிறார், துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கப்படுகிறார் என்பதற்காக குடாநாட்டிலும் அவ்வாறு இடம்பெற வேண்டுமா?

இதேவேளை, இலங்கை வரைபடத்திலிருந்து சம்பூர் என்ற பழைமை வாய்ந்த கிராமத்தை அழிக்க அரசு முயற்சித்து வருகிறது. சம்பூரில் வாழ்ந்த மக்கள் கடந்த மூன்று வருடங்களாக வெவ்வேறு இடங்களிலுள்ள அகதிமுகாம்களில் வாழ்ந்து வருகிறார்கள். அவர்கள் பிறந்த பகுதியில் வாக்களிக்கக் கூட முடியாத நிலை அவர்களுக்கு ஏற்பட்டுள்ளது.

இப்படி அவர் தெரிவித்தார்.

(உ-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காப்புறுதி இழப்பு மதிப்பீட்டுக் குழுவினர் கிளிநொச்சி, முல்லை மாவட்டங்களுக்கு விஜயம்

கிளிநொச்சி,ஜன.6

யுத்த காலத்தில் பாதிப்புக்குள்ளான வியாபார கட்டடங்கள் மற்றும் சொத்துக்களின் இழப்புகள் தொடர்பான மதிப்பீட்டை மேற்கொண்டு காப்புறுதி செய்து கொண்டவர்களுக்கு விரைவில் நட்டஈட்டுக் கொடுப்பனவைச் செலுத்தும் முகமாக தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் தலைவர் மற்றும் உயர் அதிகாரிகள் குழு கிளிநொச்சி, முல்லைத்தீவுப் பிரதேசங்களுக்கு வருகைதரவுள்ளது.

நாளை வெள்ளி காலை 9 மணி தொடக்கம் 12 மணிவரை கிளிநொச்சியிலும் 12.30 தொடக்கம் பி.ப 2மணிவரை முல்லைத்தீவிலும் இழப்பீடுகளுக்கு விண்ணப்பித்தவர்களது இடங்கள் பார்வையிடப்படும்.

உரியவர்கள் தத்தமது கட்டடங்களில் இருப்பதுடன் இழப்பை ஆதாரப்படுத்தும் ஆவணங்களையும் தயாராக வைத்திருக்க வேண்டுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அன்று பி.ப. 2.30 மணிக்கு அனைத்து இழப்பீட்டுக் கோரிக்கையாளர்களையும் சந்திக்கும் கூட்டம், கிளிநொச்சி கச்சேரி வளாகத்தில் அரச அதிபர் தலைமையில் நடைபெறும். இக்கூட்டத்தில் கலந்துகொள்வதன் மூலம் இழப்பீட்டுக் கொடுப்பனவு தொடர்பிலான விளக்கத்தையும் தெளிவினையும் பெற்றுக்கொள்ள முடியும்.

மேலதிக விவரங்களுக்கு கிளிநொச்சி முல்லைத்தீவு வணிக கைத்தொழில் வேளாண் ஒன்றியங்களின் தலைவர்களுடன் தொடர்புகொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (க)

# சங்கிலியன் தோப்புப் பகுதிகளில் குப்பை கொட்டுவோர் மீது நடவடிக்கை

## தொல்லியல் திணைக்களத்தினர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஜன.6

நல்லூரில் அமைந்துள்ள சங்கிலியன் தோப்பை அசுத்தப்படுத்துவதோ அல்லது குப்பைகளை போடுவதோ சட்டப்படி குற்றம்.

குப்பைகளை போடுபவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று தொல்லியல் திணைக்களத்தின் வட பிராந்திய பொறுப்பதிகாரி ஜெயந்த விஜயரட்ண உதயனுக்குத் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

சங்கிலியன் தோப்பை தொல்லியல் சின்னமாகப் பிரகடனப்படுத்த தொல்லியற் திணைக்களம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

எனவே அந்தப் பகுதியில் குப்பைகளைப் போடுவது, அப்பகுதிகளை அசுத்தப்படுத்துவது சட்டப்படி குற்றமாகும்.

இது தொடர்பாக ஏற்கனவே பிரதேச செயலகங்களுக்கும் அறிவித்துள்ளேன்.

எனவே அப்பகுதியில் குப்பைகளை போடுபவர்கள் மீது தொல்லியற் திணைக்களத்தால் சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார். (ம-319)

## ஒருவன் கையைக் காலால் மிதிக்க மற்றவன்

# மூதாட்டி குழறக் குழற அவரின் காப்பை பலவந்தமாக கழற்றிச் சென்ற கயவர்கள்

சங்கானை,ஜன.6

சங்கானை, சிலம்புப்புளியடியில் நேற்றுப் புதன்கிழமை பட்டப் பகல் வேளையில் மூதாட்டி ஒருவரின் தங்க நகைகள் பலவந்தமாக பறித்துச் செல்லப்பட்டன.

இந்தச் சம்பவம் குறித்து தெரியவருவதாவது-

நேற்று முற்பகல் 11.30 மணியளவில் வேலாயுதம் விசாலாட்சி என்ற 70 வயதுடைய மூதாட்டி வீட்டில் தனிமையில் இருந்துள்ளார். அவ்வேளை வீட்டுக்குச் இரு இளைஞர்கள் வந்துள்ளனர் வீட்டில் யார் இருக்கின்றார்கள் என மூதாட்டியிடம் விசாரித்துள்ளனர்.

அப்பாவியான மூதாட்டி, மகள் வேலைக்குச் சென்றுவிட்டார் மற்றவர் முன் வீட்டுக்குச் சென்றுள்ளார் என்று கூறியுள்ளார். நிலைமையைப் புரிந்து கொண்ட அந்தக் கயவர்கள் கையில் இருந்த மோதிரத்தையும், காப்பையும் அபகரித்துச் சென்றனர்.

கையில் இருந்த காப்பை கழற்ற முடியாத நிலையில் ஒருவன் மூதாட்டியின் கையை விரித்து மடக்கி, காலில் வைத்து மிதிக்க மற்றவன் காப்பை அவர் குழறக் குழற கழற்றிச் சென்றுள்ளனர்.

இதேவேளை இச் சம்பவம் நடைபெற்ற இடத்திற்கு அருகில் படையினரின் பாதுகாப்பு அரண் இருப்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-39)

# இன்று கொடியேற்றம்

யாழ்ப்பாணம்,ஜன.7

திருநெல்வேலி, பரமேஸ்வராச் சந்தி, வீரகத்தி விநாயகர் தேவஸ்தான தைப்பூச மஹோற்சவம் இன்று வியாழன் முற்பகல் 10 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

எதிர்வரும் 19ஆம் திகதி (14 ஆம் திருவிழா) தேர்த்திருவிழாவும், மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (ஒ)

# வலிகாமம் பகுதியில் படையினர் நேற்று பரவலாக வீதிச் சோதனை

யாழ்ப்பாணம்,ஜன.6

வலிகாமம் பகுதியில் படையினர் நேற்று பரவலாக வீதிச் சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

சண்டிலிப்பாய், கட்டுடை, மானிப்பாய், ஆனைக்கோட்டை, சங்கானை, பண்டத்தரிப்பு உள்ளிட்ட பல பகுதிகளிலேயே படையினர் சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

வீதிகளில் சென்றவர்கள் குறிப்பாக மோட்டார் சைக்கிள்களிலும், வாகனங்களிலும் சென்றோர் துருவித் துருவி சோதனையிடப்பட்டனர். நேற்று முழு நாளும் இந்த நடவடிக்கை இடம்பெற்றது. அடையாள அட்டை, சாரதி அனுமதிப்பத்திரம் மற்றும் வாகனக் காப்புறுதிச் சான்றிதழ்கள் உட்பட அனைத்து ஆவணங்களையும் பார்வையிட்டு விசாரணைகளை மேற்கொண்டனர்.

குடாநாட்டில் அண்மைக் காலமாக இடம்பெற்று வருகின்ற கொலை, கொள்ளைச் சம்பவங்களையடுத்தே இந்தச் சோதனை நடவடிக்கைகளை படையினர் மேற்கொண்டனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-9)

# கிளிநொச்சியில் சாரதி பரீட்சார்த்த பரீட்சை

கிளிநொச்சி மாவட்ட செயலகம் ஊடாக சாரதி அனுமதிப் பத்திரம் பெற்றுக்கொள்வதற்காக விண்ணப்பித்து 2010ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 6ஆம் திகதிக்கு முற்பட்ட திகதிகளில் இடம்பெற்ற எழுத்துப் பரீட்சைகளில் சித்தியடைந்தவர்களுக்கான ஓட்டுநர் பரீட்சார்த்த பரீட்சை நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு கிளிநொச்சி மாவட்டச் செயலகத்திலும் -

புதிதாக விண்ணப்பித்தவர்களுக்கான எழுத்துப் பரீட்சை நாளை மறுதினம் சனிக்கிழமை கிளிநொச்சி மகா வித்தியாலய மண்டபத்தில் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பரீட்சார்த்திகள் அனைவரும் தமது வாகன ஒழுங்குகளுடனும் உரிய இடங்களுக்கு வருகை தருமாறு கேட்கப்பட்டுள்ளது. அதற்கு முன்பதாக ஓட்டுநர் பரீட்சார்த்த பரீட்சை பரீட்சார்த்திகள் தமது வரவினை உறுதிப்படுத்தும் முகமாக இன்று வியாழக்கிழமை தமது பதிவுகளை கிளிநொச்சி மாவட்ட செயலக மோட்டார் போக்குவரத்துக் கிளையில் மேற்கொள்ளுமாறு அரச அதிபர் கேட்டுள்ளார். (ஒ)

# பெருங்குடி மக்களுக்கு நற்செய்தி! சாராயத்தின் விலை குறைந்தது!!

கொழும்பு,ஜன.6

ஒரு போத்தல் சாராயத்தின் விலை கடந்த முதலாம் திகதி முதல் 20 முதல் 25 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளதாக இலங்கை வடிசாலைகள் நிறுவனம் தெரிவிக்கின்றது.

வரவு - செலவுத் திட்ட அறிக்கையின் மூலம் மதுபானங்கள் தொடர்பான பெறுமதி சேர் வரி 20 வீதத்தில் இருந்து 12 வீதம் வரையில் குறைக்கப்பட்டுள்ளதன் காரணமாகவே இந்த விலை வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக மேற்படி நிறுவனம் தெரிவிக்கின்றது.

இதற்கமைய ஒரு போத்தல் அதிவிசேட சாராயத்தின் விலை 650 ரூபாவில் இருந்து 630 ரூபா வரையிலும், ஒரு போத்தல் பழைய (ஓல்ட்) சாராயத்தின் விலை 765 ரூபாவில் இருந்து 740 ரூபா வரையிலும் இருதடவை வடிக்கப்பட்ட ஒரு போத்தல் சாராயத்தின் விலை 845 ரூபாவில் இருந்து 820 ரூபா வரையிலும் குறைந்துள்ளதாகத் தெரிவிக்கும் மேற்படி நிறுவனம், ஏனைய சாராய வகைகளின் விலைகளும் கூட குறைந்துள்ளதாகத் தெரிவிக்கிறது.

சாராய வகைகளின் விலைகள் இவ்விதம் குறைந்துள்ளமை இதுவே முதற்தடவை எனவும் அரச தகவல்கள் தெரிவிக்கின்றன. (ஒ-22)

## பாதுகாப்பு மண் அணை நகர்த்தப்பட்டதால்

# குரும்பசிட்டி கிழக்கில் கண்ணிகள் அகற்றப்பட்டதும் மீள்குடியமர்வு

யாழ்ப்பாணம்,ஜன.6

இராணுவத்தினரின் பாதுகாப்பு மண் அணை பின்நகர்த்தப்பட்டுள்ள குரும்பசிட்டி கிழக்கு (ஜே/243) பகுதியில் கண்ணிவெடிகள் அகற்றியதற்கான சான்றிதழ்கள் வழங்கப்பட்டதன் பின்னர் மக்கள் மீள்குடியேற்றம் செய்யப்படவுள்ளனர்.

வலி.வடக்குப் பிரதேச செயலர் எஸ்.முரளிதரன் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

குரும்பசிட்டி கிராம அபிவிருத்திச் சங்கம் ஏற்பாடு செய்திருந்த மீள்குடியேற்றம் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று வயாவிளான் மகாவித்தியாலயத்தில் நேற்று நடைபெற்றது.

இதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே பிரதேச செயலர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:-

வயாவிளான் பகுதியில் இராணுவத்தினரின் பாதுகாப்பு மண் அணைகள் பின்நகர்த்தப்பட்டுள்ளன. இதன்போது குரும்பசிட்டி கிழக்கு(ஜே/243) பகுதி விடுவிக்கப்பட்டுள்ளது.

இப்பகுதியில் மீள்குடியமர 400 குடும்பங்கள் விண்ணப்பித்துள்ளன. இங்கு கண்ணிவெடிகள் அகற்றும் நடவடிக்கைகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அந்தப் பணிகள் நிறைவுபெற்றதும் விரைவில் அப்பகுதி மக்கள் மீள்குடியேற்றம் செய்யப்படுவார்கள் - என்றார்.

இந்தக் கலந்துரையாடலில் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் உபதலைவர் வி.கிருஷ்ணசாமி, பிரதேச செயலகத் திட்டப் பணிப்பாளர் ரவி நகுலேஸ்வரன் உட்பட குரும்பசிட்டி மக்கள் நூற்றுக்கணக்கானோர் கலந்து கொண்டனர். (ஒ-9-14)

# மீளக்குடியமர்ந்த முஸ்லிம் மக்களுக்காக ஒஸ்மானியாக் கல்லூரியில் நடமாடும் சேவை

## அடுத்த செவ்வாயன்று நடக்கும்

யாழ்ப்பாணம்,ஜன.6

யாழ்.மாவட்டத்தில் மீளக்குடியமர்ந்துவரும் முஸ்லிம் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் மற்றும் மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக ஆராய்வதற்கான நடமாடும் சேவை எதிர்வரும் 11ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு யாழ். ஒஸ்மானியாக் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

இந்த நடமாடும் சேவையை தேவையுடைய முஸ்லிம் மக்கள் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் எனவும் மேலதிக தகவல்கள், உதவிகள் தேவைப்படுவோர் தம்முடன் தொடர்பு கொள்ளலாம் என்று யாழ்.மாநகர சபை உறுப்பினர் வி.ஏ.எஸ்.சுபியான் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

யாழ்ப்பாண மாவட்டத்திலிருந்து 1990 ஆம் ஆண்டு இடம்பெயர்ந்து புத்தளம் மற்றும் பிற மாவட்டங்களில் தங்கியிருந்து தற்போது மீளக்குடியமர்ந்து வரும் முஸ்லிம் மக்களின் நலனைக் கருத்திற்கொண்டே இந்த நடமாடும் சேவைக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த நடமாடும் சேவையின் போது யாழ்.மாவட்டத்திலுள்ள திணைக்கள உயரதிகாரிகள் பங்கேற்று மக்களது பிரச்சினைகளைக் கேட்டறியவுள்ளனர். இதில் யாழ்.பிரதேச செயலர், மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர், சுகாதார சேவைகள் பணிப்பளர், தேர்தல் திணைக்கள உதவி ஆணையாளர், உள்ளூராட்சித் திணைக்கள பிராந்திய உதவி ஆணையாளர், மாவட்ட செயலக புனர்வாழ்வுப் பகுதித் திட்டப் பணிப்பாளர், யாழ். மாநகரசபை ஆணையாளர் -

தேசிய சேமிப்பு வங்கி முகாமையாளர், ஆள்பதிவுத் திணைக்கள பதவி நிலை உதவியாளர், பிரதம நில அளவையாளர், சமூக சேவைகள் திணைக்கள பதவி நிலை உத்தியோகத்தர்கள் பங்கேற்கவுள்ளனர்.

கடந்த வருடம் டிசெம்பர் 29 ஆம் திகதி யாழ்.அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமாரிடம் எழுத்து மூலம் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு ஏற்பவே அரச அதிபரால் இந்த நடமாடும் சேவைக்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றும் சுபியான் தெரிவித்தார். (ஒ-14)

# பாடசாலை முகாமைத்துவ உதவியாளர் நியமனத்தில் முரண்பாடான நடைமுறை

யாழ்.கல்வி வலயத்தில் உள்ள பாடசாலைகளில் முகாமைத்துவ உதவியாளர் நியமனத்தில் முரண்பாடான நடைமுறை குறித்த கவலை தெரிவிக்கப்படு கிறது. பாடசாலை மாணவர்களின் எண்ணிக்கையோ அல்லது பாடசாலைகளின் தர நிலையோ கருத்திற்கொள்ளாமல் முகாமைத்துவ உதவியாளர் நியமனம் வழங்கப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

ஆயிரத்துக்கு மேற்பட்ட மாணவர்கள் கல்வி பயிலும் பாடசாலைக்கு முகாமைத்துவ உதவியாளர் நியமிக்கப்படாமல் 250 இற்கும் குறைவான மாணவர்கள் கல்வி பயிலும் தரம் 2 பாடசாலைகளுக்கு முகாமைத்துவ உதவியாளர் நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

ஐநூறுக்கும் குறைந்த மாணவர்களைக் கொண்ட பாடசாலைக்குக் கூட ஒன்றுக்கு மேற்பட்ட முகாமைத்துவ உதவியாளர்கள் கடமையில் இருக்கின்றனர் எனக் கூறப்படுகின்றது.

பாடசாலைகளின் தரம், மாணவர்களின் எண்ணிக்கை ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு முகாமைத்துவ உதவியாளர்களை நியமிப்பது பாடசாலைகளின் நிர்வாகச் செயற்பாட்டுக்கு உதவியாக இருக்கும் என்று பெற்றோர் மற்றும் நலன்விரும்பிகள் சுட்டிக்காட்டுகின்றனர். (ஒ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராசா, கனிமொழி, பூங்கோதையை தி.மு.கவில் இருந்து தூக்கி வீசுக!

## இல்லையேல் கட்சியிலிருந்து விலகுவேன்; அழகிரி போர்க்கொடி



சென்னை, ஜன.6

ஸ்பெக்ட்ரம் விவகாரத்தில் சிக்கிய ராசாவை உடனடியாக கட்சியை விட்டு நீக்க வேண்டும். 2 ஜி ஒதுக்கீட்டில் தரகராகச் செயற்பட்ட நீரா ராடியாவுடன் பேசும்போது தன்னைப் பற்றி அவதூறான முறையில் கருத்துக்களை வெளியிட்ட கனிமொழி, பூங்கோதை ஆலடி அருணா ஆகியோர் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும். கட்சியை விட்டு அவர்களை நீக்கம் செய்ய வேண்டும்.

- இவ்வாறு தி.மு.கவின் தென்மண்டலப் பொறுப்பாளரும், மத்திய அமைச்சருமான மு.க. அழகிரி போர்க்கொடி தூக்கியுள்ளார் எனக் கூறப்படுகிறது. பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி தி. மு.கவை விட்டும், தி.மு.க. பொறுப்புகளிலிருந்தும் விலகுகிறார் எனக் கூறி முதல்வர் கருணாநிதியிடம் அழகிரி கடிதம் கொடுத்துள்ளார் எனப் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் சென்னை அண்ணா அறிவாலயத்தில் முதல்வர் கருணாநிதி தலைமையில் நடந்த உயர்மட்டக் கூட்டத்திற்கும் அவர் வரவில்லை.

இந்த நிலையில் அழகிரி தனது கடிதத்தில் பல்வேறு கோரிக்கைகளை வைத்துள்ளார் எனத் தெரிகிறது. இதை நிறைவேற்ற முடியாவிட்டால் தான் கட்சியின் அனைத்துப் பொறுப்புகளிலிருந்தும் விலகுகிறார் என அவர் கூறியுள்ளார் என்று தெரிகிறது.

* ஸ்பெக்ட்ரம் விவகாரத்தில் சிக்கிய ராசாவை உடனடியாக கட்சியை விட்டு நீக்க வேண்டும்.

* நீரா ராடியாவுடன் நடந்த தொலைபேசி உரையாடலின்போது தன்னைப் பற்றி அவதூறான முறையில் பேசிய கனிமொழி, அமைச்சர் பூங்கோதை ஆலடி அருணா ஆகியோர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். கட்சியை விட்டு அவர்களை நீக்கம் செய்ய வேண்டும்.

* சென்னையில் கனிமொழி ஏற்பாடு செய்துள்ள சென்னை சங்கமம் நிகழ்ச்சியை நடத்தக் கூடாது. அதை இரத்துச் செய்ய வேண்டும் என்பது உள்ளிட்ட கோரிக்கைகளை அழகிரி வைத்துள்ளார் எனத் தெரிகிறது.

இதுதவிர கட்சியில் மாநில அளவில் தனக்கு முக்கிய பொறுப்பு வழங்கப்பட வேண்டும் என்றும் அழகிரி கோரியுள்ளார். மேலும், கோபாலபுரம் இல்லத்தை இலவச மருத்துவ மனையாக்கும் திட்டத்திற்கும் அவர் ஆட்சேபனை தெரிவித்துள்ளார் எனவும் தகவல்கள் கூறுகின்றன.

அழகிரியின் இந்த புதிய போர்க்கொடியால் தி.மு.க. வட்டாரம் பரபரப்படைந்துள்ளது. இருப்பினும் அழகிரியின் இந்தப் போர்க்கொடி முதல்வரைக் கவலைப்படுத்தவில்லை என்று தெரிகிறது.

மாறாக, இதை அவர் தீவிரமாக எடுத்துக் கொள்ளவில்லை என்றும் கூறப்படுகிறது.

நேற்றுமுன்தினம் நடந்த தி.மு.க. உயர் மட்டத் தலைவர்கள் கூட்டத்தில் முதல்வர் கருணாநிதி பேசுகையில், எதைப் பற்றியும் யாரும் கவலைப்பட வேண்டாம். காங்கிரஸ் நம்முடன் நீடிப்பது உறுதி. அதேபோல பா.ம.கவும் நம்முடன் வரும்.

எனவே தேர்தல் பணிகளில் கவனம் செலுத்துங்கள் என்று முதல்வர் கூறியுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## தமிழக மீனவரை விரட்டியடித்து தாக்கியது இலங்கை கடற்படை

இராமேஸ்வரம், ஜன. 06

இராமேஸ்வரத்திலிருந்து பெருமளவான படகுகளில் மீனவர்கள் கடந்த திங்கட்கிழமை மீன்பிடிக்கக் கடலுக்குச் சென்றனர். இறால் மீன் பிடிப்பதற்காகக் கச்சதீவு கடல் பகுதிக்குள் செல்ல முயன்ற மீனவர்களை வழிமறித்த இலங்கைக் கடற்படையினர், இலங்கைக் கடற்பகுதிக்குள் வரக்கூடாது என எச்சரித்து விரட்டியடித்தனர்.

இதுபோல் நெடுந்தீவு, தலைமன்னார் கடல் பகுதியிலும் ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த இலங்கைக் கடற்படையினர், தமிழக மீனவர்களை மீன்பிடிக்க விடாமல் தடுத்து விரட்டினர். இலங்கைக் கடற்படையின் நடவடிக்கையால், நேற்றுமுன்தினம் கரை திரும்பிய படகுகளில் எதிர்பார்த்த அளவிற்கு மீன்பாடு இல்லை.

இதனால்பெரும்பாலான மீனவர்கள் நஷ்டத்தை சந்தித்தனர். இதனிடையே, மீன்பிடிக்கச் சென்ற இராமேஸ்வரம் மீனவர்கள் மீது, இலங்கைக் கடற்படையினர் துப்பாக்கிச் சூடு நடத்தினர் எனத் தகவல் பரவியதால் கரை திரும்பிய மீனவர்களிடம் புலனாய்வுத் துறையினர் விசாரணை செய்ததில், எந்தச் சம்பவமும் நடக்கவில்லை என மீனவர்கள் தெரிவித்தனர்.

## சபரிமலை கூட்ட நெரிசலில் சிக்கி ஒருவர் பலி; 18 பேர் காயம்

சபரிமலை, ஜன. 06

சபரிமலையில் கூட்ட நெரிசல் காரணமாக தடுப்புக்காகக் கட்டியிருந்த கயிறு அறுந்து விழுந்ததில் நிலைதடுமாறிய பக்தர்கள் ஒருவர் மீது ஒருவர் விழுந்ததில் பக்தர் ஒருவர் பலியானார். மேலும் 18 பக்தர்கள் படுகாயமடைந்தனர். இவர்களில் ஒருவரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது.

இந்தச் சம்பவம் குறித்து சன்னிதானம் பொலிஸார் வழக்குப் பதிவு செய்து மேலும் விசாரணை நடத்தி வருகிறார்கள்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும்

### நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

புங்குடுதீவு, 7ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் நல்லூரைத் தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட

**வேலுப்பிள்ளை சுப்பிரமணியம் (கண்ணையா)**

**(ஓய்வுபெற்ற புங்குடுதீவு, ஊரதீவு உப தபாலதிபர்)**



*மாதம் ஒன்று போனதோ அப்பா!*
*ஆறவில்லை எம் இதயம்*
*இன்றுவரை நம்பவில்லை - நீர்*
*இறைபதம் சேர்ந்தீரென்று.*

உங்கள் ஆன்மா இறைவனடியில் இளைப்பாறி சாந்திபெற அனைவரும் பிரார்த்திக்கின்றோம். கடந்த (07.12.2010) செவ்வாய்க்கிழமை அன்று சிவபதமடைந்த எங்கள் அன்புத் தெய்வத்தின் இறுதிக் கிரியைகளில் கலந்துகொண்டு பலவழிகளிலும் உதவி புரிந்தோருக்கும், அனுதாபச் செய்திகள் மூலம் ஆறுதல் கூறிய உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதுடன் இன்று (06.01.2011) வியாழக்கிழமை நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*131/1A, பருத்தித்துறை வீதி,*
*நல்லூர்,*
*யாழ்ப்பாணம்.*

**மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

(108530)

## மரண அறிவித்தல்கள்

### *திருமதி குலேந்திரன் பத்மாதேவி*



கைதடியைப் பிறப்பிடமாகவும் சரசாலையை வதிவிடமாகவும் கொண்ட திருமதி குலேந்திரன் பத்மாதேவி நேற்று (05.01.2011) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னப்பா - பராசக்தி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற மாணிக்கவாசகர் - சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகளும் குலேந்திரனின் (இலங்கை மின்சார சபை) அன்பு மனைவியும் யுகந்தன், சயந்தன் (பொறியியல்துறை மாணவன்), தர்சிகா (வர்த்தகப்பிரிவு மாணவி) ஆகியோரின் பாசமிகு தாயும் யோகானந்ததேவி, சந்திரகுமாரன் (சவுதி அரேபியா), செல்வராணி, சந்திரா (ஆசிரியை) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஜெயரட்ணம், இராமச்சந்திரன், அமிர்தலிங்கம், புவனேந்திரன், தெய்வேந்திரன், வினோதா, அருந்ததி, சறோயினி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.01.2011) வியாழக்கிழமை ஒரு மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் வேம்பிராய் இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*'திருத்தணி',*
*சரசாலை மத்தி,*
*சாவகச்சேரி.*

*தகவல் :*
**குலேந்திரன்** *(இ.மி.ச),*
**யுகந்தன்** *(மகன்) 0213209591*

(108531)

### *விஸ்வலிங்கம் தாமோதரம்பிள்ளை*



அத்தியடி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் உடுவில் றோட், மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட விஸ்வலிங்கம் தாமோதரம்பிள்ளை (05.01.2011) புதன்கிழமை காலமானார்.

அன்னார் மனோன்மணியின் அன்புக் கணவரும் தேவமனோகரி (லண்டன்), பிராபாமினி, அனுராதா, காலஞ்சென்ற தயாபரன் மற்றும் சௌதாமினி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் திருநாவுக்கரசு, சிவஞ்ஞானம், நடராசா ஆகியோரின் சகோதரனும் சப்திகா, சுவேத்தா, அபினயா, அனுஸந்தன், சதா கோமகன், யோசுவா, ஜஸ்மின் ஆகியோரின் தாத்தாவும் மதனமோகன், ஜெயக்குமார், விஜேந்திரன், சத்தியநாதன் ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (06.01.2011) வியாழக்கிழமை மு.ப. 11.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மானிப்பாய் பிப்பிலி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**J.ஜெயக்குமார்**
சரஸ்தான் உடுவில் வீதி,
மானிப்பாய்.
T.P.: 0779153166
0773265110

தகவல்:
**மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

## மரண அறிவித்தல்

### *திருமதி சண்முகம் சரஸ்வதி*



காரைநகர், களபூமி, பொன்னாவளையைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி சண்முகம் சரஸ்வதி நேற்றுமுன்தினம் (04.01.2011) செவ்வாய்க்கிழமை இறைபதம் எய்திவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை சண்முகத்தின் (இளைப்பாறிய அதிபர், முன்னாள் தலைவர், காரைநகர் தெற்கு, கிராம சபை) அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம் (முன்னாள் நிர்வாக அதிகாரி, வன இலாகா) - பொன்னம்மா தம்பதியரின் மகளும் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - கதிராசிப்பிள்ளை தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் (முன்னாள் வன இலாகா), பரராஜசிங்கம், நாகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான சென்னப்பட்டினம் கந்தையா (மலேசியன் பெஞ்சனியர்), இராமுப்பிள்ளை, அபிராமிப்பிள்ளை ஆகியோரின் மைத்துனியும் காலஞ்சென்ற மங்கையர்க்கரசி மற்றும் நித்தியானந்தன் (நெடுங்கேணி), பத்மாசினி, சறோஜினி, பாலசுப்பிரமணியம் (லண்டன்), புஸ்பராணி ஆகியோரின் அன்புத் தாயும் கந்தசாமி (முன்னாள் பணிப்பாளர், நீர்ப்பாசனத் திணைக்களம், வ.கி.மாகாணம்), தெய்வானை (நெடுங்கேணி), பாலசிங்கம் (முன்னாள் நிர்வாக உத்தியோகத்தர், நீர்ப்பாசனத் திணைக்களம்), சிவஞானம் (வர்த்தகர்), சுசித்திரா (வவுனியா), சதாசிவம் (இளைப்பாறிய அதிபர்) ஆகியோரின் அன்பு மாமியும் திருமகள், Dr.நல்லைநாதன் (சிரேஷ்ட விரிவுரையாளர், Kings College, London), தவராசா, குலதேவி (B.Com.), சிற்சபேசன் (பொறியியலாளர்), ஜெனனி, கிஸ்ணஜெயந்தி, ஈஸ்வரன், முரளீஸ்வரன், திருமகள், ஞானப்பிரகாசம் (உரிமையாளர், ஞானம் ஸ்ரோர்ஸ், நெடுங்கேணி), திருமலர், கங்கேஸ்வரன், இராஜசிங்கம் (Peace Project), சித்திரா (ஆசிரியை, மறவன்குளம், பாரதிதாசன் வித்தியாலயம்), ஜெயரூபன், நிரேகா, சுபாஜினி, பவானி, சிவபாதசுந்தரம் (உரிமையாளர், ராஜகுலம் ரேடர்ஸ், வவுனியா), ரவீந்திரன், விமலாதேவி, திருலோகேஸ்வரன் B.Com (Peace Project), சர்வேஸ்வரன் (Re-Awakening Project), கௌரிதேவி, ஆனந்தராசா (உரிமையாளர், அம்பிகா ரெக்ஸ், செங்கலடி), மதிவதனி, தவரூபன் (S.R டெக்ஸ், கொழும்பு), வத்சலா, சிவகாந்தன், றம்மியகலா, தினேஸ்சங்கர் (பொலிஸ் பயிற்சிக் கல்லூரி, களுத்துறை), சுலோஜனா (B.B.A Perdeniya University), ராஜ்குமார், குகநேசன், சுதாஜினி, தர்மினி, அம்பிகைபாகன் (உரிமையாளர், உமா ஸ்ரோர்ஸ், வவுனியா), மோகனதாஸ், மயூரன், நர்த்தனன் (2nd officer Anglo Asian Shipping Company), கஜன், (Kingston University), சாமினி (I.C.T வவுனியா, பல்கலைக்கழகம்), ஆகியோரின் பேர்த்தியும் ஜெனகன், ஆரூரன், ஐங்கரன், லக்சிபிரதா, கார்த்திகேயன், ஸ்ரீபூர்ணா, சாருஜன், மதுசன், பிரியங்கா, ரகுவரன், கோபிகா, பிரவினன், நிபீசனன், கோபிசன், விபிசா, மானசி, பிரவீன் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.01.2011) வியாழக்கிழமை இல. 21, முதலாம் ஒழுங்கை, குருமன்காடு, வவுனியாவில் முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைக்காக பூதவுடல் தச்சனாமருதங்குளம் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல : 21,*
*குருமன்காடு,*
*வவுனியா.*

*தகவல் :*
**மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

(வி/574417)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# குடாநாட்டின் உடனடித் தேவை அப்பழுக்கில்லாத தடுப்பு நடவடிக்கை

யாழ்ப்பாணக் குடாநாட்டில் வாழும் மக்களைப் பெரும் அச்சத்திலும் சோகத்திலும் மூழ்கடித்துள்ள கொலைகள், கொள்ளைகள், ஆள் கடத்தல்கள் குறித்து, தமிழ்த் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்றத்தில் கொண்டு வந்த கவனயீர்ப்புப் பிரேரணை நேற்று விவாதிக்கப்பட்டது.

யாழ்.மக்களை, அவர்களின் ஆன்மாவையே உறையவைத்துள்ள பயங்கர நிலையை நேரில் கண்டறிய நாடாளுமன்றின் அனைத்துக் கட்சிக் குழு ஒன்றை நியமித்து அங்கு அனுப்ப வேண்டும் என்று எதிர்க் கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்க நேற்று முன்தினம் சபையில் சபாநாயகரிடம் கோரிக்கை ஒன்றை முன்வைத்தார்.

மனித வாழ்வுக்கு ஊறு செய்யும், கேடு விளைவிக்கும் கொடூரமான வன்செயல்கள் வடக்கில் தலைவிரித்தாடுவதால், அரசாங்கத்துக்குச் சர்வதேச மட்டத்தில் பின்னடைவு ஏற்பட்டுவிட்டதாக ஜாதிக விமுக்தி பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் இராமலிங்கம் சந்திரசேகரன் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

யாழ்ப்பாண மக்கள் மீண்டும் அச்சம் தரும் சூழலுக்குள் வாழ்வதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளார்கள் என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சபையில் எடுத்துக் கூறியுள்ளார்.

குடா நாட்டில் இனி யுத்தம் இல்லை, இரத்தம் சிந்தும் நிலையும் இல்லை என்ற நம்பிக்கையோடு காத்திருந்த எமது மக்களின் நம்பிக்கைகளைச் சிதைக்கும் வகையிலான சம்பவங்கள் அரங்கேறி வருகின்றன என்றும் அவர் கவலை வெளியிட்டிருந்தார்.

யாழ்ப்பாணக் குடாநாட்டில், உயிரைக் கையில் பிடித்தவாறு, எப்போது கொலைகாரன் வருவான், கொள்ளையன் வருவான், கொள்ளை என்ற நாடகத்துடன் எந்தக் கொலைகாரன் வருவான் என்று பீதியில் உறைந்தவாறே குடாநாட்டு மக்கள் இரவைக் கழிக்கும் பயங்கர நிலை மட்டுமன்றி-

பகலில் வீட்டை விட்டு அவசர வேலையாக வெளியே, மோட்டார் சைக்கிள், துவிச்சக்கர வண்டி, ஓட்டோ ஆகிய எந்த வாகனத்தில் சென்றாலும், பெண்களோ, ஆண்களோ நகை அணிந்து சென்றாலும் கொள்ளையர்கள், கடத்தல்காரர்கள் எங்கு வைத்து மறிப்பார்கள், கொள்ளையடிப்பார்கள் என்ற மன ஏக்கத்துடனும், அச்ச உணர்வுடனுமே புறப்பட வேண்டிய நிலையுமே -

இப்பிரதேச மக்களின் இன்றய நிலையாகிவிட்டது. கொள்ளை, கடத்தல், மரண பயங்கள் நிறைந்த அன்றாட வாழ்க்கையாகிவிட்டது அவர்களுக்கு...!

போர் முடிந்துவிட்டது, மேற்காட்டிய வன்முறைகள் குறித்த பீதி எதுவுமின்றி வாழலாம் என்ற குடாநாட்டு மக்களின் எதிர்பார்ப்பு கண்ணில் நெருப்பு வீழ்ந்தது போலாயிற்று. நாளின் இருபத்திநான்கு மணித்தியாலங்களும் ஏக்கம் நிறைந்த, சஞ்சலம் கனத்த, கணத்துக்குக் கணம், வினாடிக்கு வினாடி, மனம் துடித்துத் துடித்து மரண பயத்தோடு வாழும் நிலை அவர்களுக்கு.

சங்கானையின் இலுப்பைத் தாழ்வுப் பகுதியில் கடந்த 24 நாள்களுக்கு முன்னர் வெடித்த பயங்கரம், வன்முறைகள் கடந்த மாதம் 31ஆம் நாள்வரை தொடர்ந்து கொண்டிருந்தன. இந்த ஆபத்தான நிலை எப்போது தீரும் என்ற ஏக்கத்துடனேயே குடா நாட்டு மக்கள் அனைவரினதும் காலங்கள் மறைகின்றன. இந்தக் குறுகிய காலப்பகுதியில் நான்கு கொலைகளும், பத்துக்கும் மேற்பட்ட கொள்ளைகளும், கடத்தல்களும் நடத்தப்பட்டு விட்டன.

ஆனால், குடாநாட்டின் பாதுகாப்புக்கும், சட்டம் ஒழுங்குக்கும் காவலான, பொறுப்பான பிரிவுகளால் மக்களுக்கு ஏற்பட்டுள்ள படு பயங்கரமான நிலையில் இருந்து அவர்களை மீட்க முடியவில்லை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் கவனயீர்ப்புப் பிரேரணை, நாடாளுமன்ற சர்வ கட்சிக் குழுவின் குடாநாட்டு விஜயம் என்பன வரவேற்கப்பட வேண்டியவைதான். அவற்றின் மூலம் குடாநாட்டு மக்களை உறைய வைத்துள்ள இந்தச் சம்பவங்களைத் தடுப்பதற்கு உகந்த, உரிய நடவடிக்கையை உடனடியாக மேற்கொள்வதற்கு அரசு காத்திரமான பொறிமுறை ஒன்றை வகுக்க வேண்டும். கதை சொல்லிக் காலத்தை வாங்கும் விடயம் அல்ல இது. மனித உயிர்களோடு, மக்களின் உயிர் வாழ்தலுடன் சம்பந்தப்பட்ட பிரச்சினை என்பதனை மனதிலிருத்திச் செயலாற்ற வேண்டிய வேளை இது.

தமிழ் மக்களின் ஏனைய விவகாரங்களைப் போன்று, உலகத்துக்கு ஒப்புக்காகக் கையாண்டு கைகழுவி விடும் உத்தியை மாற்றி, மறந்து, பொறுப்பு உணர்வுடன் வன்முறைகளை உரிய முறையில், உள்நோக்கக் கலப்பின்றி, மேலெழுந்தவாறான போக்கின்றி, இலக்கை அடையும் தன்மையும் இயல்பும் இது விடயத்தில் அவசரமும், அவசியமும் ஆகும். அரசு, தமிழ் மக்களைத் தனது பிரஜைகள் என்று கருதுகிறதா, இல்லையா என்பதனை அதன் விரைந்த நடவடிக்கையே வெளிப்படுத்தவேண்டும்; நிரூபிக்கவேண்டும். குடாநாட்டு மக்களின் உடனடித் தேவை அதுவே.

# இடம்பெயர்ந்த சிறுவர்களைப் பராமரிக்க யாழ்ப்பாணத்திலும் ஒரு சிறுவர் கிராமம்

## 'சொஸ்' நிறுவனம் ஆரம்பிக்கத் திட்டம்

கொழும்பு,ஜன.6

இடம்பெயர் கிராமங்களைச் சேர்ந்த பெற்றோரை இழந்த அநாதைச் சிறுவர், சிறுமிகளைப் பராமரிப்பதற்கான கிராமம் ஒன்றை யாழ்ப்பாணத்தில் நிறுவுவதற்கு இலங்கை 'சொஸ்' நிறுவனம் (SOS) முடிவு செய்திருப்பதாக அதன் தலைவர் ஹெல்மற் குட்டின் தெரிவித்துள்ளார்.

சொஸ் கின்டர் டொர்ப் இன்ரநஷனல் நிறுவனத்தின் தலைவர் ஹெல்மற் குட்டின் பத்திரிகையாளர் சந்திப்பொன்றில் இத்தகவலை தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட விருக்கும் சிறுவர் கிராமத்தின் கட்டுமான பணிகளை இந்த வருடத்தில் ஆரம்பிக்கவிருப்பதாக அவர் தெரிவித்தார். இலங்கையில் 'சொஸ்' நிறுவனம் ஆரம்பிக்கும் ஆறாவது சிறுவர் கிராமமாக இது இருக்கும்.

பிலியந்தலை, மொனராகலை, காலி, நுவரெலியா மற்றும் அநுராதபுரம் ஆகிய இடங்களில் சொஸ் சிறுவர் கிராமங்கள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்றார் அவர்.

### 80 பிள்ளைகள் தெரிவு

சொஸ் நிறுவனத்தின் தேசிய பணிப்பாளர் ஆனந்த கருணாரட்னவும் பத்திரிகையாளர் மத்தியில் பேசினார். அவர் கூறுகையில், யாழ்ப்பாணத்தில் நிறுவப்படவிருக் கும் சொஸ் சிறுவர் கிராமத்தில் சேர்த்துக் கொள்ளவென இடம்பெயர் முகாம்களிலிருந்து சுமார் 80 பிள்ளைகள் தெரிவு செய்யப்பட்டிருக்கிறார்கள். இவர்களில் பெரும்பாலான பிள்ளைகள் இன மோதல்கள் காரணமாக தமது பெற்றோர் இருவரையும் இழந்தவர்கள்.

மேலும் இவர்களில் அதிகமானவர்கள் சிறுமிகள். அவர்களை எங்கள் பராமரிப்பில் நாங்கள் எடுத்துக் கொண்டுவிட்டோம். தற்போது இவர்கள் பல பராமரிப்பாளர்களின் ஆதரவில் இருந்து வருகின்றனர் - என்றார்.

இந்தச் சிறுமிகளின் பராமரிப்பை சிறப்பாக மேற்கொள்வதற்காக அதிக நன்கொடைகள் தேவைப்படு வதாகவும் கருணாரட்ன தெரிவித்தார்.

எமது வருடாந்த வரவு செலவுக்கு சுமார் 6 அல்லது 7 வீதம் நன்கொடைகளே கிடைக்கின்றது. எமது பணிகளைத் தொடர்வதற்கு மேலும் நன்கொடைகளை பொது மக்களிடம் இருந்து எதிர்பாக்கின்றோம் - என்று அவர் தெரிவித்தார். (ப)

# சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாடு கோலாகலமாக இன்று ஆரம்பமாகிறது

யாழ்ப்பாணம், ஜன. 06

சர்வதேச தமிழ் எழுத்தாளர் ஒன்றியம் நடத்தும் ''சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாடு - 2011'' இன்று வியாழக்கிழமை கோலாகலமாக ஆரம்பமாகிறது.

மூன்று தினங்கள் தொடர்ச்சியாக இடம்பெறவுள்ள இந்த நிகழ்வு கொழும்பு தமிழ்ச்சங்க மண்டபத்தின் பல்வேறு அரங்குகளில் நடைபெறும்.

இதன் தொடக்க விழா நிகழ்வு தமிழ்த் தூது தனிநாயகம் அடிகளார் அரங்கில் காலை 8.30 மணி முதல் பிற்பகல் 2 மணிவரை இடம்பெறவுள்ளது.

பேராசிரியர் சபா. ஜெயராசா தலைமையில் இடம்பெறும் இந்த தொடக்க விழா நிகழ்வில் பேராசிரியர் கா.சிவத்தம்பி வாழ்த்துரையையும் டாக்டர் ஜின்னாஹ் ஷரிபுத்தீன் மாநாட்டு மலருக்கான அறிமுகவுரையையும் கம்பவாரிதி இ. ஜெயராஜ் மலர் வெளியீட்டு உரையையும் நிகழ்த்தவுள்ளனர்.

இதைவேளை, முதல் நாள் அரங்கு - நிகழ்வு ஒன்று மாலை 5 மணி முதல் இரவு 8.30 மணிவரை எஸ்.டி. சிவநாயகம் அரங்கில் இடம்பெறவுள்ளது. ''கணினியும் வலைப்பதிவுகளும்'' எனும் தலைப்பில் ஆய்வுரைகள் இடம்பெறவுள்ளன.

இந்தியா இணைப் பேராசிரியை மு.சு.தங்கம், டாக்டர் எம்.கே. முருகானந்தன் ஆகியோரின் இணைத்தலைமையில் இடம்பெறும் இதில் கணினிப் பொறியியலாளர் ஜெ.சர்வேஸ்வரன், செல்வி சபீனா தயானி தயானந்தன், மு.மயூரன், கணினி விரிவுரையாளர் ஞா.பாலச்சந்திரன் ஆகியோர் ஆய்வுரைகளை சமர்பிக்கவுள்ளனர்.

இரண்டாம் நாள் நிகழ்வு நாளை வெள்ளிக்கிழமை ஐந்து அரங்குகளில் இடம்பெறவுள்ளது. அதில் 'ஈழத்துத் தமிழ் இலக்கியம்-1, பெண் எழுத்து, சிறுவர் இலக்கியம், உலகத் தமிழ் இலக்கியம், பல்துறை- 1ஆகிய தலைப்புகளில் ஆய்வுரைகள் சமர்பிக்கப்படவுள்ளன. (ம-14)

# மீசாலையில் மோ.சைக்கிள் விபத்தில் ப.நோ.கூ. சங்கப் பணியாளர் பலி!

சாவகச்சேரி,ஜன.6

சாவகச்சேரி ப.நோ. கூ. சங்கத்தின் பணியாளர் ஒருவர் நேற்று மீசாலையில் ஏ9 வீதியில் இடம்பெற்ற விபத்தில் பலியானார்.

சாவகச்சேரி, தாமோதரம்பிள்ளை வீதியைச் சேர்ந்தவரான நா.சண்முகநாதன் (56வயது) என்ற இவர் மோட்டார் சைக்கிளில் சென்ற சமயம் மற்றொரு மோட்டார் சைக்கிளுடன் மோதி விபத்துக்குள்ளாகி அந்த இடத்திலேயே மரணமானார் எனத் தெரிவிக்கப்பட்டது.

சாவகச்சேரி ப.நோ.கூ. சங்கத்தில் மட்டுவில் மெய்கண்டான் 'கோப் சிற்றி' கிளை 11 இன் முகாமையாளராக இவர் பணி புரிந்து வந்தார். இவரது சடலம் மரண விசாரணைக்காக நேற்று சாவகச்சேரி ஆஸ்பத்திரி பிரேத அறையில் வைக்கப்பட்டிருந்தது. (ஒ-131)

# அடிப்படை வசதிகளை ஏற்படுத்துமாறு வலி.வடக்கு மக்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம் ஜன. 6

மீள்குடியமர்த்தப்பட்ட எமக்கு அடிப்படை வசதிகள் உட்பட அனைத்து வசதி வாய்ப்புக்களையும் ஏற்படுத்தித் தரவேண்டும்.

இவ்வாறு வலி.வடக்கில் மீள் குடியமர்த்தப்பட்ட வித்தகபுரம், இளவாலை வடக்கு, இளவாலை வடமேற்கு ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்கள் அரச அதிபர் உள்ளிட்ட குழுவினரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

யாழ்.மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார், வலி.வடக்குப் பிரதேச செயலர் எஸ்.முரளிதரன், வடக்கின் துரித மீள் எழுச்சித் திட்டப் பணிப்பாளர் எஸ்.குகதாசன் உள்ளிட்ட குழுவினர் கடந்த சனிக்கிழமை அங்குள்ள மக்களை நேரில் சந்தித்துக் கலந்துரையாடினர்.

இதன் போது அங்குள்ள மக்கள் தமது பகுதிகளில் உள்ள வீதிகளைப் புனரமைத்துத் தருமாறும் வீடுகள் அமைத்துத் தருமாறும் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்தனர்.

மக்களின் குறைகளைக் கேட்டறிந்த இந்தக் குழுவினர் அதனை விரைவில் நிவர்த்தி செய்து தருவதாக உறுதியளித்தனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ம-9-14)

## நாளை

மார்கழி 23 07.01.2011
வெள்ளிக்கிழமை
திதி: : திருதியை
மாலை 06.21 வரை
நட்சத்திரம் : திருவோணம்
காலை 7.40 வ்ரை
சுபநேரம் : 08.32-09.32 வரை
ராகுகாலம் : 11.02-12.32 வரை

# தெய்வீகம் உணர்த்தும் உண்மை

இந்த எண்ணத்தை உங்கள் மனதில் வைத்துக் கொள்ளுங்கள். நான் ஒரு சாதாரண மனிதன் அல்ல. நான் தெய்வீகத்தின் திருஉருவமாகும். இந்தத் திடமான உறுதியை உங்கள் மனதில் நிலைநிறுத்திக் கொள்ளுங்கள். உங்களால் உண்மையை உணரமுடியும். பிரம்மவித் பிரம்மைவ பவதி. உன்னை பிரம்மமாக நினைத்துக் கொண்டால் நீ பிரம்மமாகவே ஆகின்றாய். உன்னை நீ மனிதன் மட்டுமே என்று நினைத்தால் மனித ஜந்துவாகவே இருந்து கொள்வாய். மனித உருவில் நீ இருந்தாலும் ஆத்ம தத்துவம் உன்னில் உள்ளது.

உங்கள் தெரிவான தெய்வீக உருவில் நிலை நின்று அதை சரியாகப் பற்றிக் கொள்ளுங்கள். அதுதான் உண்மையான பக்தி. பல விதமான இடங்களுக்கு தேவையில்லாமல் போய்க் கொண்டிருக்காதீர்கள். இது உங்கள் பக்தியை அழித்துவிடும். வளரும் ஒரு சிறு செடியை இடம் மாற்றிக் கொண்டிருக்காதீர்கள். அது எப்படி ஒரு நல்ல பலமான மரமாக முடியும். உங்கள் தெய்வீக வழிகாட்டிகளை அடிக்கடி மாற்றிக் கொண்டீர்களானால் அந்த பக்தி ஒரு கலப்படமாகி விடும். அப்படியான ஒரு வழிக்குப் போகாதீர்கள்.



கடவுள் எல்லோரிடமும் எங்கும் உறைவதாக விசுவசியுங்கள். ஒரு கடவுளிலிருந்து இன்னொரு கடவுளுக்கு மாறிக் கொண்டிருந்தால் அது ஒரு பிழையான பக்தி. உங்களுடைய விசுவாசத்தை மாற்றிக் கொள்ளக்கூடாது.

நன்றி : சாயி அருளமுதம்

சாயி சிந்தனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடற்றொழிற் திணைக்களத்துக்கு புதிய உதவிப் பணிப்பாளர்

யாழ்ப்பாணம், ஜன.6

யாழ். மாவட்டம் கடற்றொழில் நீரியல் வளத் திணைக்கள உதவிப் பணிப்பாளராக ஆர்.ரவீந்திரன் நியமிக்கப்பட்டுள்ளார். கடந்த 15 வருடங்களாக கடற்றொழிற் பரிசோதகராக இவர் திணைக்களத்தில் பணியாற்றியவராவார்.

உதவிப் பணிப்பாளராக இதுவரையும் பணியாற்றி வந்த கே. தர்மலிங்கம் கடந்த டிசெம்பர் மாதம் 31ஆம் திகதியுடன் ஓய்வு பெற்றுள்ளதை அடுத்தே அவரது பதவிக்கு புதிய நியமனம் வழங்கப்பட்டுள்ளது. உதவிப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ள ஆர்.ரவீந்திரன் கடந்த திங்கட்கிழமை தொடக்கம் தனது பணிகளை உத்தியோக பூர்வமாக ஆரம்பித்தார். (ம-14)

## கலந்துரையாடல்

வலி. வடக்கு கருகம்பனை கிராமத்தைச் சேர்ந்த மக்களுக்கான கலந்துரையாடல் எதிர் வரும் 9ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10 மணிக்கு நகுலேஸ்வர வீதியில் அமைந்துள்ள சன சமூக நிலையத்தில் நடைபெறவுள்ளது.

## உறுப்பினர் தெரிவுக்கு பொதுக் கூட்டம்

தென்மராட்சி, ஜன.6

சாவகச்சேரி பனை தென்னை வள கூட்டுறவு அபிவிருத்திச் சங்கத்தின் கிளைக் குழுக்களுக்கு உறுப்பினர்களைத் தெரிவுசெய்வதற்கான பொதுக் கூட்டம் எதிர்வரும் 9ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு அந்தந்த இடங்களில் நடைபெறும். சங்கத்தின் 15 கிளைகளுக்கு உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (ம-207)


## பாராட்டி வாழ்த்துகிறோம்



வசந்தகான சபா, பாரம்பரிய இசைநாடகக் கலைஞர் V.T. செல்வராஜா அவர்கள் 2010 உயர் அரச விருதாகிய 'கலாபூஷணம்' விருது பெற்றதற்காக மனமுவந்து பாராட்டுவதோடு அவருடைய கலைச் சேவை மேலும் தொடரவும் அவர் பல்லாண்டு காலம் வாழவும் வாழ்த்துகின்றோம்.

22, கண்டி வீதி,
அரியாலை.

(108473)

பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## கணினி உத்தியோகத்தர்/ ஆசிரியர்கள் தேவை

பிரபல தனியார் நிறுவனம் ஒன்றுக்கு மானிப்பாய், நல்லூரில் கடமையாற்றக்கூடிய சிறந்த கணினி அறிவுள்ள, ஆங்கிலத்தில் தேர்ச்சி பெற்ற கணினி உத்தியோகத்தர், மற்றும் நீர்வேலி, அச்சுவேலி ஆகிய பகுதிகளில் சேவையாற்றக்கூடிய ஆங்கில அறிவுடைய ஆசிரியர்கள் தேவை.

நாளை (07.01.2011) வெள்ளிக்கிழமை காலை 9.00 மணிக்கு நேரில் வரவும்.



T.P: 021 222 5796
No.140, Temple Road,
Jaffna.

(சி/574341)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

உடுவில் இந்து இளைஞர் மன்றத்தின் ஆதரவில் இயங்கிவரும் முன்பள்ளிகளில் ஆரம்பக்கல்வியை பெற்று 2010 ஆம் ஆண்டு தரம் 5 புலமைப்பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் இம்மன்றத்தினால் 19.12.2010ஆம் நாள் நடத்தப்பட்ட நாவலர் விழாவில் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்கள்.



### பாராட்டுப்பெற்றவர்கள்: இடமிருந்து வலம்

- ★ மகேந்திரன் ஜந்துரன் (162)
- ★ விமலேந்திரன் பிரவாகரன் (153)
- ★ வசுதரன் கிதுர்சன் (143)
- ★ அருந்தவராஜா யதுரசன் (156)
- ★ கருணாகரன் தினுசா (163)
- ★ சிவானந்தன் தர்சிகா (172)
- ★ மகேந்திரராஜா திவ்வியா (153)



இம்மாணவர்கள் மேன்மேலும் பல சித்திகளை அடைந்து கல்வியில் மிளிர வேண்டும் என வாழ்த்தி இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

(108504)

பெற்றோர், பழையமாணவர்கள்.


# VACANCIES

## UNIVERSITY OF JAFFNA, SRILANKA

University of Jaffna will entertain applications from qualified persons for the undermentioned posts.

### FACULTY OF MANAGEMENT STUDIES & COMMERCE

Senior Lecturer Grade I/ Senior Lecturer Grade II/ Lecturer (Probationary) in Accounting

**Closing date - 23.02.2011**

### PHYSICAL EDUCATION UNIT

Visiting Instructor In **Karate**.

**Closing date - 21.01.2011**

### SALARY AND OTHER BENEFITS

| Post | Salaty scale |
|---|---|
| Senior Lecturer Grade ,I | Rs.42,650 - 7x800 - 48,250/-p.m. |
| Senior Lecturer Grade II | Rs.37.650 - 11x700 - 45,350/-p.m |
| Lecturer (Probationary) | Rs.26,900 - 10x585 - 32.750/-p.m |
| Visiting Instructor | RS.250/- per hour |

**Note**

In addition to the above salary, the following allowances will also be paid (for permanent academic posts):

I. An academic allowance equivalent to 25% of the basic salary
ii. Cost of living allowance of Rs.5,250/-p.m.

**Statutory benefits:**

(i) Sabbatical leave entitlement for the holder of the Post of Senior Lecturer Gr .II and above.
(ii) Membership in Universities Provident Fund and Pension Scheme in the University system.
(iii) Gratuity payments
(iv) Employees' Trust Fund benefits.
(v) Free Medical Services.

Applications for the above posts shall be sent to the Senior Assistant Registrar/ Academic Establishments, University of Jaffna.

Application forms and scheme of recruitment for each position may be obtained from the office of the Senior AssistanT Registrarl Academic Establishments, University of Jaffna. Sri-Lanka, either in person or by post, on a payment of Rs.100/- per application form at People's Bank, University Branch or at the shroff's counter of the University of Jaffna.

Those who wish to obtain application forms by post are requested, to send a Money Order/Postal Order drawn in favour of the Bursar, University of Jaffna together with a self -addressed stamped envelope 23x10 cm. in size.

Applic ation forms and other details will also be available in the University website **www.jfn.ac.lk**. Those who wish to send the downloading application forms through the University website should be attached a Money Order/Postal Order drawn in favour of the **Bursar, University of J affna.**

Those who wish to apply for more than one post should apply in **separate forms.**

Applicants from the University System/Government Departments /Corporations and Statutory Board should channel their applications through the Head of respective Institutions. Illegible, incomplete and late applications will be rejected without intimation. Only short listed applicants will be called for an interview.

**REGISTRAR,**
**UNIVERSITY OF J AFFNA,**
**SRI LANKA.**
**05.01.2011**

(c.574404)


මහජන සම්පත
மஹஜன சம்பத
Mahajana Sampatha

04.01.2011

அலுவலக முடிவுகள்

சீட்டிழுப்பு இல. 2340

வெற்றி எழுத்து: K
வெற்றி எண்கள்: 0 9 0 3 4 2

வலமிருந்து இடமாக பரிசு அமைப்பு

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| சுப்பர் பரிசு | K | 0 | 9 | 0 | 3 | 4 | 2 | ரூபா.14,483,642/= | பரிசு - |
| 1 பரிசுகள் | | 0 | 9 | 0 | 3 | 4 | 2 | ரூபா. 2,000,000/= | பரிசுகள் 02 |
| 2 பரிசுகள் | | | 9 | 0 | 3 | 4 | 2 | ரூபா. 100,000/= | பரிசுகள் 13 |
| 3 பரிசுகள் | | | | 0 | 3 | 4 | 2 | ரூபா. 10,000/= | பரிசுகள் 137 |
| 4 பரிசுகள் | | | | | 3 | 4 | 2 | ரூபா. 1,000/= | பரிசுகள் 1391 |
| 5 பரிசுகள் | | | | | | 4 | 2 | ரூபா. 100/= | பரிசுகள் 13650 |
| 6 பரிசுகள் | | | | | | | 2 | ரூபா. 20/= | பரிசுகள் 135396 |

இடமிருந்து வலமாக பரிசு அமைப்பு

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 7 பரிசுகள் | | 0 | 9 | 0 | 3 | 4 | | ரூபா. 10,000/= | பரிசுகள் 11 |
| 8 பரிசுகள் | | 0 | 9 | 0 | 3 | | | ரூபா. 1,000/= | பரிசுகள் 139 |
| 9 பரிசுகள் | | 0 | 9 | 0 | | | | ரூபா. 100/= | பரிசுகள் 1376 |
| 10 பரிசுகள் | | 0 | 9 | | | | | ரூபா. 50/= | பரிசுகள் 13555 |
| 11 பரிசுகள் | K | | | | | | | ரூபா. 20/= | பரிசுகள் 54151 |

இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை Rs. 14,281,290.00

அடுத்த சீட்டிழுப்பிகான சுப்பர் பரிசு Rs. 14,789,723.00

ஐந்து இலட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட பரிசுத்தொகை அரசாங்க வரி சட்டதிட்டங்களுக்கு உட்படும் பரிசுத்தொகையைப் பெற்றுக்கொள்ள தேசிய அடையாள அட்டை சமர்ப்பிக்கப்பட வேண்டும். வெற்றி பெற்ற டிக்கட், சீட்டிழுப்பு இடம்பெற்ற தினத்தில் இருந்து ஆறு மாதங்களுக்கு மட்டுமே செல்லுபடியாகும்.

மக்களின் செழிப்பு நாட்டின் செழிப்பு
தேசிய லொத்தர் சபை
234/2 காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி 2470662, 4607000, Hotline: 2433631 மின்னஞ்சல் www.nlb.lk


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வட மாகாண கல்வித் திணைக்களத்தின் பாடசாலை வெளிவாரி மதிப்பீடுகள் ஆரம்பம்



யாழ்ப்பாணம், ஜன 6

யாழ். மாவட்டப் பாடசாலைகளின் வெளிவாரி மதிப்பீடுகள், திருநெல்வேலி முத்துக்தம்பி மகாவித்தியாலயத்தில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது. வட மாகாணக் கல்வித் திணைக்களத்திலிருந்து மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளர் மு.ராதாகிருஷ்ணன் தலைமையிலான குழுவினரே இந்தத் திடீர் நடவடிக்கையினை மேற்கொண்டுள்ளனர்.

வடமாகாணத்தில் வாரம் இரண்டு பாடசாலைகள் மாகாணக் கல்வித் திணைக்களத்தினால் வெளிவாரி மதிப்பீடுகள் மேற்கொள்ளப்படவுள்ளதாக வடமாகாண கல்விப்பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

வடமாகாண பாடசாலைகளில் கடந்த ஆண்டு வெளிவாரி மதிப்பீட்டுப்பணிகள் மேற்கொள்ளப்படவில்லை. இருப்பினும் இந்த வருடம் முதல் வாரம் இரு பாடசாலைகள் என்ற வீதத்தில் வெளிவாரி மதிப்பீடுகள் கல்வித் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படும்.

இதேவேளை, முத்துதம்பி மகாவித்தியாலயத்தின் நிர்வாக செயற்பாடுகள் மற்றும் கல்வி நடவடிக்கைகள் என்பன மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளர் மு.ராதாகிருஷ்ணன் தலைமையிலான குழுவினரால் மேற்பார்வை செய்யப்பட்டது.

இதன் பின்னர் பாடசாலை ஆசிரியர்களுடனான கலந்துரையாடலும் இடம்பெற்றது. கடந்த வருடம் ஜி.சீ.ஈ (சா/த) பரீட்சைப் பெறுபேறுகளில் கணித பாடத்தில் குறைவான வீதம் பெறப்பட்டிருந்தமை மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளரினால் தெரிவிக்கப்பட்டது.

இந்த நிலைமை தொடராமல் இருப்பது குறித்து மற்றும் ஆசிரியர்களுக்குத் தேவையான கற்பித்தல் நடவடிக்கைகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது. (ம-15)

## எழுதுகோல் தெய்வம் எந்தன் எழுத்தும் தெய்வம்

எழுதுகோல் தெய்வம் எந்தன் எழுத்தும் தெய்வம் என்ற
விழுமியம் காத்தெழுதும் வித்தகர் என்றும் வாழ்க

ஒழுக்கம் உளத்துயர்வு ஒப்புரவு உண்மை அன்பு
எழில் அறம் இன்பம் என்றும் இவ்வுல கினிற் செழிக்க -
எழுதுகோல்

நல்லுணர்வு சாந்தி ஞானம் சமாதானம்
எல்ல வர்க்குள் இனிக்கும் இயல்பெனும் நிலைதுலங்க -
எழுதுகோல்

யாதுமூ ரே நமக்கு யாவரும் கேளிர் என்ற
மேதகு சிந்தையா லிம்மேதினியை இணைக்க - எழுது

எண்ணம், எழுத்து, செயல் இசைவு பெற்றே யிந்த
மண்ணிலே விண்ணைக் காணும் மானுட நேயம் வெல்ல - எழுது

மலரயன் படைப்பினிலும் மாண்புறும் புலவர் ஆக்கம்
நிலவுலகினி லென்றும் நீடிக்கும் உண்மை கண்டு - எழுதுகோல்

- சிற்பி

( சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாடு இன்று கொழும்பில் ஆரம்பமாகின்றது. அதனையொட்டி இக்கவிதை இங்கு பிரசுரமாகிறது.)

## பிராந்திய அபிவிருத்தி குறித்துத் தரவுகள் திரட்டல்

தென்மராட்சி, ஜன.6

வடக்கு மாகாண உள்ளூராட்சித் திணைக்களத்தினால் பிராந்திய அபிவிருத்தித் திட்டத்துக்கான தரவுகள் திரட்டப்பட்டு வருகின்றன. அந்தந்த உள்ளூராட்சிச் சபைகளின் எல்லைக்குட்பட்ட சனசமூக நிலையங்கள், பொது நூலகங்கள், உள்ளூராட்சிச் சபையினால், தனியாரினால் நிர்வகிக்கப்படும் முன்பள்ளிகள், பாலர் பகல் பராமரிப்பு நிலையங்கள் ஆகியவற்றின் விவரங்களே திரட்டப்படுகின்றன. இவற்றின் விவரங்களை அனுப்பி வைக்குமாறு சகல உள்ளூராட்சிச் சபையினருக்கும் மாகாண உள்ளூராட்சி ஆணை யாளர் அறிவித்துள்ளார். (ம-207)

## குடாநாட்டு வீதிகளைப் புனரமைக்க தெற்கில் இருந்து தார்க்கலவை

யாழ்ப்பாணம், ஜன.6

யாழ்.குடாநாட்டு வீதிகளைப் புனரமைப்புச் செய்வதற்கு தெற்கில் இருந்து தினமும் தார்க் கலவை கொண்டு வரப்படுகின்றது. வீதி அபிவிருத்தி அதிகார சபையின் ஏற்பாட்டில் கனரக வாகனங்களின் உதவியுடன் இந்தத் தார்க் கலவை கொண்டு வரப்படுகின்றது.

அடை மழையினால் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கும் குடாநாட்டின் பிரதான வீதிகளில் ஏற்பட்டிருக்கும் குழிகள் இந்தத் தார்க்கலவை மூலம் சீர் செய்யப்பட்டு வருகின்றன.

பெரும் குண்டும் குழியுமாகப் போக்குவரத்துச் செய்ய முடியாத அளவுக்கு இந்த வீதிகள் காணப்படுகின்றன.

குறிப்பாக கே.கே.எஸ். வீதி, பலாலி வீதி, மானிப்பாய் வீதி, ஏ-9 வீதி, பருத்தித்துறை வீதி, பண்ணை வீதி போன்றவையே மழையால் பெருமளவு சேதமடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.(ம-26)

## வலி. வடக்கில் மீள்குடியமர்ந்த குடும்பங்களுக்கு தலா 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவு விரைவில்

யாழ்ப்பாணம், ஜன.6

வலி. வடக்கில் மீள்குடியமர்த்தப்பட்டுள்ள குடும்பங்களுக்குத் தலா 5 ஆயிரம் ரூபாவினை வழங்குவதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளதாக வலி. கிழக்குப் பிரதேச செயலர் எஸ். முரளிதரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

வலி.வடக்கில் மீள் குடியமர அனுமதிக்கப்பட்டுள்ள வித்தகபுரம், இளவாலை வடக்கு, இளவாலை வடமேற்கு ஆகிய பகுதிகளில் மக்கள் கட்டம் கட்டமாக மீள்குடியமர்த்து வருகின்றனர்.

இவ்வாறு குடியமரும் மக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. இவர்களுக்கான மீள் குடியமர்வுக் கொடுப்பனவுகள் மாவட்டச் செயலகத்தால் பிரதேச செயலகத்துக்கு அனுப்பப்பட் டுள்ளது.

இப்பகுதிகளில் 879 குடும்பங்கள் மீள்குடியர்ந்துள்ளன. தற்போது இந்தக் குடும்பங்கள் தமக்கான வீடுகளை அமைப்பதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன.

இவர்களுக்குத் தேவையான உதவிகளை அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் வழங்கத் தயாராகவுள்ளன என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.(ம-9-14)

## அங்கத்துவ அட்டை பெற்றாலே பொதுநூலகத்தைப் பயன்படுத்தலாம்

யாழ்ப்பாணம், ஜன.6

யாழ்ப்பாணம் பொது நூலக திற்கு வருகை தரும் மாணவர் கள், பயனாளிகள் அனைவரும் அங்கத்துவ அட்டையைப் பெற்றால் மட்டுமே நூலகத்தில் நூல் களை வாசிக்க முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுகின்றது. கடந்த 2008 ஆம் ஆண்டிலிருந்து அங்கத்தவர்கள் அட்டை பெறும் நடைமுறை இருந்தும் அதனை யாரும் பின்பற்றவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது. இவ் வருடத்திலிருந்து நூலகத்தில் புத்தகங்ளை வாசிப்போர் நூலகத் தினரிடமிருந்து அங்கத்துவர் அட்டையை ரூபா 50 செலுத்திப் பெற்றுக் கொள்ளுமாறு பிரதம நூலகர் தனபாலசிங்கம் தெரிவித்துள்ளார். (204-311)




## மின்கம்பம் முறிந்து சரிந்ததில் வீதிப் போக்குவரத்தில் நெருக்கடி



யாழ்ப்பாணம், ஜன.6

மின்சார விநியோகக் கம்பம் ஒன்று அதன் அடிப்பகுதியில் ஏற்பட்ட உடைவு காரணமாக முறிவடைந்து மின்கம்பிகள் தொங்கிக் கொண்டிருந்த அபாயகரமான சம்பவம் ஒன்று திருநெல்வேலி, தபால்பெட்டிச் சந்திப் பகுதியில் இடம்பெற்றது.

இதன்காரணமாகப் பலாலி வீதியூடான போக்குவரத்துச் சில மணி நேரம் தடைப்பட்டிருந்தது.

திருநெல்வேலி தபால் பெட்டிச் சந்தியில் பலாலி வீதியருகில் உள்ள மின்சாரக் கம்பம் திடீரென முறித்து வீதிக்குக் குறுக்காக விழுந்தது. இதன் காரணமாக சைக்கிள், மோட்டார் சைக்கிள் தவிர்ந்த ஏனைய வாகனங்கள் அந்தப் பகுதியைக் கடந்து செல்ல முடியாத நிலையில் போக்குவர்த்து சில மணி நேரம் தடைப்பட்டிருந்தது.

மின் விநியோகக் கம்பிகளைச் சுற்றிப் பிளாஸ்ரிக் காவலி இடப்பட்டிருந்தமையால் பாதிப்புகள் எதுவும் ஏற்படவில்லை எனக் கூறப்பட்டது.

இந்தச் சம்பவம் இடம்பெற்றுச் சில மணி நேரத்தில் அங்கு சென்ற இலங்கை மின்சார சபையினர் குறித்த மின்கம்பத்தை மாற்றிச் சீர் செய்வதில் முனைப்புடன் செயற்பட்டார்கள்.

மின் கம்பங்களின் உறுதித் தன்மை, மின் விநியோக மார்க்கங்களில் உள்ள அபாய நிலைமைகள் ஆகியவற்றை அறிந்து அதற்கான நடவடிக்கைகளை எடுக்க மின்சார சபை முன்வர வேண்டும் எனவும் இல்லையேல் அபாயகரமான சம்பவங்கள் இடம்பெற வாய்ப்புள்ளதாகவும் மக்கள் தெரிவித்தனர். (ம-14-15)

# சீரழிவின் விளிம்பில் சிக்கித் தவிக்கும் யாழ். மாவட்ட இளஞ்சமூகத்தவர்கள்

### யாழ்.அரச அதிபர் உரை

யாழ்ப்பாணம்,ஜன.06

யாழ். மாவட்டம் கல்வி, கலை, கலாசாரம், நாகரிகம், அபிவிருத்தி என்பவற்றில் மேலோங்கிய போதிலும் தற் போது இங்குள்ள இளஞ் சமூகத்தினர் சீரழிவின் விளிம்பில் நின்று சிக்கித் தவிப்பதைக் காணமுடிகின்றது.

இவ்வாறு யாழ். செயலக அரச ஊழியர்கள் மத்தியில் உரையாற்றும்போது யாழ்.அரச அதிபர் கூறினார்.

புத்தாண்டின் புதிய வேலை நாளில் யாழ்.செயலக அரச ஊழியர்கள் தங்கள் சேவையினை மக்களுக்காகச் சிறந்த முறையில் அர்ப்பணிப்புடன் பணியாற்றுவோம் என்று உறுதி எடுத்துக் கொண்ட நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அரச அதிபர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது:

யாழ். மாவட்டம் கலை, கலாசாரம், கல்வி என்பவற்றில் ஒருகாலம் சிகரத்தைத் தெட்டிருந்தது. ஆனால் தற்பொழுது நாகரிகம், அபிவிருத்தி போன்றவற்றில் மேலோங்கியிருந்தாலும் பல குறைபாடுகளும் கலாசார சீரழிவுகளும் காணப்படுகின்றன.

யுத்தமும், இயற்கையின் கொடிய சீற்றமும் இந்தப் பிரதேசத் தைச் சிதைத்துள்ளதால் மக்கள் உளப்பாதிப்புக்குஆளாகிய தோடு பல தடைகளையும் சந்தித்துள்ளனர். எனவே அவர்களின் துயரங்கள் துடைக்கப்படவேண்டும்-என்றார்.

அதுமட்டுமல்ல [illegible] மக்களின் பணத்தில் [illegible] பெறும் ஊழியர்கள் நாம். இந்த மாவட்டத்தில் சுமார் 8 லட்சம் மக்களுக்குச் சேவை செய்யும் வாய்ப்பு எமக்குத் கிடைத்துள்ளது.

ஆனால், யாழ்ப்பாணத்தில் சேவைபுரிபவர்கள் நெடுந்தீவிலும், ஊர்காவற்றுறையிலும் கடமை களைப் பொறுப்பேற்க பின்நிற்கிறார்கள். சிலர் அங்கு 8-10 வருடங்களாகக் கடமை புரிகிறார்கள். அவர்கள் தங்கள் குடும்பங்களுடன் சேர்ந்து வாழ வாய்ப்புக்கள் வழங்கப்பட வேண்டும்.

வேலையைச் சவாலாக எடுத்து சாதனைகளை நிகழ்த்திக் காட்டுவதோடு எமது பிரதேசத்தின் அபிவிருத்திக்கு அனை[illegible] வேண்டும் [illegible] அவர் தெரிவித்தார். (ற-45)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 17ஆம் ஆண்டு நினைவு நாள்



வருடங்கள் பல சென்றாலும்
உங்கள் நினைவுகளுடன்
வணிகர்கள்

அமரர்
**சங்கரப்பிள்ளை நமசிவாயம்**
(முன்னாள் உரிமையாளர், சாவகச்சேரி
அம்பிகா பார்மசி,
முன்னாள் தலைவர், சாவகச்சேரி கைத்தொழில்
வணிகர் மன்றம்)

மண்ணில் : 22.08.1937
விண்ணில் : 06.01.1994

மன்ற சேவைக்கென வந்து அமரத்துவமான அமரரின் நினைவுநாளும் நினைவுக் கூட்டமும் இன்று மன்ற அலுவலகத்திலுள்ள அமரரின் நினைவு மண்டபத்தில் காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளன. நிகழ்வில் அங்கத்தவர்கள் அனைவரும் கலந்து சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

சாவகச்சேரி கைத்தொழில்
வணிகர் மன்றம்.

(சி/574338)

## கருத்தரங்கு

யாழ்.சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் யாழ்.பிரதேச அந்தணர்களுக்கான கருத்தரங்கு நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு ஆனைப்பந்தி இந்து குருமார் ஒன்றியத்தில் ஒன்றியத் தலைவர் சிவஸ்ரீ சபா வாஸுதேவக் குருக்கள் தலைமையில் நடைபெறும். இந்தக் கருத்தரங்கில் கருத்துரையை சுன்னாகம் சிவன் தேவஸ்தானத்தின் பிரதமகுரு சிவஸ்ரீ நா.சர்வேஸ்வரக் குருக்கள் வழங்குவார். (ற)

## அரச திணைக்களங்களில் குவியும் வாழ்த்து மடல்கள்

அரச திணைக்கள அலுவலகங்களில் தினமும் வாழ்த்து மடல்கள் வந்து குவிந்தவாறு உள்ளன.

நாட்டில் உள்ள அனைத்து அலுவலகங்களும் 2011 ஆம் ஆண்டுக்குரிய வாழ்த்து மடல்களை மும்மொழியிலும் தயாரித்து சகல திணைக்களங்கள், அலுவலகங்களுக்கும் அனுப்பி வைத்துள்ளன.

இதனால்,அனைத்து அலுவலகங்களுக்கும் பெருமளவு வாழ்த்து மடல்கள் கடந்த பத்துத் தினங்களாக வந்தவண்ணமுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ம-207)

## திருமுறை முற்றோதல்

அரியாலை நீர்நொச்சித் தாழ்வு ஸ்ரீ சித்தி விநாயகர் தேவஸ்தானத்தில் எதிர்வரும் 15ஆம் திகதி சனிக்கிழமை பன்னிருதிருமுறைகள் முற்றோதல் நிகழ்வு நடைபெறும்.

தினமும் காலை 8 மணிக்கு பூசை நிறைவடைந்ததும் படிப்பு ஆரம்பமாகும். (ற)


## CMC வைத்திய நிலையம், கிளிநொச்சி
## கண் சிகிச்சை தொடர்பானது

யாழ்.போதனா வைத்தியசாலையில் நீண்ட காலமாகக் கடமையாற்றும்
கண் சத்திர சிகிச்சை நிபுணர்
வைத்திய கலாநிதி தர்சனா தர்மதாச
எதிர்வரும் ஜனவரி 9ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு எமது வைத்திய நிலையத்தில் நோயாளர்களைப் பார்வையிடுவார்.
பயனடைய விரும்புவோர் முன்பதிவு செய்துகொள்ளவும்.

CMC வைத்திய நிலையம், கிளிநொச்சி.
(சி/574407)


# கண்ணீர் அஞ்சலி



ஈச்சமோட்டை ஞான வைரவ ஆலய
முன்னாள் தலைவர்
**தம்பிஐயா தியாகராசா**
அவர்களின் பிரிவால்
துயருற்றிருக்கும் அவரது
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவித்துக்
கொள்வதோடு அவரின் ஆத்மா
சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம். 1983ஆம் ஆண்டில் நடைபெற்ற ஆலய கும்பாபிஷேகம் இவரது தலைமையில் மிகச் சிறப்பாக நடைபெற்றது என்பதும் குறிப்பிடத்தக்கது.

பரிபாலன சபையினர்,
யா/ஈச்சமோட்டை ஸ்ரீ ஞானவைரவர் தேவஸ்தானம்.

(108496)

# மரண அறிவித்தல்

*வேலுப்பிள்ளை பொன்னையா (சிவப்பிரகாசம்)*



கரவெட்டி கிழக்கு, கிழவி தோட்டத்தைப் பிறப்பிடமாகவும் நுணாவில் மேற்கு K.M.வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை பொன்னையா (சிவப்பிரகாசம்) 03.01.2011 திங்கட்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற மலர்மணி (தேவி)யின் அன்புக் கணவராவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.01.2011) வியாழக் கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் முற்பகல் 10 மணிக்கு தகனக் கிரியைக்காக காந்தாளம்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
K.M.வீதி, நுணாவில் மேற்கு, சாவகச்சேரி. (108497) குடும்பத்தினர்.


## Nottingham College Of London And UNI ICT - Campus
கணனி நிறுவனங்கள்

### O/L , A/L யாழ். மாணவர்களுக்கு வழங்கும் மாபெரும் புலமைப்பரிசில் திட்டம் - 2011

எமது யாழ் மாவட்ட மாணவர்களது கணனி, ஆங்கிலம், முகாமைத்துவம்,மருத்துவம் போன்ற துறைகளின் அறிவை வளர்க்கும் நோக்குடன் கீழ்வரும் சர்வதேச கற்கை நெறிகளுக்கான மாபெரும் புலமைப்பரிசில் திட்டம் ஒன்றை வழங்குவதற்கு எமது நிறுவனங்கள் தீர்மானித்துள்ளன. அந்த வகையில் கீழ்வரும் கற்கை நெறிகளை நீங்கள் புலமைப்பரிசில் திட்டம் ஒன்றின் மூலம் எமது நிறுவனத்தில் இலகுவாக கற்கமுடியும். இத்திட்டத்தின் மூலம் ஒருவர் மூன்று கற்கை நெறிகளை தெரிவு செய்து கற்க முடியும்.

**Certificate Courses :-**
- Certificate in Information Technology
- Certificate in PC Hardware Engineering
- Microsoft Office for Business Professional
- Certificate in PC Network Administration
- Certificate in English
- Certificate In Business & Communication

**Diploma Courses :-**
- Diploma in Marketing
- Diploma in Human Resource Management
- Diploma in Electronic Technology
- Diploma in Multimedia
- Diploma in IT (One Year)
- Diploma in Hardware Engineering
- Diploma in Business (With Accounting & IT)
- Diploma in Business Technology
- Professional Diploma in Marketing
- Diploma in Spoken & Practical English & IELTS

ஆர்வமுள்ள அனைவரும் எமது இத்திட்டத்தில் பங்குபற்றலாம்!!!

எமது இத் திட்டத்தில் இணைய நீங்கள் செய்ய வேண்டியவை!????

- எமது இப்புலமைப்பரிசிலானது பொது அறிவு மற்றும் நுண் அறிவு பரீட்சைகளை கொண்டதாகும்.
- நீங்கள் பெறும் புள்ளிகளின் ஊடாக எம்மால் உங்களுக்கு புலமைப்பரிசில் வழங்கப்படும்.

இன்றே கீழ்வரும் எமது முகவரிக்கு உங்களது முழுப்பெயர், வீட்டு முகவரி, நீங்கள் கற்க விரும்பும் எமது கற்கைநெறியின் பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம் ஆகியவற்றை தெளிவாக எழுதி கீழே தரப்பட்டுள்ள எமது முகவரிக்கு தபாலில் அனுப்பி வைக்கவும். அல்லது மேற்படி உங்கள் விபரங்களை உங்களது கைத்தொலை பேசியில் ரைப்செய்து 078 911 42 08 என்னும் எமது தொலைபேசி இலக்கத்திற்கு அனுப்பிவைக்கவும்!!!!! இவ்வாறு அனுப்பிவைக்கும் மாணவர்களுக்கு நாம் இலவசமாக எமது விண்ணப்படிவங்கள், எமது கற்கை நெறிகள் பற்றிய விபரம் மற்றும் எமது புலமைப்பரிசில் நடைபெறும் திகதி ஆகியவற்றை தபாலில் அனுப்பிவைப்போம்.

**Higher National Diploma**
- Higher National Diploma in Pharmacy (HND in Pharmacy - A/L Bio/Maths Students)

விண்ணப்ப முடிவுத்திகதி :- 10/01/2011

**Degree Courses :-**
- B .A (Hons) in Business Administration
- B.Sc (Hons) in Multimedia

- Conditions for Apply -

Our International Universities Affiliations:-
eie · Unitec · University of Wales, Newport

அனுப்ப வேண்டிய முகவரி :
UNI & NOTTINGHAM COLLEGE OF LONDON
ICT CAMPUS
No :- 83, Palaly Road, Kantharmadam, Jaffna.
T.P :- 021 321 6433 / 0777 110 862


# 31ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர் உயர்திரு.
**வேலுப்பிள்ளை சுப்பிரமணியம்**
(Rtd. P.W.D. Overseer)

அன்னை மடியில்
12.09.1909

ஆண்டவன் அடியில்
07.12.2010

அன்பின் உறைவிடமே அனுபவ ஊற்றே
உந்தன் விழிப்பார்வை கலங்கரை விளக்கு
நூற்றிரண்டு (102) வயதுவரை நோயின்றி நீரிருந்தீர்
இவ்வுலகு காணுமென்றோ விண்ணுலகு தேடி நின்றீர்
ஓடிப்போனதெங்கு ஒரு நொடியில் தவிக்கவிட்டு
வாடிப்போனோம் வருந்தி அழுகின்றோம்
நெஞ்சம் மறக்குமோ உங்கள் நினைவுகளை
நிம்மதியாய் நீங்கள் தூங்க இறைவனை வேண்டுகிறோம்.

புலோலி தெற்கு,
புலோலி.
(சி/574344)
குடும்பத்தினர்.


## மகிழ்ச்சியும் சுபீட்சமும் நிறைந்த புத்தாண்டு வாழ்த்துக்கள்




JAFFNA International 2011 TRADE FAIR
2nd Edition

யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகச் சந்தை 2011

ஜனவரி 21, 22, 23 திகதிகளில்
சுப்ரமணியம் பூங்காவிற்கு முன்பாக
மு.ப. 10.00 தொடக்கம் பி.ப. 7.00 வரை

Silver Sponsor: dino TECHNOLOGY

HOTLINES: 0773959834 / 0773959835 / 0772614109

ORGANISED BY: LECS LANKA EXHIBITION
CO-ORGANISED BY: FCCISL Sri Lanka
IN ASSOCIATION WITH: CCIY
CO-SPONSORS: Elephant House, Nilkamal
SUPPORTED BY | PARTNER COUNTRY INDIA | OFFICIAL BANKER | OFFICIAL PRINT MEDIA Sunday Observer Daily News | OFFICIAL ELECTRONIC MEDIA சக்தி | OFFICIAL FREIGHT FORWARDER


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எலிக்காய்ச்சலால் பாதிக்கப்பட்ட மூவர் வவுனியா வைத்தியசாலையில் அனுமதி

வவுனியா, ஜன.6

வவுனியாவில் கடந்த மாதம் மட்டும் மூன்றுபேர் எலிக் காய்ச்சல் எனப்படும் 'லெப்ரோஸ்பைரோசிஸ்' தொற்று நோய்க்கு ஆளாகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

மேற்படி நோயாளர்கள் வவுனியா பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்கள். மழை காலங்களில் எலியின் சிறுநீர் குடிதண்ணீருடன் கலப்பதால் இத்தொற்று நோய் ஏற்படுகின்றது. மூட்டுக்களில் வலி, தொடர் காய்ச்சல், தலையிடி, உடல் சோர்வு என்பன இந்த நோயின் அறிகுறிகளாகும். குறிப்பாகச் சிறுவர்களில் இத்தொற்று ஏற்பட்டால் பெரிய விளைவை ஏற்படுத்தும். இந்த விவரங்களை வவுனியா சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் சிரேஷ்ட சுகாதாரப் பரிசோதகர் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவ்வப் பகுதிகளுக்குப் பொறுப்பான சுகாதாரப் பரிசோதகர்கள் நோய்த் தடுப்பு முறைகள் தொடர்பான விழிப்புணர்வுகளை மக்கள் மத்தியில் ஏற்படுத்தி, எதிர்காலத்தில் இந்தத் தொற்று நோய் பரவுவதைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (க-501)

# கிளிநொச்சியில் நாளை ஊர் சுற்றும் போட்டிகள்

கிளிநொச்சி, ஜன.6

மாவட்ட மட்டத்திலான ஆண், பெண் இருபாலாருக்குமான ஊர் சுற்றும்போட்டி நாளைய தினம் நடைபெறவிருப்பதாக கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி றூபாவதி கேதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

ஆண்களுக்கு 12 கிலோமீற்றர் தூரமும், பெண்களுக்கு 8 கிலோமீற்றர் தூரமும் கொண்டதாக இந்தப் போட்டிகள் நடைபெறும்.

நாளைய தினம் காலை 7.30 மணிக்கு கிளிநொச்சிக் கச்சேரி முன்பாக ஆரம்பமாகும் இந்தப்போட்டி டிப்போ, இரத்தினபுரம் சந்தி, திருவையாறு முதலாம் வீதி ஆகியவற்றுக் கூடாகச் சென்று திருவையாறு கி.அ.சங்கத்தில் திரும்பி கோவிந்தன் கடைச் சந்தி, கிளிநொச்சி மகாவித்தியாலயம், காக்கா கடைச் சந்தி, கரடிப்போக்கு ஆகியவற்றைக் கடந்து சென்று கணேசபுரம் பாலத்தில் திரும்பி புகையிரத வீதி, திருநகர் சந்தி ஊடாகச் வந்து கச்சேரி முன்பாக முடிவடையும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (க)

# முல்லைத்தீவில் 27 கிராமங்களில் கண்ணிவெடியகற்றல் தீவிரம்

முல்லைத்தீவு, ஜன.6

முல்லைத்தீவு மாவட்டத்தின் 27 கிராம அலுவலர் பிரிவுகளில் எப்.எஸ்.டி. கண்ணிவெடியகற்றும் பிரிவினரால் கண்ணிவெடிகள் அகற்றும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

கடந்த காலங்களில் தொடர்ந்த யுத்த நடவடிக்கைகள் காரணமாகப் பெருமளவான விவசாய விளை நிலங்கள், மக்கள் வாழ்விடங்கள், பொதுஇடங்கள், விளையாட்டு மைதானங்கள் என எதுவித வேறுபாடுகளும் இன்றி வெடிபொருள்கள் புதைக்கப்பட்டுள்ளதுடன் வெடிக்காத வெடி பொருள்களும் சிதறிக் காணப்படுகின்றன. இவ்வாறான வெடி பொருள்களை அகற்றும் பணிகள் பல்வேறு இடங்களிலும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில் முல்லைத்தீவு மாவட்டத்தின் 27 கிராம அலுவலர் பிரிவுகளில் வெடி பொருள்களை அகற்ற வேண்டியுள்ளதால் அதன் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இந்த வெடி பொருள்கள் அகற்றும் பணியினை எப்.எஸ்.டி. கண்ணி வெடியகற்றும் பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர். இதில் சுமார் 600 பணியாளர்கள் ஈடுபட்டுள்ளனர். அத்துடன் இந்த வெடி பொருள்களை அகற்ற ஆறு முதல் எட்டு மாதங்கள் வரை தேவைப்படும் எனவும் அந்தப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் மக்கள் குடியிருப்புக்களில் பல்வேறு இடங்களிலும் எப்.எஸ்.டி. பிரிவினரால் வெடிபொருள்கள் பற்றிய விழிப்புணர்வுப் பதாகைகளும் இடப்பட்டுள்ளன. (க-11)




# கிளிநொச்சி மாவட்ட வீதிகள் மிக மோசம் அன்றாடம் அவலங்களைச் சந்திக்கும் மக்கள்

கிளிநொச்சி, ஜன.6

கிளிநொச்சி மாவட்டத்தின் பல பகுதிகளிலும் பிரதான வீதிகள், சிறு வீதிகள் என்பன மோசமாகச் சேதமடைந்து காணப்படுவதால் பிரதேச வாசிகள் பெரும் சிரமங்களுக்கு ஆளாகி வருகின்றனர்.

குறிப்பாக பல்லவராயன் கட்டு - முறிகண்டி வீதி, அம்பலப்பெருமாள் - கிளிநொச்சி வீதி, செல்லியாதீவு கண்ணகை அம்மன் ஆலயத்திற்குச் செல்லும் வீதி என்பன மோசமான நிலையிலுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பல்லவராயன்கட்டு - முறிகண்டி வீதி சேதமடைந்த நிலையிலுள்ளதால் இதில் பயணம் செய்யும் கிராஞ்சி, வேரவில், வலைப்பாடு, பொன்னாவெளி, முழங்காவில், நாச்சிக்குடா, இரணைமாதா நகர், ஜெயபுரம், வன்னேரிக்குளம், ஆனைவிழுந்தான் குளம், ஸ்கந்தபுரம், அக்கராயன்குளம், கோணாவில், நாலாம் கட்டை ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மக்கள் பாதிப்படைந்துள்ளனர். மேலும் இந்த வீதியிலுள்ள வன்னேரிக்குளம் பகுதியில் பெரிய குழியொன்று காணப்படுவதால் வாகனங்கள் சிரமத்தின் மத்தியிலேயே பயணிக்கின்றன.

இதைப்போன்று அம்பலப் பெருமாள் - கிளிநொச்சி வீதியின் மோசமான நிலையால் கிளிநொச்சி, முல்லைத்தீவு மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்த வீதியை முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த மல்லாவி, துணுக்காய், ஆலங்குளம், கல்விளான், அம்பலப் பெருமாள் குளம், கோட்டை கட்டிய குளம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மக்கள் கிளிநொச்சி செல்வதற்கும், கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த ஜெயபுரம், பல்லவராயன்கட்டு, கரியாலை நாகபடுவான், கிராஞ்சி, வேரவில், பொன்னாவெளி, வலைப்பாடு, வன்னேரிக்குளம், ஆனைவிழுந்தான் குளம், எட்டாம் கட்டை, அக்கராயன்குளம், கோணாவில், ஊற்றுப்புலம், கந்தபுரம், முறிப்பு, உருத்திரபுரம், கனகபுரம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மக்கள் தமது அன்றாடத் தேவைக்கும் பயன்படுத்தி வருகின்றனர்.

இந்த வீதியிலும் ஸ்கந்தபுரம் பகுதியில் வெள்ளம் காணப்படுகின்றது. இதனால் பயணிகளுக்குச் சிரமம் ஏற்படுகின்றது.

மேலும் பூநகரி, செல்லியாதீவு ஸ்ரீ கண்ணகை அம்மன் ஆலயத்துக்குச் செல்வதற்கு கடந்த 50 ஆண்டுகளாகச் சீரான பாதை இல்லாததால் பக்தர்கள் தொடர்ந்தும் சிரமங்களுக்கு ஆளாகி வருகின்றனர்.

உரியவர்கள் இதில் கூடிய கவனமெடுத்துத் தமக்கு பிரயாணக் கஸ்டங்களிலிருந்து நிவாரணம் வழங்கப்பட வேண்டுமெனப் பாதிக்கப்பட்ட மக்கள் கேட்டுக் கொள்கின்றனர். (க-406)

# வைத்தியசாலையில் காணப்படும் இடநெருக்கடியால் சிரமங்களை எதிர்கொள்ளும் பூநகரி மக்கள்

பூநகரி, ஜன.6

பூநகரி பொது வைத்தியசாலை இடநெருக்கடியுடன் இயங்கி வருவதால் நோயாளர்கள் அதிக சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.


பூநகரி வாடியடிப் பகுதியில் தனியார் வீடொன்றிலேயே இந்த வைத்தியசாலை இயங்கி வருகின்றது. இந்த வீட்டின் கட்டடம் வைத்தியசாலைகளின் செயற்பாடுகளுக்குப் போதாத நிலையில் காணப்படுகின்றது. இதனால் இடநெருக்கடி ஏற்பட்டுள்ளது.

இந்த வைத்தியசாலையை நம்பி வாடியடி, நெற்புலவு, அத்தாய், தம்பிராய், காவாக்குளம், செம்பன்குன்று, நாலாம் கட்டை, செட்டியகுறிச்சி, கறுக்காய்த்தீவு, ஞானிமடம், சித்தங்குறிச்சி, பரமன் கிராய், வில்லடி, கௌதாரி முனை, விநாசியோடை, மண்ணித்தலை, செல்விபுரம், ஆலங்கேணி, நல்லூர், சாமிப்புலம், வீரையடி ஆகிய கிராமங்களைச் சேர்ந்த நோயாளிகள் உள்ளனர். இவர்களனைவரையும் உள்வாங்கி வைத்திய சேவையை வழங்க முடியாத நிலையில் வைத்தியசாலை உள்ளது.

அத்துடன் வெளிநோயாளர்களுக்குப் போதிய ஆசனங்கள் இடப்படவில்லை. இதனால் நோயின் வேதனையுடன் கால் கடுக்க நின்று மருந்தினைப் பெறவேண்டியுள்ளது.

ஆகவே மக்களின் நன்மை கருதி வசதியானதொரு கட்டடத்திற்கு இதனை மாற்றுவதற்கோ அல்லது நிரந்தரக் கட்டடத்தை அமைப்பதற்கோ உரிய அதிகாரிகள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென மிகவும் பின்தங்கிய நிலையிலுள்ள இந்த மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர். (க-406)

## நாடகமே உலகம்.....



சிறந்த ஒப்பனை: ஒளிவிழா நிகழ்வின்போது செம்மலை மகாவித்தியாலய மாணவிகள் 'தீர்ப்பு' என்னும் நாடகத்தை ஆற்றுகை செய்கின்றனர். (555)

# கிளிநொச்சியில் இனங்காணப்பட்ட மோட்டார் சைக்கிள்கள் கையளித்தல்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| (நேற்றைய தொடர்ச்சி) | | 764. 154-8774 | 785. NPJM-7467 | 806. EPHR-3128 | 827. NPJS-3203 | 848. MB-0073 | 869. JF-1870 |
| 724. MC-7394 | 744. 121-9599 | 765. MI-5778 | 786. NPGQ-9439 | 807. NPGO-8423 | 828.NPHB-1133 | 849. 143-8825 | 870. JH-4082 |
| 725. 122-9418 | 745. HK-4022 | 766. 147-7270 | 787. NPHA-1118 | 808. 500-0422 | 829. JB-8878 | 850. HD-5472 | 871. HL-6928 |
| 726. JB-2792 | 746. HC-8011 | 767. HB-7384 | 788. NPJN-8792 | 809. JM-7102 | 830. WPGB - 6562 | 851. JF-5079 | 872. MV-8202 |
| 727. 152-8042 | 747. GN-6640 | 768. JS-3263 | 789. GN-9769 | 810. HC-3546 | 831. HM- 5910 | 852. JL-2268 | 873. MS-1838 |
| 728. 155-1891 | 748. JB-7298 | 769. MF-3489 | 790. 145-1292 | 811. JQ-9533 | 832. NPHG-2435 | 853. 500-2121 | 874. TS-8269 |
| 729. HI-5106 | 749. GO-8515 | 770. HM-9576 | 791. 117-1635 | 812. MD-4387 | 833. JY-8712 | 854. MT-4487 | 875. ME-1013 |
| 730. GP-6558 | 750. HC-5844 | 771. GI-1770 | 792. 148-2102 | 813. NPMI-6298 | 834. NPGW-0451 | 855. NPMH-3936 | 876. MF-1837 |
| 731. T12-5453 | 751. MR-4819 | 772. NPTL-4996 | 793. 102-1408 | 814. NPHD-3383 | 835. GL-5461 | 856. HA-1102 | 877. 138-7855 |
| 732. 141-3564 | 752. HV-1239 | 773. 146-9991 | 794. 500-3831 | 815. 143-3789 | 836. 140-7566 | 857. 500-7416 | 878. 147-6208 |
| 733. TS-8055 | 753. JG-5462 | 774. NPJP-0195 | 795. TV-6884 | 816. MQ-2688 | 837. NPMP- 4892 | 858. 88-4707 | 879. 158-3717 |
| 734. 152-6713 | 754. JY-8670 | 775. HQ-2654 | 796. 140-2840 | 817. GM-0593 | 838. NPMQ-3462 | 859. 500-6518 | 880. MN-0519 |
| 735. GO-5960 | 755. 135-3068 | 776. JX-7821 | 797. 502-0674 | 818. NPGY-2266 | 839. TE-6671 | 860. ML-8561 | 881. HW-3962 |
| 736. 142-3385 | 756. GR-5015 | 777. MX-3389 | 798. GR-8231 | 819. 141-4881 | 840. 141-4917 | 861. JC-3547 | 882. JE-5133 |
| 737. 127-9603 | 757. GG-4322 | 778. JJ-7390 | 799. 159-6977 | 820. NPMT-8150 | 841. GO-6098 | 862. GH-0992 | 883. JB-7457 |
| 738. MH-2987 | 758. MQ-7939 | 779. 500-2119 | 800. NPMA-6513 | 821. NPMC-0205 | 842. 139-3994 | 863. 500-1578 | 884. ME-6087 |
| 739. 146-5183 | 759. GO-7400 | 780. NPJG-1739 | 801. 132-0128 | 822. NPML-5783 | 843. 500-4986 | 864. HM-4915 | 885. 153-9024 |
| 740. JK-9266 | 760. 146-3192 | 781. JW-7486 | 802. 149-1089 | 823. JQ-8515 | 844. HD-6399 | 865. GX-7121 | 886. 143-9322 |
| 741. MT-2746 | 761. MK-8325 | 782. NPGI-7869 | 803. 502-0897 | 824. HN-1731 | 845. JD-1747 | 866. 142-2161 | 887. GT-5261 |
| 742. 117-8310 | 762. 147-7066 | 783. NPJG-3919 | 804. NPGN-1180 | 825. MX-5087 | 846. 151-4494 | 867. 123-6915 | 888. 149-2576 |
| 743. 500-0719 | 763. 140-5432 | 784. 135-3789 | 805. 138-2607 | 826. MR-4633 | 847. HT-6389 | 868. 155-2398 | (தொடரும்) |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**நாகமுத்து வேலாயுதம்**
(மெக்கானிக், கூழாவடி)


மண்ணில் : 1948.07.16
விண்ணில் : 2008.01.09

திதி: துதியை
அன்பின் ஆருயிரே எங்கள்
ஆலயக் குலவிளக்கே!
இல்லத்துக்கோர் தலைவனாய்
எமக்கு நல்வழிகாட்டி இல்லறம் தந்து
பாதியில் எம்மை விட்டுப் பிரிந்த ஏனோ எத்திசை
சென்றாலும் உம்பெயர் பூத்துக் குலுங்கும் மல்லிகை மணம்
வீசுவது போல் உம் மணம் விசுகின்றது அத்தனை புகழும்
சேர்த்துத் தந்த தெய்வமே! எங்களைத் தவிக்க விட்டுச்
சென்றது ஏனோ? மூன்று ஆண்டுகள் சென்றாலும் எம்மை
விட்டு இன்று பிரிந்ததுபோல் உள்ளது ஐயா!
ஆத்மாசாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நவாலி வடக்கு,
மானிப்பாய். குடும்பத்தினர்.

# 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 18 . 04 . 1928



உதிர்வு 06 . 01 . 2009

## அமரர் S.G.சந்தியாப்பிள்ளை

ஈராண்டு காலமும் ஈரவிழிகளுடன்
சிறப்பையே எண்ணி இறப்பையும் மறவாமல்
வானோர் தம் நாட்டில் நன்றே வாழ்வமைக்க
தலைவனே உமக்காய் இறைஞ்சுகின்றோம் இறைவனையே!

புலோலி தெற்கு, புலோலி. (108455) குடும்பத்தினர்.

# மணி விழா

யாழ்ப்பாணம், ஜன.6

கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் பிரதி அதிபர் சங்கீத பூஷணம் செ.குமாரசாமியின் மணிவிழா எதிர்வரும் 10ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு கலாசாலை ரதிலக்சுமி மண்டபத்தில் அதிபர் வீ.கா.கணபதிப்பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் குடாநாட்டின் கல்வி, இசை ஆகிய துறைகளைச் சேர்ந்த பிரமுகர்கள் பலர் வாழ்த்துரைகளை வழங்கவுள்ளனர்.

விழா நாயகரின் இன்னிசைக் கச்சேரியும் இதன்போது இடம்பெறவுள்ளது. ஈழத்து மூத்த இசைக் கலைஞர்களில் விழா நாயகனும் ஒருவராவார். (ம-14)

# வருடாந்தத் திருவிழா

திருநெல்வேலி தெற்கு பரமேஸ்வராச் சந்தியில் அமைந்துள்ள அருள்மிகு வீரகத்தி விநாயகர் ஆலய வருடாந்தத் திருவிழா இன்று வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி எதிர்வரும் 22ஆம் திகதி சனிக்கிழமை வரை 17 தினங்கள் நடைபெறும்.

எதிர்வரும் 14ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்குத் தேர்த்திருவிழாவும் எதிர்வரும் 22ஆம் திகதி சனிக்கிழமை பிராயச்சித்த அபிஷேகம் இடம்பெற்றுத் திருவிழா நிறைவுபெறும். (ற-7)

# வீதியைப் புனரமைத்துத் தருமாறு கோரிக்கை

பருத்தித்துறை- தம்பசிட்டி வீதி மிகவும் மோசமான நிலையில் சேதமடைந்து குண்டும் குழியுமாகக் காணப்படுகின்றது. இந்த வீதியால் மோட்டார் சைக்கிள், சைக்கிள்களில் செல்வோர் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றர்.

அத்துடன் பருத்தித்துறை- யாழ்ப்பாணம் ஊடாக 751ஆம் இலக்க பஸ்சேவை இடம்பெற்று வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. எனவே மேற்படி வீதியைப் புனரமைத்துத் தருமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (78)

**University of Jaffna, Sri Lanka**
**Faculty of Graduate Studies**

## Registration of Postgraduate Courses M.Phil. & Ph.D. – 2011/12

Applications are invited from qualified persons for enrollment to the Master of Philosophy (M.Phil) and Doctor of Philosophy(Ph.D)Programmes offered by the Faculty of Graduate Studies, University of Jaffna in the disciplines listed below:

*Agriculture*
*Geography, Economics and Political Science*
*History*
*Tamil, Sanskrit and Linguistics*
*Botany, Zoology and Biochemistry*
*Commerce & Management*
*Physiology, Medicine and Siddha Medicine*
*Physics, Chemistry, Computer Science and Maths & Stats*
*Hindu Civilization, Christian Civilization and, Philosophy*

Relevant information and prescribed application forms can be obtained from the Assistant Registrar, Faculty of Graduate Studies, University of Jaffna (T.P. 021 222 3608) on production of a receipt in support of a payment of Rs.500/= to the University **Account number 162-1-001-6-0000880** at the People's Bank, University Branch, Thirunelvely or forwarding a money order of Rs.500/= drawn in favour of "The Bursar, University of Jaffna". Requests by post should be accompanied bya self- addressed envelope not less than 22.5 x 10 cm. (9" x4") in size affixing stamps to the value of Rs,40/=.

Duly completed applications should be sent to the Assistant Registrar, Faculty of Graduate Studies on or before 15th Feb 2011. Late and incomplete applications will not be considered.

For further details please contact with the Faculty of Graduated Studies, University of Jaffna.

**Registrar.**
**03.01.2011** (c.574349)


# சுகவாழ்வுக்கான மாபெரும் கண்காட்சியும் விழிப்புணர்வு வார நிகழ்வுகளும்

நீரிழிவுச் சிகிச்சை நிலையம்
யாழ்.போதனா வைத்தியசாலை

இடம் : நடராஜா பரமேஸ்வரி மணிமண்டபம்
காலம் : 08.01.2011 முதல் 12.01.20011 வரை
காலை : 8.30 மணி - மாலை 7.30 மணிவரை

உள்ளடக்கம்
★ நீரிழிவு நோய் வருமுன் காப்பது எப்படி?
★ நீரிழிவு வந்தபின் வாழ்வது எப்படி?
★ கர்ப்ப காலத்திலிருந்தே குழந்தைகளைக் காப்பது எவ்வாறு?
★ நீரிழிவு நோயின் உளத்தாக்கங்களும்
★ பரிசோதனைகளும் சிகிச்சை முறைகளும்
★ நீரிழிவின் பாதிப்புகள்

★ குறைந்த செலவில் இரத்த, சலப் பரிசோதனைகள் செய்து கொடுக்கப்படும்.
★ இலவச கண் பரிசோதனை
★ குளுக்கோஸ் மற்றும் இரத்த அழுத்தத்தை அளவிடும் மீற்றர் குறைந்த விலையில் வாங்கலாம்.
★ நீரிழிவு, உயர் குருதியமுக்கம், நுளம்புடன் ஒரு குருசேத்திரம் நீரிழிவை வெற்றிகொள்வோம் 2010 கண்காட்சி பற்றிய CD கள் விற்பனைக்குண்டு.
★ 'ஆரோக்கிய உணவு செய்வோம்' புத்தக வெளியீடு
★ உங்களுக்கு இனிவரும் காலங்களில் நீரிழிவு ஏற்படுவதற்கான சாத்தியக் கூறு உண்டா என்பதும் அதற்கான தடுப்பு முறைகளும் கூறப்படும்.
★ தனிப்பட்ட மற்றும் குழுநிலை ஆலோசனைகள் வழங்கப்படும்.
★ நீரிழிவுச் சிகிச்சை நிலைய ஆய்வுகளின் முடிவுகள் வெளியிடல்,
★ கலை நிகழ்ச்சிகள், இன்னும் பல.........

ஊடக அனுசரணை:
உதயன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



## இளையதம்பி சுந்தரலிங்கம்

ஏழாலை வடக்கைப் பிறப்பிடமாகவும் தாவடி தெற்கு, கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட இளையதம்பி சுந்தரலிங்கம் 03.01.2011 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இளையதம்பி- செல்லமுத்து தம்பதியரின் அன்பு மகனும் பொன்னம்பலம்- செல்லாச்சி தம்பதியரின் அன்பு மருமகனும் இராயேஸ்வரியின் பாசமிகு கணவரும் பூமணி, தருமு, அன்னலட்சுமி ஆகியோரின் பாசமிகு சகோதரரும் பாலகௌரி (கனடா), பாலசசி (இலங்கை), பாலரூபி (சுவிஸ்), பாலகிருஷ்ணன் (கனடா), தயாகிருஷ்ணன் (அமெரிக்கா), பாலஜீவா (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் அ.தவராசா, ந.தவராசா, சி.தவராசா, மகேந்திரன், சுகன்ஜா ஆகியோரின் மாமனும் தாட்சாயினி, தசரதன், தசேந்த், கீர்த்திகன், கிருஷாந்தினி, கிருசாந், பிரசோ, லணிக்கா, சாணிக்கா, யானுக்கா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.01.2011) வியாழக்கிழமை முற்பகல் 11 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வேம்படி முருகமூர்த்தி கோயிலடி,
தாவடி தெற்கு, கொக்குவில். (108494)

தகவல்:
மருமகன்- ந.தவராசா,
(யாழ்.மாநகரசபை).

# வெள்ளைக்கொடி விவகார வழக்கு இன்று மீண்டும் விசாரணைக்கு

கொழும்பு, ஜன. 6

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவால் உரையாற்றப்பட்டு, தொலைக் காட்சிச் செய்திகளில் ஒளிபரப்புச் செய்யப்பட்ட வீடியோ நாடாக்கள் மேல் நீதிமன்றத்தில் இன்று நடைபெறவுள்ள வெள்ளைக் கொடி விவகார வழக்கில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப் படவுள்ளது.

சரத் பொன்சேகாவினால் உரையாற்றப்பட்டு, தொலைக் காட்சிச் செய்திகளில் ஒளி பரப்புச் செய்யப்பட்ட வீடியோ ஒளி நாடாக்களை இவ்வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்வதா? இல்லையா? என்பது தொடர்பில் இழுபறி நிலை ஏற்பட்டிருந்தது.

இந்நிலையில் கடந்த டிசெம்பர் 16ஆம் திகதி நடைபெற்ற வெள்ளைக்கொடி விவகாரம் தொடர்பான வழக்கு விசாரணையின்போது அதற்கான அனுமதியை மேல் நீதிமன்ற நீதியரசர்கள் வழங்கியிருந்தனர். இன்று இந்த வழக்கு விசாரணை முற்பகல் 10 மணிக்கு மேல் நீதிமன்றில் நடை பெறவுள்ளது. (சி)

# உலகக் கிண்ணக் கிரிக்கெட்டுக்கு சிறந்த அணியையே தெரிவுசெய்க

## ஜனாதிபதி மஹிந்த பணிப்பு

கொழும்பு, ஜன. 6

உலகக் கிண்ணத்திற்கான இலங்கையை பிரதிநிதித்துவப் படுத்த சிறந்த குழுவை தெரிவு செய்வது கிரிக்கெட் தெரிவுக் குழுவின் பொறுப்பாகுமென ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்று முன்தினம் காலை அலரி மாளிகையில் இடைக்கால கிரிக்கெட் சபை அதிகாரிகளைச் சந்தித்தபோது தெரிவித்தார்.

உலகக் கிண்ணத்தை வெற்றி கொள்வதே அனைவரினதும் எதிர்பார்ப்பெனவும் அதற்காக விளையாட்டு வீரர்களின் மன வலிமையை மேம்படுத்துவது அனைவரினதும் கடமையென வும் தெரிவித்த ஜனாதிபதி ஒவ்வொருவரின் தேவைக்காக வீரர்களை நீக்காமல் 15 சிறந்த வீரர்களைத் தெரிவுசெய்வது தெரிவுக் குழுவின் பொறுப்பெனவும் சுட்டிக்காட்டினார்.

போட்டிகள் நடைபெறும் விளையாட்டு மைதானங்களைத் தயார்ப்படுத்துவது அதேபோல் வீரர்களின் தங்குமிட வசதி தொடர்பாகவும் ஜனாதிபதி இடைக்கால கிரிக்கெட் சபைத் தலைவர் டி.எஸ்.டி.சில்வாவிடம் கேட்டறிந்துகொண்டார்.

எதிர்வரும் 15ஆம் திகதி பல்லேகல, கெத்தாராம மற்றும் சூரியவெவ ஆகிய மைதானங்களின் திருத்தப் பணிகளை முடித்து சர்வதேச கிரிக்கெட் சபையிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் சபைத் தலைவர் தெரிவித்தார்.

உலகக் கிண்ணப் போட்டிகளின் பின்னர் இந்த மைதானங்களை முறையாகப் பேணுவதற்கு முறையான திட்டங்களை வகுக்க வேண்டிய தேவை குறித்தும் ஜனாதிபதி இங்கு சுட்டிக்காட்டினார்.

2012ஆம் ஆண்டு டி-20 உலகக் கிண்ணப் போட்டிகளை இலங்கையில் நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளதெனக் கிரிக்கெட் இடைக்கால சபையினர் ஜனாதிபதியிடம் சுட்டிக்காட்டினார்.

இந்தச் சந்திப்பில் விளையாட்டுத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே உட்பட அமைச்சின் அதிகாரிகளும் கலந்து கொண்டனர். (சி)

# கல்வி அமைச்சரின் செயலாளரை இனி வாரத்தில் இருதடவை மக்கள் சந்திக்கலாம்

கொழும்பு, ஜன.6

இவ்வாரம் முதல் கல்வியமைச்சின் செயலாளரை புதன் மற்றும் வெள்ளிக் கிழமைகளில் பொதுமக்கள் அமைச்சில் சந்திக்கலாம் - எனக் கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார். முன்பு புதன்கிழமைகளில் மாத்திரமே கல்வியமைச்சின் செயலாளரை பொதுமக்கள் சந்தித்து வந்தனர்.

நாட்டின் பல பாகங்களிலிருந்தும் பொதுமக்கள் கல்வியமைச்சின் செயலாளரைச் சந்திக்க வருகின்றனர். இதன்காரணமாகவே பொதுமக்கள் சந்திப்புக்கான தினங்கள் இரண்டாக அதிகரிக்கப்பட்டுள்ளன - என அமைச்சர் பந்துல குணவர்தன குறிப்பிட்டார்.

## வருகை....



கலந்துரையாடல்: இலங்கை சாரணர் சங்கத்தின் எட்டாவது தேசிய சாரணர் ஜம்போறி நிகழ்வு அண்மையில் அம்பாந்தோட்டையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் இளைஞர் அணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷ நாடாளுமன்ற உறுப்பினர் வசந்த சிறி ஆகியோர் யாழ். மாவட்ட சாரணர் அணியுடன் கலந்துரையாடுகின்றனர்.

# புதுவருட ரொக்கெட்டினால் 50லட்சம் ரூபா நாசம்

கொழும்பு, ஜன.6

புதுவருடப் பிறப்பின்போது கொளுத்தப்பட்ட ரொக்கட் ஒன்றிலிருந்து பரவிய தீயால் நுகேகொடை அனுலா மகா வித்தியாலத்தின் 50 லட்சம் ரூபா பெறுமதியான சொத்துகளுக்கு சேதம் ஏற்பட்டுள்ளது எனக் கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

மேற்படி ரொக்கட், ஜன்னல் துவாரத்திற்கு கூடாக பாடசாலை கட்டடமொன்றிற்குள் விழுந்ததாலேயே இந்த அனர்த்தம் ஏற்பட்டது.

இதனால் சுமார் 50 லட்சம் ரூபா பெறுமதியான சொத்துகள் சேத மடைந்துள்ளன என மதிப்பிடப்பட்டுள்ளது. சேத மடைந்த பாடசாலைக் கட்டடத்தின் கூரையைத் திருத்துவதற்கு அயலிலுள்ள குடியிருப்பாளர்கள் இணங்கியுள்ளனர் - என அவர் மேலும் தெரிவித்தார். (சி)

# சத்திர சிகிச்சைக்கு முன்னரான பரிசோதனைகள் இடைநிறுத்தம்

கொழும்பு, ஜன.6

கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சத்திர சிகிச்சைகளுக்கு முன்னர் செய்யப்படும் சோதனைகளும் இருதய நோயாளர்களின் இருதயத் தொழிற்பாட்டை கண்காணிக்கும் வகையில் செய்யப் படும் சோதனைகளும் நிறுத்தப்பட்டுள்ளன எனத் துணை மருத் துவப் பணியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இரவில் இவ்வகை சோதனைகள் நிறுத்தப்பட்டபோதும் பகலில் அவை மேற்கொள்ளப்படுகின்றன என துணை மருத்துவ சேவைகளின் கூட்டு கவுன்ஸில் தெரிவித்துள்ளது.

'இரத்தம் ஓடும் நேரம்' எனும் சோதனை பொதுவைத்திய சாலையில் நிறுத்தப்பட்டுள்ளது. இதைப்பற்றி நாம் முறையிட்ட போது அதற்குப் பதிலாக 'ரோதுரம்பைன்' சோதனை செய்யப் படுவதாகவும் கூறப்பட் டது.

தேவையான இரசாயனங்கள் வழங்கப்பட்டுள்ள போதிலும் இந்த சோதனைகள் இரவில் செய்யப்படுவதில்லை எனத் துணை மருத்துவ சேவைகளின் கூட்டுக் கவுன்ஸிலின் தலைவர் குமுதேஷ் கூறினார்.

200-300 பேருக்கு தினமும் இந்த சோதனை செய்யவேண்டியுள்ளது. இலங்கையில் பெரும்பாலானோர் சத்திர சிகிச்சையை ஒத்திவைக்க தள்ளப்பட்டுள்ளனர் அல்லது இவர்களின் உடல் நிலையை கண்காணிக்க முடியாமல் இருப்பதால் ஆபத்தான நிலை யில் உள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டார். (சி)

# வவுனியா அரச பஸ் மீதான தாக்குதல் இனவாதிகளின் திட்டமிட்ட செயற்பாடு

## உரிய நடவடிக்கை அவசியம் என்கிறார் நகரசபைத் தலைவர்

கொழும்பு,ஜன.6

வவுனியா இ. போ. சபைக்கு சொந்தமான 63-0725 எனும் இலக்கம் கொண்ட பஸ் கதிர்காமத்திற்கு சென்றுவிட்டு வவுனியா திரும்பி கொண்டிருக்கையில் புத்தல பகுதியில் வைத்துத் தாக்கப்பட்டது. இத்தாக்குதல் சம்பவம் இன வாதிகளின் திட்ட மிட்ட சதி. இதை நாம் ஏற்க முடியாது. சம்பந்தப்பட்டவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படுவது அவசியம் - எனத் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின்வவுனியா நகர சபையின் உப தலைவர் எம்.எம். ரதன் தெரி வித்தார்.

வவுனியா இலங்கை போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான பஸ் தாக்கப்பட்டமையை அறிந்து வவுனியா டிப்போவுக்கு கடந்த திங்கட்கிழமை காலை நேரடியாக வருகை செய்த அவர் முகாமையாளர் மற்றும் தாக்கப்பட்ட ஊழியர்களைச் சந்தித்துக் கலந்துரையாடியதுடன் சேதமடைந்த பஸ்ஸையும் பார்வையிட்டார்.

இதன்போது அங்குள்ள ஊழியர்கள் இச்சம்பவம் தொடர்பாகத் தெரிவித்தவை வருமாறு:-

வவுனியா இ. போ. ச. பஸ் கதிர்காமம் சென்றுவிட்டுத் திரும்புகையில், கடந்த 31 ஆம்திகதி இரவு 9.30 மணியளவில் உணவு உண்பதற்காக புத்தலவில் நிறுத்தப்பட்டது. பஸ்ஸில் பிரயாணம் செய்த 29 ஊழியர்களும் பஸ்ஸுக்குள்ளேயே சாப்பிட்டுக்கொண்டிருந்த வேளையில் அங்கு நுழைந்த பெரும்பான்மை இனத்தை சார்ந்த சில இளைஞர்கள் ''அடேய் தமிழா'' என்று அழைத்து ''உங்களுக்கு இங்கு என்ன வேலை?'' என்று கேட்டதோடு கெட்டவார்த்தைகளாலும் பேசினர்.

''நீங்கள் புலியின் ஆதரவாளர்கள். புலிக்காகத் தகவல் பெறவா இங்கு வந்துள்ளீர்கள்?'' எனக் கேட்டு கடுமையாக தாக்கினர். இதன் போது கிளிநொச்சி இ. போ. ச. முகாமையாளர் கையிலே பலத்த காயமடைந்தார். மேலும் வவுனியா சபை ஊழியர் ஒருவருக்கும் தலையில் காயமேற்பட்டது. இதன் பின்பு கற்கள் தடிகள் கொண்டு பஸ்ஸைக் கடுமையாகத் தாக்கினர். கண்ணாடிகளும் உடைக்கப்பட்டன.

இச்சம்பவத்தை கேள்வியுற்று அவ்விடதிற்கு வந்த பொலிஸார் பொதுமக்கள் உதவியுடன் சம்மந்தப்பட்ட ஐந்து பேரை மடக்கிப் பிடித்துக் கைதுசெய்தனர்.

இதன்பின்பு நாம் வவுனியாவை நோக்கிப் பயணத்தை ஆரம்பித்த சொற்ப நேரத்தில் மீண்டும் சிலர் வீதிக்குக் குறுக்காக வான் ஒன்றையும் ஓட்டோ ஒன்றையும் நிறுத்தி ''நீங்கள் பயணிக்கமுடியாது. கைது செய்யப்பட்ட எமது ஐந்து பேரையும் விடுதலை செய்தால் மட்டுமே உங்களை வவுனியா செல்ல அனுமதிப்போம். இல்லாது விடின் உங்கள் அனைவரையும் பஸ்ஸுடன் சேர்த்து எரித்து விடுவோம்'' என மிரட்டினர்.

ஆயினும் பெரும்பான்மை உத்தியோகத்தினர் அவர்களுடன் சமரசம் பேசி நிலைமையை முடிவுக்கு கொண்டு வந்தனர். அதன் பின்னர் புத்தல பொலிஸாரின் வழித் துணையுடன் வவுனியா வந்து சேர்ந் தாம் - எனத் தெரிவித்தனர்.

மேற்படி இச்சம்பவமானது வவுனியா இ. போ. ச. ஊழியர்கள் மத்தியில் கடுமையான அச்சத்தை ஏற்படுத்தியுள்ளதுடன் பெரும்பான்மை மக்கள் வாழும் பிரதேசங்களுக்கு செல்லவும் அஞ்சுகின்றனர்.

இவற்றுடன் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றுவரும் திட்டமிட்ட கொலை, கொள்ளை, கடத்தல் போன்ற சம்பவங்களை வெறுமனே பார்த்துக் கொண்டு இருக்க முடியாது. இச்சம்பவங்களைக் கண்டிக்கும் முகமாக இம்மாதம் நடைபெறும் நகரசபையின் கூட்டத் தொடரில் விசேட பிரேரணை ஒன்றை சமர்ப்பித்து உரையாற்றவுள்ளேன். மேலும் இது தொடர்பான விசேட தீர்மானம் ஒன்றும் நிறைவேற்றப்பட இருக்கின்றது - இவ்வாறு ரதன் மேலும் தெரிவித்தார். (சி)

# நல்லிணக்க ஆணைக்குழு புத்தளம் வருகை

கொழும்பு, ஜன 6

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழு நாளை சாட்சியங்களைப் பதிவுசெய்து கொள்வதற்காக புத்தளம் மாவட்டத்திற்குபயணம் மேற்கொள்வுள்ளது என்று நல்லிணக்க ஆணைக்குழுவின் ஊடக இணைப்பாளர் லக்ஷ்மன் விக்கிரம சிங்க தெரிவித்துள்ளார்.

அத்துடன் நாளை மறுதினம் சனிக்கிழமையும், மறுநாள் ஞாயிற்றுக்கிழமையும் மன்னார் மாவட்டத்திற்கு ஆணைக்குழு வருகை செய்யவுள்ளதோடு, எதிர்வரும் 22ஆம், 23ஆம், 24ஆம் திகதிகளில் அம்பாறை மாவட்டத்திற்கும், இம்மாதம் இறுதி வாரத்தில் அநுராதபுரம் மாவட்டத்திற்கும் பயணம் மேற்கொள்வுள்ளது என்றுஅவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## தொழிற்சாலையில் தீ அனர்த்தம்

கட்டுநாயக்கா விமான நிலையத்துக்கு அருகில் அமைந்துள்ள தொழிற்சாலை ஒன் றில் நேற்று முன்தினம் காலை 6.45 மணியளவில் தீ விபத்து ஏற்பட்டுள்ளது. கட்டுநாயக்க விமான நிலையத்தின் தீ கட்டுப்பாட்டு பிரிவினரால் தீ கட்டுபாட்டுக்கு கொண்டுவரப் பட்டது எனத் தெரிவிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2011 ஆம் ஆண்டு உங்களுக்கு எப்படி?




உங்கள் ராசிக்கு இரண்டில் ராகு, ஆறில் குரு, எட்டில் கேது, பன்னிரண்டில் சனி என்கிற நிலையில் கிரக அமர்வு உள்ளது. குரு, சனியின் சமமான பார்வை சில நல்ல பலன்களை உங்களுக்குத் தரும். சகோதரர்கள் உங்களிடம் அன்பு காட்டுவர். தாயின் ஆலோசனை உங்கள் வாழ்க்கையில் புதிய மாற்றங்களை உருவாக்க உதவும். புத்திரர்கள் உங்கள் சொற்படி கேட்டு நடந்து படிப்பு, வேலைவாய்ப்பில் முன்னேற்றம் பெறுவர். தம்பதியர் ஒற்றுமையுடன் செயற்படுவர். பேச்சில் நிதானமும் கண்டிப்பும் சம அளவில் இருக்கும். சமூகத்தில் உங்களை நல்லவிதமாக நடத்தியவர்கள் கூடப் பொறாமைக் குணத்துடன் அணுகுவர். சில சிரமங்கள் இருந்தாலும் அவை குலதெய்வ அருளால் குறைந்து உற்சாகம் ஏற்படும். வீடு, வாகன வகையில் தற்போது கிடைக்கிற நன்மை தொடரும். உறவினர்கள் வருகையால் செலவு அதிகரிக்கும். தவிர்க்க இயலாத வெளியூர் பயணம் ஏற்படும்.

உடல்நலம் சீராக இருக்க நல்ல பழக்கவழக்கம், சீரான ஓய்வைப் பின்பற்றுவது நல்லது. நண்பர்களிடம் பணப் பரிவர்த்தனையில் தகுதிக்கு மீறிய செயற்பாட்டைத் தவிர்க்கவேண்டும். வீட்டிலும், பயணங்களின்போதும் விலையுயர்ந்த பொருள்களை கவனத்துடன் பாதுகாக்க வேண்டும். தான, தர்ம அறப்பணிகளில் ஈடுபடுவீர்கள். வெளியூர் வேலைவாய்ப்பு எளிதாகக் கிடைக்கும். வெளிநாட்டு வேலை வாய்ப்பில் விருப்பம் உள்ளவர்களுக்கு கூடுதல் வேலைப்பளுவுடன் கூடிய வாய்ப்புகள் வந்து சேரும். தொழிலதிபர்கள் வளர்ச்சிப்பணிகளை முழுமையாக நிறைவேற்றுவர். புதிய மாற்றங்களை நடைமுறைப்படுத்தி நிறுவனத்தின் நற்பெயரைத் தக்க வைப்பார்கள். சந்தைப்படுத்துதல், விளம்பரம் ஆகியவற்றிலும் புதுமையைப் புகுத்துவார்கள். நிர்வாகச்செலவு உயர்ந்தாலும் எதிர்கால நன்மை அதிகரிக்கும். முக்கிய தேவைகளுக்கு பணவரவு எதிர்பார்த்தபடி கிடைக்கும். வியாபாரிகள் போட்டியை சமயோசிதமான செயலால் சரி செய்வார்கள். விற்பனையும் லாபமும் சுமாரான அளவில் இருக்கும். வெளியூர்ப் பயணம் நன்மைகளைப் பெற்றுத்தரும்.

அரசு, தனியார் துறையில் பணிபுரிபவர்கள் பொறுப்புணர்வுடன் செயற்படுவார்கள். நிர்வாகத்தின் வழிகாட்டுதலும் கிடைக்கும். பணி இலக்கு நிறைவேறும். வருமானம் வருமென்றாலும் அதற்கேற்ற செலவும் வந்து கொண்டே இருக்கும். அத்தியாவசியமானவற்றை மட்டும் செய்தால் இருப்பதைக் கொண்டு சமாளித்து விடலாம். சக பணியாளர்கள் ஒத்துழைப்புத் தருவர்.

**பெண்கள்:**

பணிபுரியும் பெண்கள் தாமதமானாலும் அதிக நேரம் வேலை செய்து தங்களுக்கு ஒதுக்கப்பட்ட பணிகளை முடித்து விடுவார்கள். சம்பளம் வழக்கம் போல் கிடைத்தாலும் செலவு காரணமாக சேமிக்க இயலவில்லையே என்ற ஆதங்கம் இருக்கும். குடும்பப்பெண்கள், குடும்பத்தின் எதிர்கால நலன் கருதி கணவருடன் ஒற்றுமையைப் பேணிக்காத்திடுவர். அத்தியாவசிய செலவுகளை மட்டும் மேற்கொள்வது நல்லது. நகை இரவல் கொடுக்க, வாங்கக் கூடாது. சுயதொழில் புரியும் பெண்கள் சுமாரான உற்பத்தியும் குறைந்த லாபத்தில் பொருள்களை விற்பதுமான நன்மையைப் பெறுவர்.

**மாணவர்கள்:**

மாணவர்கள் கூடுதல் முயற்சியுடன் படிப்பதால் மட்டுமே உயர் புள்ளிகளைப் பெறமுடியும். படிப்புக்கான செலவில் சிக்கனம் அவசியம். சக மாணவர்கள் உங்களுக்கு படிப்பு விடயத்தில் ஒத்துழைப்பு அளிப்பர். படித்து முடித்தவர்களுக்கு தாமதத்தின் பேரில் வேலை வாய்ப்புக் கிடைக்கும்.

**விவசாயிகள்:**

விவசாயிகள் பயிர் வளர்ப்பில் கூடுதல் கவனம் கொள்வதால் மட்டுமே எதிர்பார்த்த விளைச்சல் கிடைக்கும். கால்நடை வளர்ப்பின் பயன் உற்சாகம் தரும். நிலம் தொடர்பான விவகாரங்களில் அனுகூலம் கிடைக்கும்.




உங்கள் ராசியில் ராகு, ஐந்தில் குரு, ஏழில் கேது, பதினொன்றில் சனி என்கிற நிலையில் பிரதான கிரகங்களின் அமர்வு உள்ளது. குரு, சனி பகவான் அளப்பரிய நற்பலன்களை வழங்கும் விதத்தில் உள்ளனர். உங்களின் பணிகளில் செயல்திறன் அதிகரிக்கும். புதுமைகளைப் புகுத்தும் எண்ணம் மேலோங்கும். பேச்சில் இனிமையும் கனிவும் வெளிப்படும். கூடுதல் பணவரவைப் பெறுவதற்கான வாய்ப்பு உருவாகும். இளைய சகோதரர்கள் உங்கள் உதவியால் தமது வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக்கொள்வர். சமூகப்பணியில் அளவுடன் ஈடுபடுவீர்கள். வீடு, வாகன வகையில் உங்கள் விருப்பம் போல அனைத்துச் சிறப்புகளும் நிறைவேறும். தாயின் அன்பு, ஆசி கிடைக்கும். தாய்வழி உறவினர்களிடம் லேசான கருத்து வேறுபாடு வந்து சீராகும். புத்திரர் நல்லவிதமாகப் படிப்பர். அவர்களுக்கு வேலை வாய்ப்பும் கிடைக்கும். குலதெய்வ அருள் பரிபூரணமாகத் துணைநிற்கும்.

பூர்வீக சொத்தில் வருமான உயர்வும், புதிய சொத்து வாங்குவதுமான நன்னிலை உண்டு. உடல்நலம் சிறக்க தனிக் கவனத்துடன் செயற்படுவது நல்லது. சூடு மற்றும் ஒவ்வாமை தொடர்பான தொந்தரவு வந்து உரிய சிகிச்சையினால் சரியாகும். தம்பதியர் ஒருவருக்கொருவர் சுயகௌரவம் பார்க்கிற சூழ்நிலைகளும் மனத்தாங்கலும் ஏற்படும். ஆனால் புத்திரர்களின் அன்பால் கவலை மாறும். குடும்பத்திற்குத் தேவையான சகல வசதிகளும் பெற சனிபகவானால் உருவாகிற தன, தான்ய யோக பலன்கள் துணைநின்று உதவும். ஆதாய ஸ்தானத்தில் உள்ள சனிபகவான் உங்களுக்கு அபரிமிதமான பணவரவைத் தருவார். வெளிநாடு வேலைவாய்ப்பில் குறைந்த பலனே கிடைக்கும். இளம் வயதினருக்கு நல்ல வரன் கிடைத்து திருமணம் இனிதாக நடக்கும். சுயதொழில் தொடங்க விருப்பம் உள்ளவர்களுக்கு நல்ல வாய்ப்பு உருவாகும். ஏற்கனவே வீடு, வாகனம் உள்ளவர்கள் குழந்தைகளுக்காகவோ எதிர்காலம் கருதியோ மேலும் இவற்றை வாங்குவதற்கு யோகம் இருக்கிறது. வழக்கிலுள்ள சொத்துக்களில் சில சாதகமான தீர்ப்பின் மூலம் வந்து சேரவும் வாய்ப்புண்டு. தொழிலதிபர்களுக்குத் திட்டமிட்ட வளர்ச்சிப்பணிகள் இனிதாக நிறைவேறும். லாபம் மிகச்சிறப்பாக இருக்கும். சமூகத்தில் அந்தஸ்து உயரும். பணியாளர்களின் ஒத்துழைப்பைப் பெற சலுகைகளை வழங்குவீர்கள். வியாபாரிகளுக்கு விற்பனை அதிகமாகி முன்னேற்றமும் ஆதாய பணவரவும் கிடைக்கும். அரசு, தனியார் துறையில் பணிபுரிபவர்கள் பொறுப்புடன் நடந்து பணிகளை வேகமாக நிறைவேற்றுவர். பணியிடத்தில் சுமூகமான சூழ்நிலை இருக்கும். தாராள பணவரவால் குடும்பத்தேவைகள் திருப்திகரமாக நிறைவேறும்.

**தருபவர்: வித்தியா**

**பெண்கள்:**

பணிபுரியும் பெண்கள் தங்கள் பணித்திறமையை நன்கு வெளிப்படுத்தி குறித்த காலத்தில் பணிகளை முடிப்பர். நிர்வாகத்திடம் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். குடும்பப் பெண்கள் கணவரின் எண்ணங்களைப் புரிந்து செயற்படுவதால் குடும்பத்தில் சச்சரவு இல்லாத நன்னிலைமை ஏற்படும். புத்திரர்களின் படிப்பு தொடர்பான விடயங்கள் மனதை மகிழச் செய்யும். தாய்வழியில் உதவி பெற்று மகிழ்வீர்கள். ஆடை, ஆபரணச் சேர்க்கை உண்டு. சுயதொழில் புரியும் பெண்கள் உற்பத்தி, விற்பனை சிறந்து ஆதாய பணவரவு காண்பர்.

**மாணவரகள்:**

மாணவர்கள் மனம் ஒன்றிப் படித்து உயர்ந்த தேர்ச்சி காண்பர். பாராட்டு, பரிசு கிடைக்கும். சக நண்பர்களை அனுசரித்துச் செல்வதால் புள்ளிகள் மேலும் அதிகரிக்கும். படிப்பை முடித்தவர்களுக்குச் சிறந்த வேலை கிடைக்க வாய்ப்பிருக்கிறது.

**விவசாயிகள்:**

விவசாயிகளுக்குத் தேவையான அனைத்து வசதிகளும் எளிதாகக் கிடைக்கும் விளைச்சல் உயர்ந்து பயிர்களுக்குச் சந்தையில் நல்ல விலை பெறுவீர்கள். கால்நடை வளர்ப்பிலும் உயர்வு உண்டு. புதிய சொத்து வாங்குவீர்கள்.

## தேசிய தொழில்திறன் கற்கை நெறிகள்

இலங்கைத் தொழிற்பயிற்சி அதிகார சபையினால் தேசிய தொழில்திறன் சான்றிதழுக்கான ஆறுமாதகாலக் கற்கை நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. கற்கை நெறிகளைத் தொடர விரும்புபவர்கள் கடந்த 3ஆம் திகதி முதல் நடைபெறும் பதிவுகள் நாளை வரை நடைபெற வுள்ளதால் இந்த நாள்களில் கே. கே. எஸ். வீதி யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள தொழிற்பயிற்சி அதிகாரசபை அலுவலகத் துக்குச் சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

மேற்படி தினங்களில் பதிவுகளை வலத்தலைச்சந்தி, ஏ-9 வீதி கைதடி, மின்சார நிலைய வீதி, சுன்னாகம் ஆகிய மூன்று இடங்களில் உள்ள உப அலுவலகங்களிலும் பதிவுகளை மேற்கொள்ள முடியும். ஆறுமாதகாலக் கற்கைநெறிகளாகத் தேசிய தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம், மரவேலைப் பொறியியல், ஆடை வடிவமைப்பாளர், மோட்டார் வாகனப்பொறியியல், கட்டட நிர்மாணம், அலுமியம் பொருத்துகை, கணினி வன்பொருள், வெல்டிங், முச்சக்கரவண்டி திருத்துதல், வெளியிணைப்பு இயந்திரத் திருத்துகை, அழகுக்கலை, வீட்டு மின்னிணைப்பு ஆகிய கற்கைகளுக்கே விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. (ஒ-10)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தாய்மடி 14 . 04 . 1929



இறையடி 18 . 12 . 2009

**திருமதி அருள்ராஜா சிவயோகம்**

திதி: பூர்வபக்க துதியை

எல்லாம் எமக்கீய்ந்து நல்லற வாழ்வில் நிலைத்து
பல்கிப் பெருகி விருட்சமாக சொல்லும் பெரும்பேறே
போற்றிப் புகழ்ந்து தாழ் பணிந்து
நினைவுப்பூமாலை அணிகின்றோம் நிந்தனுக்கே நாம்.

அ.ரவீந்திரகுமார் (மகன்)
குடும்பத்தினர்.

37A, கோணேசபுரம்,
திருகோணமலை.

(108371)

## பங்களாதேஷுக்கு 5000 தொன் அரிசி

மேலும் ஐயாயிரம் தொன் அரிசி இவ்வாரத்தில் பங்களாதேஷுக்கு ஏற்றுமதி செய்யப்படவுள்ளது.

2010ஆம் ஆண்டு முற்பகுதியில் பாகிஸ்தானில் இருந்து தருவிக்கப்பட்ட அரிசி பங்களாதேஷுக்கு மீள் ஏற்றுமதி செய்யப்பட்டது. வெள்ளை அரிசியே இவ்வாறு ஏற்றுமதியானது. எதிர்காலத்தில் அறுவடை அதிகரிக்க வாய்ப்புகள் உள்ளதாகவும் எமது தேவைகளுக்குப்போக எஞ்சிய அரிசியை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யவுள்ளதாகவும் இலங்கை அரசவட்டாரங்கள் தெரிவித்தன. (ஒ-5)

## மரண அறிவித்தல்

### சுந்தரமூர்த்தி பொன்னம்மா



அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் வண்ணார்பண்ணையை வசிப்பிடமாகவும் கொண்ட சுந்தரமூர்த்தி பொன்னம்மா நேற்று (04.01.2011) செவ்வாய்க்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சுந்தரமூர்த்தியின் அன்பு மனைவியும் பாலசுப்பிரமணியம் (ஜிப்சிமணியம்), தருமராசா (பிரான்ஸ்) காலஞ்சென்ற சறோஜினிதேவி ஆகியோரின் அன்புத் தாயாரும் சறோஜினிதேவி, கொறின் (பிரான்ஸ்) காலஞ்சென்ற செல்வராசா ஆகியோரின் அன்பு மாமியும் காலஞ்சென்றவர்களான தம்பையா, வைத்திலிங்கம், பஞ்சாட்சரம், சுந்தரம், சுப்பிரமணியம், இரத்தினம் ஆகியோரின் சகோதரியும் சந்தானகோபால் (செல்லா), சசிகலா (கனடா), ராஜினி (லண்டன்), சசிகுமார் (ராசா), பாலகுமார் (கனடா), றோசா (இந்தியா), எமிலி, எலுகி, கிறிஸ்தோபர், ஜினிபர், திலான், சித்திரா, உஷா, உதயகுமார் (கனடா), சசிதரன் (லண்டன்), சிறிகௌரி (கனடா) ஆகியோரின் பேர்த்தியும் வருண், ரதுசன், சங்கீத், ஜிந்துஜன், தமிஜா, கரணி, மதுசன், நேத்திகா, சஜிந்த், சிம்மஜி ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (06.01.2011) வியாழக்கிழமை பி.ப 1 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

73, காரைக்காட்டு லேன்,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.
தொ.பே.: 0212225261

தகவல்:
மகன்- சு.பாலசுப்பிரமணியம்
(ஜிப்சி மணியம்)

(108488)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடாநாட்டில் சேதமடைந்த வீதிகள் அனைத்தும் இந்த மாத இறுதிக்குள் புனரமைக்கப்படும்

## வீதி அபிவிருத்தி சபையின் பிரதம பொறியியலாளர் தகவல்

யாழ்ப்பாணம், ஜன.6

குடாநாட்டில் மழையால் சேதமடைந்த வீதிகள் யாவும் இந்த மாத இறுதிக்குள் புனரமைக்கப்படும் என்று வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பிரதம பொறியியலாளர் வி.சுதாகரன் தெரிவித்தார்.

அண்மைக் காலமாகக் குடாநாட்டில் பெய்த கடும்மழை காரணமாக வீதிகள் யாவும் குண்றும் குழியுமாகக் காட்சியளிக்கின்றன. இவற்றைப் புனரமைக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதா? என்று அவரிடம் தொடர்பு கொண்டு கேட்டபோதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு -

குடாநாட்டின் சகல வீதிகளும் தற்போது குண்றும், குழியுமாகக் காட்சியளிக்கின்றன. அந்த வீதிகளைப் புனரமைக்கும் நடவடிக்கைகள் கட்டம் கட்டமாக ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

வீதிகளின் சேதங்களின் அடிப்படையில் புனரமைப்புப் பணிகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன. பெரும்பாலும் இந்தப் பணிகள் இந்தமாத இறுதிக்குள் பூர்த்தியாகும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ம-9)

# சண்டிலிப்பாய் சந்தை விரைவில் புதிய இடத்தில்

சண்டிலிப்பாய், ஜன,6

போக்குவரத்துக்கு இடையூறாகவும் வசதியீனங்களுக்கு மத்தி யிலும் பல வருடங்களாக இயங்கி வரும் சண்டிலிப்பாய்ச் சந்தை மிக விரைவில் அன்பளிப்பாக வழங்கப்பட்ட காணிக்கு மாற்றப்பட விருக்கிறது.

மேற்படி சந்தை சண்டிலிப்பாய்க் கிராமத்தில் சண்டிலிப்பாய் - இளவாலை பிரதான வீதியின் ஓரமாக பல வருடங்களாக இயங்கிவருகிறது. நான்கு கிராம உத்தியோகத்தர் பிரிவுகளைச் சேர்ந்த மக்களின் தேவைகளைப் பூர்த்திசெய்து வரும் இச் சந்தை சொந்தக் கட்டடத்தில் இயங்குவதற்கு காணி இல்லாத குறை நிலவியது.

இப்பகுதி மக்கள் எடுத்துக் கொண்ட முயற்சியின் பயனாக இரண்டு பரப்புக் காணி இச் சந்தைக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது. இக்காணியில் சந்தையை அமைப்பதற்கான முயற்சியில் ஈடுபட்டுள்ள வலி. தென் மேற்குப் பிரதேச சபைச் செயலாளர் மேற்படி காணி சம்பந்தமாக மாகாணசபையின் அங்கீகாரம் கிடைக்கும் வரை காத்திருக்கின்றார். (ஓ-115)

# பிரதேச செயலகத்தில் பிறப்புச் சான்றிதழ்கள்

யாழ்ப்பாணம், ஜன.6

யாழ். நகர்மேற்கு பிரிவைச் சேர்ந்த யாழ்.போதனா வைத்தியசாலையில் பிறந்தவர்களுக்கான பிறப்புச் சான்றிதழ்களை யாழ்.பிரதேச செயலகத்திற் பெற்றுக் கொள்ளுமாறு மாவட்டப் பதிவாளர் கேட்டுள்ளார்.

சான்றிதழ்களை சென்ஜோன்ஸ் கல்லூரிக்கு முன்பாக அமைந்துள்ள யாழ்ப்பாணப் பிரதேச செயலகத்தில் பெற்றுக் கொள்ளலாம் என்று காணி மேலதிக மாவட்டப் பதிவாளர் பி.பிரபாகர் அறிவித்துள்ளார். (ம- 10)

# கடந்த் 2010 ஆம் ஆண்டில் மட்டும் 420 பேர் காசநோய்க்கு ஆளாகினர்

யாழப்பாணம், ஜன.6

யாழ். குடாநாட்டில் கடந்த 2010 ஆம் ஆண்டில் மட்டும் சுமார் 420 பேர் காசநோயின் தாக்கத்துக்கு ஆளாகியுள்ளனர் என்று மாவட்ட காசநோக் கட்டுப்பாட்டு அதிகாரி டாக்டர் சி.யமுனானந்தா தெரிவித்தார்.

முன்னரைவிட 2010 இல் இதன் தாக்கம் அதிகரித்துக் காணப்படுகின்றது.

இவர்களுக்கான உரிய சளிப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு இந்த நோயின் தாக்கம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்றார்.

கடந்த ஆண்டில் சுற்றுலாப் பயணிகளின் வருகை குடாநாட்டில் அதிகரித்துக் காணப்பட்டது.

இவர்களின் வருகையாலும் இதன் தாக்கம் மேலும் அதிகரிக்க வாய்ப்பு உள்ளது என்று அவர் மேலும் தெரிவித்தார்.

கடந்த வருடங்களில் சுமார் 30 லட்சம் வரையான சுற்றுலாப் பயணிகள் இங்கு வருகை தந்துள்ளனர். அவர்களில் 180 பேர் வரையாவது காசநோயாளர்களாக இருந்திருக்கிறார்கள் என்றும் அவர் கூறினார்.(ம-26)

# ஆனைக்கோட்டையில் குடும்பஸ்தர் கிணற்றில் இருந்து சடலமாக மீட்பு

நவாலி, ஜன.5

ஆனைக்கோட்டையில் கடந்த திங்களன்று குடும்பஸ்தர் ஒருவர் கிணற்றில் இருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சம்பவத்தில் ஆனைக்கோட்டை, முள்ளி வீதியைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான குணரத்தினம் ரவிக்குமார் (வயது - 34) என்பரே சடலமாக மீட்கப்பட்டார்.

குறித்த நபரைக் காணவில்லை என்று குடும்பத்தினர் தேடியபோது மழைநீரால் நிரம்பியிருந்த வீட்டுக் கிணற்றில் சடலம் மிதப்பதைக் கண்டு, மானிப்பாய்ப் பொலிஸாருக்குத் தெரிவித்துள்ளனர்.

சம்பவத்தினை நேரில் பார்வையிட்ட மல்லாகம் பதில் நீதிவான் அன்ரனி லோயல் சடலத்தைப் பிரேதப் பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார். (ஓ-10-100)

# நவீல்ட் பாடசாலை மாணவர்களுக்கு நிதியுதவி

யாழப்பாணம், ஜன.6

கைதடி நவீல்ட் பாடசாலையில் கல்வி கற்கின்ற யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்குத் தமிழர் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவகுமாரன் சிறிதரன் சுமார் 25 ஆயிரம் ரூபா நிதியை வழங்கியுள்ளார்.

இந்த நிதி வழங்கும் நிகழ்வு நேற்று முற்பகல் 10 மணிக்கு மேற்படி பாடசாலையில் இடம்பெற்றது. நிகழ்வில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மாணவர்களான - சந்திரராசா விக்னேஸ்வரன், விஜயகுமார் விஜயகாந்தன், கிறைவின் கிறிஸ்ரில்லா, பழனிமுத்து இராஜலட்சுமி, சிவயோகன் மாதுமி, விக்ன ராசா விஜயலட்சுமி ஆகியோருக்கு நிதி வழங்கப்பட்டன.

கைதடி நவீல்ட் பாடசாலை அதிபர் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் நிதியை உலகத்தமிழ் பண்பாட்டியக்கம் வழங்கியமை குறிப்பிடத்தக்கது. (201-319)

# பெண் சாரணிய வழிகாட்டுநர் கூட்டம்

யாழ்ப்பாணம், ஜன.6

யாழ்மாவட்டப் பெண் சாரணிய வழிகாட்டுநர்களுக்கான கூட்டம் நாளை வெள்ளிக் கிழமை பிற்பகல் 2 மணிக்கு வேம்படி மகளிர் கல்லூரியில் இடம்பெறும்.

இக்கூட்டத்தில் சகல வழிகாட்டுநர்களையும் பங்கு பற்றுமாறு வடமாகாண ஆணையாளர் திருமதி என். தர்மகுலசிங்கம் கேட்டுள்ளார். (ஐ)

குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

# சிவத்தமிழ்ச் செல்வியின் 86 ஆவது பிறந்தநாள் அறக்கொடை விழா

வலி.வடக்கு, ஜன.6

கலாநிதி சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் பிறந்தநாள் அறக்கொடை விழா நாளை வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

இதனை முன்னிட்டு வருடாந்தம் வடக்கு, கிழக்கு உட்பட நாட்டில் உள்ள சான்றோர்கள் கௌரவிக்கப்படுவது வழமை. இந்த ஆண்டு கௌரவிக்கப்படவுள்ளவர்கள் வருமாறு;

இணுவில், இளைப்பாறிய ஆசிரியர், முதுபெரும் புலவர் சி.க.சிற்றம்பலம், இளைப்பாறிய சுங்கத்திணைக்கள அத்தியட்சகர் காரைநகர் பரோபகாரி கே.கே.சுப்பிரமணியம், மட்டக்களப்பு, அக்கரைப்பற்று விபுலானந்த சிறுவர் இல்ல ஸ்தாபகர் இறைபணிச் செம்மல் த.கயிலாயபிள்ளை, இளைப்பாறிய விரிவுரையாளர் கட்டுவன் இசைமணி, இசை வித்தகர் திருமதி தர்மபூபதி சிதம்பரநாதன், இளைப்பாறிய ஆசிரியர் சுழிபுரம் பண்டிதை திருமதி பொன். பாக்கியம் . (ம-86)

# மட்டுவிலில் விழிப்புக்குழுக்கள்

தென்மராட்சி, ஜன.5

மட்டுவில்ப் பகுதியில் விழிப்புக் குழுக்களின் பணிகள் கடந்த முதலாம் திகதி தொடக்கம் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்தக் குழுக்களின் பணிகளை அந்தப் பகுதிப் படையினர் மேற்பார்வை செய்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

குடாநாட்டில் இடம்பெற்று வரும் குற்றச்செயல்களைத் தடுக்கும் நோக்குடன் அமைக்கப்பட்டுள்ள விழிப்புக் குழுக்களில் அந்தப் பகுதியைச் சேர்ந்த இளைஞர்கள் ஆர்வத்துடன் பங்குபற்றி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ஓ-207)

# குடாநாட்டு நெல் வயல்களில் இலைச்சுருட்டிப் புழுத்தாக்கம்

யாழ்ப்பாணம், ஜன.6

யாழ்.குடாநாட்டில் செய்கை பண்ணப்பட்டுள்ள நெல்வயல்களில் இலைச்சுருட்டிப் புழுவின் தாக்கம் அதிகரித்துக் காணப்படுகின்றது.

சுழிபுரம் மேற்கு, சங்குவேலி, மல்லாகம், அளவெட்டி, மறவன் புலவு, தனங்கிளப்பு, நாவற்குழி, வல்லிபுரம், மிருசுவில் வடக்கு, நுணாவில் கிழக்கு, நுணாவில் மேற்கு, மண்டுவில் வயல்வெளிகளில் இந்தத் தாக்கம் அதிகரித்துக் காணப்படுகின்றது.

குடாநாட்டில் தற்போது கால போகத்தில் நெற்செய்கை பண்ணப்பட்ட 10 ஆயிரத்தி 520 ஹெக்டெயரில் நெற்கதிர்கள் வளரும் நிலையில் இவ்வாறான இலைச்சுருட்டி நோய் ஏற்பட்டுள்ளமை விவசாயிகள் மத்தியில் கவலையை ஏற்படுத்தியுள்ளதாக யாழ்.விவசாயத் திணைக்களத்தினர் தெரிவித்துள்ளனர். (ம-7)

# மாணவர்களின் மதிய உணவு ஒதுக்கீடுகளில் மாற்றம்

யாழ்ப்பாணம், ஜன.6

பாடசாலை மாணவர்களுக்கு மதிய உணவு வழங்கப்படுவதற்கான உணவுப் பொருள் ஒதுக்கீடுகளில் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக வலயக்கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

இந்த நடைமுறை அனைத்துப் பாடசாலைகளிலும் இந்த மாதம் முதல் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் எனவும் அவர் அறிவித்துள்ளார்.

இதன்படி ஒரு மாணவருக்கான ஒதுக்கீடு வருமாறு:

அரிசி - 80 கிராம், பருப்பு - 25 கிராம், எண்ணெய் - 15 மில்லிலீற்றர்.

அத்தோடு தொண்டர் பணியாளர்களுக்கான ஒதுக்கீடும் மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

மா - 2.5 கிலோகிராம், பருப்பு - 300 கிராம், சீனி - 50 கிராம். ஆகியனவே வழங்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (ற-267)

# மீசாலையில் உழவர் தின நிகழ்வுகள்

கொடிகாமம், ஜன.6

வேம்பிராய் மீசாலையில் அமைந்துள்ள சமரச சுத்த சன்மார்க்க சத்திய ஞானக் கோட்டத்தில் எதிர் வரும் 15 ஆம் திகதி உழவர்தின நிகழ்வு இடம் பெறவுள்ளது.

அன்றைய தினம் அருட் சோதி ஆண்டவரின் வழிபாடு இடம்பெறும்.

அதிகாலை 4 மணி தொடக்கம் இரவு 8 மணி வரை பல்வேறு தியான நிகழ்வுகள் இங்கு இடம் பெறும்.

இக்கோட்டத்தில் தருமச்சாலை, சத்திய ஞானக் கோட்டம் மற்றும் தியான மண்டபம் என்பவற்றில் பல்வேறு தியான நிகழ்வுகள் இடம்பெறும்.

நிகழ்வின் முன்னுரையை கனகசபாபதி கேதீஸ்வரன் நிகழ்த்துவார். சிறப்புரையை 'வள்ளலாரும் சமுதாயமும்' என்னும் தலைப்பில் ஆ.சிவகுமார், சந்தர் வெங்கடாசலம் ஆகியோரும் நிகழ்த்துவர்.

வள்ளலார் அறப்பணி மன்றத்தினரால் போரினாலும் அமைதியாலும் பாதிக்கப்பட்ட குடும்பத்தினருக்கு 10 சைக்கிள்கள், 10 தையல் இயந்திரங்கள் என்பன இந்த நிகழ்வில் வைத்து வழங்கப்படும்.

கலை நிகழ்வில் அருட் சோதி வழிபாடு, உழவர் திருநாள் என்பன இடம்பெறும். (ம-22)

# மீண்டும் இயங்கும் மறவன்புலோ பாடசாலை

தென்மராட்சி, ஜன.6

மறவன்புலோ சகலகலாவல்லி வித்தியாலயம் மீண்டும் திங்கட்கிழமை இயங்கத்தொடங்கியுள்ளது. 2000ஆம் ஆண்டு யுத்த அனர்த்தங்களின்போது முற்றாக அழிக்கப்பட்டு சுவிஸ் அபிவிருத்தி நிறுவனத்தினரால் புனரமைக்கப்பட்டு கடந்த நவம்பர் மாதம் கையளிக்கப்பட்டது.

வித்தியாலயத்துக்குரிய தளபாடங்கள் கைதடி முத்துக்குமாரசாமி மகாவித்தியாலயத்தில் இருந்து தற்காலிகமாகப் பெறப்பட்டு திங்கட்கிழமை வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டன.

சாவகச்சேரி கோட்டக் கல்வி அலுவலர் கு.சிவானந்தம் மங்கல விளக்கேற்றி வித்தியாலய செயற்பாடுகளை ஆரம்பித்து வைத்தார். (ஓ-207)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:**
உங்களின் கடந்த கால விடயங்களை நினைத்துப் பார்ப்பீர்கள். பணப் பிரச்சினை ஒன்று புதிய உதவிகள் மூலம் சரியாகும். உங்களுக்கு விருப்ப மான பொருள் ஒன்றைப் பிறருக்குக் கொடுக்கலாம். நண்பர்களுடன் சேர்ந்து கொண்டாட்டங்களில் பங்கேற்பீர்கள். உங்களிடம் வாக்குக் கொடுத்த சிலர் அதைக் காப்பாற்றாமல் இழுத்தடிக்கலாம்.

**இடபம்:**
செலவுகளைக் குறைக்க வேண்டிய நாள். சாப்பிடக் கூட நேரமில்லாமல் சில வேலைகளைச் செய்வீர்கள். பொது வாழ்வில் உள்ளோர் வீண்பழிகளை தவிர்க்க எச்சரிக்கையாகச் செயற்பட வேண்டும். உடல் உபாதைகளைச் சந்திக்கலாம். கடன் பிரச்சினைகளை நினைத்துக் கவலைப்படு வீர்கள். அயலாரின் தொந்தரவு உண்டு.

**மிதுனம்:**
வீட்டுக்குத் தேவையான பொருள்கள் வாங்கலாம். பெண்களால் குடும்பத்தில் மகிழ்ச்சி, சந்தோஷம் அதிகரிக்கும். குடும்ப உறுப்பினர்கள் சிலர் வெளி யூர்ப் பயணங்கள் செல்லலாம். தூரத்து உறவினர் ஒருவரை எதிர்பாராமல் சந்திக்கலாம். தொழில் ரீதியான விடயங்களில் தைரியமாகச் சில முடிவுகளை எடுப்பீர்கள். நட்பு வட்டம் விரிவடையும்.

**கடகம்:**
பிள்ளைகளின் தேவைகளைப் பூர்த்தி செய்வீர்கள். சிலருடன் ஆரோக்கியமான விவாதங்களில் ஈடுபட லாம். வீட்டில் சில மாற்றங்களைச் செய்ய முற்படு வீர்கள். தேக ஆரோக்கிய விடயங்களுக்காகக் கணிசமான தொகையைச் செலவு செய்வீர்கள். பல மணி நேரமாகும் என நினைத்த காரியம் ஒன்று சுலபமாக முடியும்.

**சிங்கம்:**
நண்பர்கள் வழியில் அன்புத் தொல்லைகளைச் சந்திக்கலாம். ஒருவரை நம்பி ஒப்படைத்த வேலை ஒன்று முடியாமல் மற்றொருவரை நம்பி ஒப்படைக் கலாம். சிறிய விடயங்களுக்காகப் பெரிய அளவில் அலட்டிக் கொள்வீர்கள். எதிர்பாராமல் நடக்கும் நிகழ்ச்சிகளால் மன வருத்தம் அல்லது வியப்படையலாம். மறதியால் அவதிகளுக்கு ஆளாகலாம்.

**கன்னி:**
முக்கியமான செய்திகளைக் கேட்கலாம். வீண் வம்பு, விவகாரங்களில் தலையிடாமல் ஒதுங்கி இருக்க வேண்டும். தாய் வழியில் அன்புத் தொல்லைகளைச் சந்திக்கலாம். வியாபாரிகள் வாடிக்கையாளர்களிடம் கடுமையாகப் பேசுவதைத் தவிர்க்க வேண்டும். உங்களின் வேலை ஒன்று மற்றொருவரால் தடைப்படலாம். செலவுகளில் சிக்கனம் காட்ட வேண்டும்.

**துலாம்:**
திட்டமிட்ட காரியங்கள் எளிதில் நடக்கும் நாள். வாகன யோகத்திற்கு வாய்ப்புகள் உண்டு. உறவினர் களின் பாச மழையில் நனைவீர்கள். வெளிவட்டாரத் தொடர்புகள் விரிவடையலாம். பெண்கள் வழியில் அனுகூலமான உதவிகள் கிடைக்கலாம். சூழ்நிலையை அறிந்து சில விடயங்களில் சாதகமாக செயற்படுவீர்கள். வெற்றிகரமான நாள்.

**விருச்சிகம்:**
ஊக்கம், உற்சாகத்தை குறைக்கும் சம்பவங்கள் நடக்கலாம். சில வேலைகளை வேகமாகத் தொடங்கி விட்டுப் பாதியில் விட்டு விடுவீர்கள். சிலரிடம் வாயைக் கொடுத்து வம்பில் மாட்டிக் கொள்ளலாம். வெளியூருக்குப் புறப்படும் நேரத்தில் யாராவது வந்து தொந்தரவு கொடுக்கலாம். மற்றவர்களை விமர்சிப்பதைத் தவிர்க்கவும்.

**தனுசு:**
சிரமப்பட்டுச் சில வேலைகளைச் செய்தாலும், அதனால் ஆதாயம் பெறுவீர்கள். மாமன், மைத்துனர் களுக்காகச் சிறு செலவுகளைச் செய்யலாம். அரசியல் வாதிகள் வீண் பேச்சுகளைத் தவிர்க்க வேண்டும். பிள்ளைகளால் மகிழ்ச்சி, சந்தோஷம் அடைவீர்கள். வியாபாரி களுக்குப் பணப்புழக்கம் அதிகரிக்கும். அடகு வைத்த பொருள் களை மீட்க நேரிடலாம்.

**மகரம்:**
மனதில் தன்னம்பிக்கை, உற்சாகம் அதிகரிக்கும். கணவன் மனைவி இடையே அன்னியோன்யம் கூடும். குறுக்குவழிச் சிந்தனைகளை விரட்டி நேர் வழியில் செயற்பட முற்படுவீர்கள். மலைபோல் வந்த பிரச்சினை ஒன்று பனி போல் விலகி விடும். நீண்ட நாள்களாகச் செல்லாத உறவினர் ஒருவரின் வீட்டிற்குச் செல்லலாம். தொழில் ரீதியான வரவு உண்டு.

**கும்பம்:**
வீண் பழிகள் விலகிப் பாராட்டுப் பெறுவீர்கள். உள்ளம் மகிழும் நிகழ்ச்சி ஒன்று நடக்கலாம். ஒன்றுக்கு மேற்பட்ட பணவரவுகளைப் பெறலாம். நடக்குமோ, நடக்காதோ என நினைத்த காரியம் ஒன்று எளிதில் நடந்து விடலாம். ஏட்டிக்குப் போட்டியாகச் செயற்பட்ட குடும்ப உறுப்பினர்கள் அனுசரணையாக இருப்பர். வெளியூர்ப் பயணங் கள் செல்லலாம்.

**மீனம்:** தொடங்கிய பணிகள் தடையின்றி நடக் கும் நாள். சொந்த பந்தங்களின் விருப்பங்களை நிறை வேற்றி வைப்பீர்கள். வீட்டில் வசதி வாய்ப்புகளை அதிகரிப்பீர்கள். கொடுத்த வாக்குறுதியைக் காப்பாற் றுவீர்கள். வியாபாரிகள் அதிகளவில் முதலீடு செய்யா மல் எச்சரிக்கையோடு செயற்படுவது நல்லது. சில வேலைகளுக் காக நீண்ட நேரம் காத்திருக்கலாம்.

# மேல் மாகாண தனியார் பஸ்கள் பணிப் பகிஷ்கரிப்புக்கு ஏற்பாடு

இரண்டு பிரதான கோரிக்கைகளை முன் வைத்து மேல்மாகாண தனியார் பஸ்சேவை யாளர்கள் 10 ஆம் திகதி நள்ளிரவு முதல் பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபடவுள்ளனர்.

குறைந்த பட்சக் கட்டணம் ஒரு ரூபாவால் அதிகரிக்கப்பட வேண்டுமென்பதும் மேல் மாகாணத்தில் மேலும் 20 சதவிகித பஸ்களுக்கு அனுமதி வழங்கி போக்குவரத்து அமைச்சு அதிகாரிகள் எடுத்துள்ள தீர்மானத்தை நிறுத்த வேண்டுமென்பதும் அவர்களது இரு பிரதான கோரிக்கைகளாகும்.

நாரஹேன்பிட்டியிலுள்ள மகளிர் ஆராய்ச்சி கேந்திர நிலையத்தில் இலங்கைத் தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கமும் ஐக்கிய இலங்கை தனியார் பஸ் சம்மேளனமும் கூட்டாக நடத் திய பேச்சுவார்த்தைகளின் போதே இத்தீர் மானம் வெளியிடப்பட்டது.

நேற்று முன்தினம் நடைபெற்ற பேச்சு வார்த்தை களின் பின் இருசாராரும் உடன்படிக்கை ஒப்பந்தமொன் றில் கைச்சாத்திட்டனர்.

போக்குவரத்து அமைச்சின் அதிகாரிகள் தொடர்ந் தும் தனியார் பஸ் சேவையினர் முகம் கொடுக்கும் பிரச்சினைகளுக்கான தீர்வுகளை வழங்குவதில் பாராமுகம் காட்டி வருகின்றனர்.

தொடர்ந்தும் இத்தகைய இக்கட்டுகளை சமாளிக்க முடியாத காரணத்தினால் இந்தப் பணிப் பகிஷ்கரிப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

ஐக்கிய இலங்கைத் தனியார் பஸ் உரிமையாளர் சம்மேளனத்தின் தலைவர் ஸ்டான்லி பர்ணாந்துவும் தனியார் பஸ் உரிமையாளர் சங்கத் தலைவர் கெமுனு விஜேரத்தினவும் கூட்டாக இந்த அறிவிப்பைவிடுத் தனர். (ம-5)

## இறைவனுக்கு வாழ்த்து....



புதியவழி: உடுவில் மகளிர் கல்லூரியில் இடம்பெற்ற கிறிஸ்மஸ் நிகழ்வில் மாணவர்கள் கிறிஸ்மஸ் கீதம் இசைக்கின்றனர். (86)

## குழந்தைகள்



சுவாரசியமான கதை ஒன்று....

அப்பா தன்னுடைய பிள்ளையைப் பார்த்து ''நீ எப்போதும் உன்னைவிடப் புத்திசாலியான பிள்ளை களுடன் சிநேகிதம் வைத்தி ருக்க வேண்டும் அதுதான் நல்லது'' என்றார்.

உடனே அந்தச் சிறுவன் ''நீங்கள் சொல் வது சரிதான்... ஆனால் என்னைவிட மோச மான சிறுவர்களுக்கு ஒரு புத்திசாலிச் சிறு வன் தேவை இல்லையா? அதுதான் அந்தச் சிறுவனாக நான் இருக்கிறேன்'' என்றான்.

சின்னபிள்ளைகளிடம் இருக்கும் இந்தப் புத்திசாலித்தனத்தைப் பெற்றோர்கள் தூண்டி விட வேண்டும். அதை அடக்கிவிடக் கூடாது.

முற்காலத்தில் இருந்த இனேடியஸ் கார்ட் னர் என்ற அமெரிக்க குழந்தை உளவியல் நிபுணர் ''குழந்தைகள் எதிர்த்துப் பேசுவதை ஓரளவுக்கு அனுமதிப்பது நல்லது'' என்று கூறியுள்ளார்.

உங்களது குழந்தை உங்களை எதிர்த்து ஏதாவது சொன்னால் உடனே நீங்கள் ''முளைத்து மூன்று இலை வளரவில்லை அதற்குள் உனக்கு இவ்வளவு திமிரா?'' என்று கேட்கக்கூடாது.

சிறிய வயதில் பெரியவர்களை எதிர்த்துப் பேசிவிட்டால் பிற்காலத்தில் அந்தக் குழந்தை பாதிக்கப்பட்டுவிடும் என்று நினைப்பது தவறு.

அப்பாவுக்குத் தெரியாத ஒரு கணக்கைப் பிள்ளை சரியாகப் போட்டுக் கொள்கிறான். உடனே அந்த அப்பா அதனைத் தனக்கு அவ மானமாக நினைக்கக்கூடாது. அதைவிடப் பெரிய அவமானம் எல்லாம் தாங்கிக் கொள் பவருக்குப் பிள்ளை செய்ததுதான் பெரிதா கப் போய்விட்டதா?

எமது பிள்ளை எம்மைவிடப் புத்திசாலி யாக இருக்கின்றான் என்று நினைத்துப் பெரு மைப்படவேண்டும்.

குழந்தை உங்களிடம் ஏதாவது கூற விரும்பினால் அதைக் கொஞ்சம் பொறுமை யாகக் கேட்கவேண்டும்.

அந்தக் குழந்தை தான் செய்த ஒரு காரி யத்துக்கு அல்லது செய்யப்போகும் ஒரு காரியத்துக்கு என்ன காரணம் சொல்கிறது என்பதைப் பரிவோடு கேட்கவேண்டும். சின் னப்பிள்ளை ஏதோ விளையாட்டுத்தனமாகப் பேசுகிறது என்று நினைத்துக்கொண்டு வேறு எங் கேயாவது கவனத்தைச் செலுத்தக்கூடாது.

ஒரு சிறுவன் தெருவில் விளையாடிக்கொண்டு இருக்கிறான். அப்போது அவனுடைய அம்மா அவனை அழைத்து ''டேய் இங்கேவா.. கடைக்குப் போய்த் தேயிலை வாங்கிக் கொண்டு வா!'' என்று கூறுகிறாள். ஆனால் சிறுவனோ விளையாட்டில் ஏதோ ஒரு முக்கியமான கட்டத்தில் இருக்கிறான். எனவே ''கொஞ்சம் பொறுத்துக்கொள் அம்மா கொஞ்ச நேரம் கழித்துக் கடைக்குப் போய் வரு கிறேன்'' என்கிறான்.

இந்தச் சமயத்தில் அந்த அம்மா விட்டுக் கொடுக்க வேண்டும் கோபப்படக்கூடாது. '' டேய் .... இப் பொழுது கடைக்குப் போகத்தான் வேண்டும். வரு கிறாயா? இல்லையா?'' என்று வற்புறுத்த ஆரம்பித் தால் அந்தக் குழந்தைக்கு ஏமாற்றம்- கோபம்- வெறுப்பு அனைத்தும் வந்தவிடும். இது நல்லதல்ல.

அதனால் குழந்தைக்கு நியாயமான பேச்சுரிமை யைக் கொடுக்க வேண்டியது அவசியம் என்று குழந்தை உளவியல் நிபுணர்கள் சொல்கிறார்கள். பிள்ளைகள் ஏதாவது சந்தேகம் கேட்டால் அதற்குப் பதில் தெரியவில்லை என்பதற்காகத் தந்தைமார் கோபப்படக்கூடாது. தந்தைமாரால் பதில் சொல்ல முடியாத கேள்விகள் எவ்வளவு உலகத்தில் இருக்கின் றன. ஒரு சிறுவன் அவனது அப்பாவைப் பார்த்து ''அப்பா ஒரு கல்லை கையில் இருந்து போட்டால் ஏன் தரையில் விழுகிறது'' என்று கேட்டான்.

''புவியீர்ப்புச் சக்திதான் அதற்குக் காரணம். கீழே இருக்கும் அந்தச் சக்தி கல்லை இழுக்கிறது'' எனப் பதில் கூறுகிறார் அப்பா.

''இந்தச் சக்தி ஏன் மேலே இழுக்கக்கூடாது? எதற் குக் கீழே இழுக்கிறது?'' என்கிறான் சிறுவன்.

அப்பா என்ன செய்வது என்று யோசித்துவிட்டு ''அவசரமாக வேலை இருக்கிறது. பின்னர் வந்து பதில் சொல்கிறேன்'' என்று மெதுவாக நழுவிவிட் டார். பிள்ளைகளுக்குள்ளே பிரத்தியேகமாகச் சில சந்தேகங்கள் வரும். அதையெல்லாம் சமாளிப்பது சிரமம்தான்.

ஓர் ஆசிரியர் வகுப்பில் கல்வி கற்பித்துக் கொண்டி ருந்தார். அப்பொழுது வேடிக்கையாகக் கூறினார்.

''மாணவர்களே! இந்த உலகம் ஒருநாள் அழியப் போகிறது; எரிமலையாகக் குமுறப் போகிறது; வானம் இடிந்து விழப்போகிறது. இவ்வாறு வரிசை யாகக் கூறிக்கொண்டு இருந்தார்.

இதைக் கேட்டுக்கொண்டிருந்த ஒரு மாணவன் பொறுமையாக எழுந்து நின்று '' அன்று பாடசாலை இயங்குமா?'' எனத் தனது சந்தேகத்தைக் கேட்டான். அந்தநேரத்தில் இதுதான் அவனுடைய சந்தேகம்.

கோ.சுவாமிநாதன்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இருளின் கதவுகளைத் திறந்தவன் ③


இவன்தான்
யூலியன் அசோஞ்சே

இரகசியங்களைப் பற்றி அறிவதில் யாருக்குத்தான் ஆர்வம் இருக்காது? (ஆனாலும் விடுப்பு அறிவதில் யாழ்ப்பாணத்தவர்களுக்கு இருக்கும் அதீத ஆர்வத்தை உலகில் எந்தக் கொம்பனாலும் மிஞ்ச முடியாதுதான்) இந்த ஆர்வம் விக்கிலீக்ஸ் இணையத்தளத்தை நோக்கி எல்லோரது கண்களையும் ஒரே கணத்தில் ஈர்த்தன. ரகசிய முடிச்சுகளின் அவிழ்ப்புகள் நிகழும் போதெல்லாம் விக்கிலீக்ஸின் புகழும், யூலியன் அசாஞ்சேயின் சாகசங்கள் பற்றிய கதைகளும் வளர்முகமாவது வாடிக்கையான விடயமாகிப் போனது.

ஆரம்பத்தில் விக்கிலீக்ஸையும் யூலியனையும் பற்றிப்பெரிதாக எந்தவொரு நாடும் அலட்டிக் கொள்ளவில்லை.தன்னுடைய இணையத்தளத்தின் பார்வையாளர் வட்டத்தை விரிவுபடுத்தவே இத்தகைய -ஒரு சில-தனிப்பட்ட நபர்களின் முக மூடிகளைக் கிழிப்பதாக அவை நினைத்துக் கொண்டிருந்தன. அப்படி அவை நினைக்க வேண்டும் என்பதுதான் யூலியனின் திட்டமும் கூட. (அது ஏன் என்பது இத்தொடரில் பிறிதொரு சந்தர்ப்பத்தில் விரிவாகச் சொல்லப்படும்)

ஆனாலும் ஆட்டைக்கடித்து, மாட்டைக் கடித்து, கடைசியில் உலகநாடுகளின் கனவான் வேடத்தை யூலியன் அசாஞ்சே உரிக்கப்போவது தெரியாவிட்டாலும் கூட ஒருசில நாடுகள் உள்ளூற ஒருவித உதறலோடுதான் விக்கிலீக்ஸை நோட்டமிட்டுக் கொண்டிருந்தன.

ஔண்யன்

எனவே பரபரப்பு நெருப்பைத் தினமும் தனது இணையத்தினூடாகப் பற்றவைத்து -பதற வைத்து- கொண்டிருக்கும் யூலியன் அசாஞ்சேயின் நதிமூலம், ரிஷிமூலத்தை அறிவதில் அவசரமாகச் சில நாடுகள் இறங்கின.அதன்மூலம் யூலியன் அசாஞ்சேயின் குணவியல்புகள், பலம்,பலவீனம் என்பவற்றைக் கண்டறிந்து, தேவைப்படும் பட்சத்தில் யூலியனுக்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம் என அவை நினைத்தன.

இணையங்களின் வழியே தொழில்நுட்ப முடிச்சுகளால் சூழப்பட்டு, இறுகத் தாழிடப்பட்டிருந்த உலகின் இரகசியக் குகைகளைத் திறப்பதற்காக யூலியன் இரவு பகலாகப் போராடிக்கொண்டிருக்கையில் , யூலியனின் கடந்த காலத்தை அறிவதில் காலம் முழுதையும் அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளின் புலனாய்வு அமைப்புகள் செலவிட்டுக் கொண்டி ருந்தன.

இதன் விளைவாகத் தனிப்பட்ட வாழ்வில் துயர் படிந்த, அந்தத் துயரங்களையே சவாலாகக் கொண்டு எழுந்த ஒரு மனிதனின் கடந்தகாலம் உலகின் பார்வைக்கு வந்தது.

வாசகர்களே! நீங்கள் நிறையத் தமிழ்சினிமாப் படங்களைப் பார்த்திருப்பீர்கள் தானே! அப்படியென்றால் இப்போது உங்கள் கண்ணைச் சற்று மேல் நோக்கிப் பார்ப்பது போல் செய்யுங்கள். டொய்ய்ங்ங்ங்... என்ற ஒலி எழுப்ப ஒரு வர்ண வளையம் ஒன்று உங்கள் கண்ணுக்கு முன்னால் சுற்றுவதாக நினைத்துக்கொள்ளுங்கள்.

இப்போது புரிந்திருக்குமே? ஆம்! இப்போது நீங்கள் யூலியனின் கடந்தகாலத்துக்குள் நுழையப்போகிறீர்கள். அதற்காகத்தான் இந்தச் சினிமாப் படப் பாணியிலான பில்டப்.

இடைவிடாது சுற்றிக் கொண்டிருக்கும் வளையத்தின் வழியே பயணியுங்கள். இப்போது அந்த வளையம் உங்களை 1971 ஆம் ஆண்டுக்குப் பின்னோக்கி அழைத்துச் சென்றுவிட்டது.

1971 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 3ஆம் திகதி. அவுஸ்திரேலியாவின் குயின்ஸ்லாந்தில் ரவுண்ஸ்வில்லெ என்னும் இடத்தில்தான் யூலியன் அசாஞ்சேயின் பிறப்பு நிகழ்ந்தது.

ஆனாலும் அதிலும் ஒரு மர்மம் இன்னமும் அவிழ்க்கப்படாமலே இருக்கிறது. யூலியனின் உண்மையான அப்பா யார்? என்பதே அந்த மர்மம். பல ஆண் நண்பர்களுடன் உறவு வைத்திருந்ததால், யூலியனின் தாயாரான கிறிஸ்ரினுக்குக் கூட குழந்தையின் அப்பா யாரென்பது தெரியவில்லை. ஆனாலும் காலமும் , கிறிஸ்ரினாவின் புதிய காதலும் யூலியனுக்கு அவனது முதலாவது வயதில் ஒரு தந்தையைப் பரிசளித்தன.

கண்முன்னாலேயே தன் தாயின் திருமணத்தைக் காணும் பாக்கியம் யூலியனுக்குக் கிடைத்தது. கிறிஸ்ரினாவின் கரம் பிடித்தவரின் பெயர் ப்ரெட் அசாஞ்சே. ( அவுஸ்ரேலிய வேகப்பந்து வீச்சாளர்) ப்ரெட் லீயின் முகச் சாயலுடன் யூலியன் அசாஞ்சேயின் முக அமைப்பும் ஒத்துப்போவதாலும், ப்ரெட் என்ற பெயர் இருப்பதாலும் யூலியனினதும், ப்ரெட் லீயினதும் தந்தைதான் இந்த ப்ரெட் அசாஞ்சே எனத் தப்புக் கணக்குப் போட்டுவிடாதீர்கள்.

ப்ரெட் அசாஞ்சே ஒரு திரையரங்கத்தின் சொந்தக்காரர். கை நிறைய அவரிடம் பணமிருந்ததைப் போலவே பரந்த மனதுமிருந்தது. அதனால்தான் ஒரு குழந்தைக்குத் தாயான கிறிஸ்டினாவை மணம் முடித்ததுடன் அந்தக் குழந்தைக்குத் (யூலியனுக்கு) தனது பெயரை முதலெழுத்தாகவும் (இனிஷியலாக) வழங்கினார்.

**யூலியன் அசாஞ்சே பற்றிய ஒரு விறு விறு தொடர்**

ஒருவயதில்தான் யூலியனுக்கு இனிஷியல் கிடைத்தது. வெறும் யூலியனாக இருந்தவன் இதற்குப் பின்னர், அசாஞ்சே போல் யூலியன் என்ற பெயர் கொண்டவனாக மாறினான். வளரும் பருவத்திலேயே தேடல் கொண்ட குழந்தையான யூலியன் எப்போதும் எதையாவது நோண்டிக் கொண்டேயிருப்பான்.

அவன் எப்போதுமே ஒரு துடிப்பான சிறுவனாகவே இருந்தான். எது சரி, எது பிழை என்பதை மிகச் சிறு வயதி லேயே அவன் பிரித்தறியும் ஆற்றலைக் கொண்டிருந்தான். அது எல்லோருக்குமே ஆச்சரியமாக இருந்தது. குறிப்பாகஒரு சிலர் மக்களை அடிமைகள் போல் நடத்துவதை அறிந்தால் அவன் கோபக்காரனாக மாறிவிடுவான் என்று யூலியனின் சிறுவயதுக் குணத்தை விவரிக்கிறார் அவனுக்குத் தனது முதற்பெயரை வழங்கிய, அவனது தந்தையாக 8 வருடங்கள் இருந்த ப்ரெட் அசாஞ்சே.

இப்போது உங்களுக்கு ஒரு கேள்வி எழுந்திருக்கும். ப்ரெட் ஏன் யூலியனின் 8 வயது வரை மட்டும் தந்தையாக இருந்தார்? அதற்குப் பின் என்ன நடந்தது?

(திரைகள் இன்னும் திறக்கும்)

# இன்புளுவென்சா H1 N1 நோயில் இருந்து பாதுகாப்பது எப்படி?

இன்புளுவென்சா HI NI என்பது புளு (Flu) காய்ச்சல் போன்ற நோயாகும். இந்த நோய் ஒருவரிலிருந்து இன்னொருவருக்கு மூக்கிலிருந்து வெளியேறும் சளி மற்றும் இருமும் போதும் வெளியேறும் கிருமிகள் மூலம் தொற்றுகின்றது. இந்தநோய் முன்னர் பன்றிக்காய்ச்சல் என்றழைக்கப்பட்டது. ஆயினும் இந்த நோய் பன்றிகளிலிருந்து தொற்றுவதில்லை என்ற காரணத்தால் இப்பொழுது 'பன்றிக்காய்ச்சல்' என்று அழைக்கப்படுவதில்லை. இது ஒரு புதிய வகை வைரஸ் கிருமியினால் ஏற்படும் நோய் ஆகையால் பெரும்பாலான மக்கள் இந்த நோய்க்கான எதிர்ப்பு சக்தியை கொண்டிருப்பதில்லை. ஆகவே இந்த நோய் மிகவும் வேகமாகப் பரவி வருகின்றது. இது சிறு பிள்ளைகள் மற்றும் இளம் வயதினர் மத்தியில் அதிகமாக பரவுகின்றது.

### குணங்குறிகள்

பொதுவாக இது ஒரு சாதாரண நோயாகும். ஆகவே தேவையற்ற பதற்றம் அடையத் தேவையில்லை. பொதுவான குணங்குறிகளாக காய்ச்சல், தலையிடி, உடல் வலி, தொண்டை வலி, இருமல், மூக்கிலிருந்து சளி வடிதல் காணப்படும்.

சில வேளைகளில் வாந்தி மற்றும் வயிற்றுப்போக்கு ஏற்படும். இது சாதாரண தடிமன் போன்றது. ஆகவே, மற்றைய இன்புளுவென்சா காய்ச்சல் வகைகளிலிருந்து வேறுபடுத்தி இனங்காண்பது கடினமானது. இந்தநோய் சில நோயாளிகளிலிருந்து நியூமோனியாக் காய்ச்சலாக மாறக்கூடிய வாய்ப்புண்டு.இவ்வாறு நியூமோனியா காய்ச்சலாக மாறுமிடத்து மூச்சு விடுதல் கடினமாக இருக்கும். மேலும் கடுங்காய்ச்சலாகக் காணப்படக் கூடும் அல்லது காய்ச்சல் காணப்பட்டாலும் நோய் கடுமையாகும்.

மேற்கூறிய குணங்குறிகள் காணப்படின் செய்யப்பட வேண்டியவை,

✱ குணங்குறிகள் அகலும் வரை நோயாளி படுக்கையில் ஓய்வெடுத்தல்

✱ சன நெருக்கடி மிகுந்த இடங்களைத் தவிர்த்தல்.இது நோய் பரவுதலைத் தடுக்கும்.

✱ போசாக்கு மிகுந்த உணவு வகைகளையும் அதிகளவு நீராகாரங்களையும் உட்கொள்ளுதல்

✱ குடும்ப வைத்தியரிடம் குணங்குறிகளுக்கான வைத்திய ஆலோசனை பெறுதல். சாதாரண நோய்க்கு விசேட வைத்திய சோதனைகள் மற்றும் வைத்தியசாலையில் தங்கியிருந்து சிசிக்கை பெறுதல் முதலியன தேவையில்லை.

✱ சவர்க்காரம் கொண்டு கைகளை அடிக்கடி கழுவுதல்.

✱ தும்மும் போதும் இருமும் போதும் கைக்குட்டையை உபயோகித்தல் பேப்பர் ருசு உபயோகிப்பின் அதை உரிய முறையில் அகற்றவேண்டும். எக்காரணம் கொண்டும் கைகளை உபயோகிக்கக் கூடாது. கைகளில் மூலம் மற்றைய இடங்களைத் தொடும்போது இவ்வைரஸ் மற்றைய இடங்களுக்கும் பரவக்கூடும்.

✱ அரிதாக சிலரில் இந்த நோய் முற்றி நியூமோனியா வகை மாறக்கூடும் அல்லது வலிப்புகள் ஏற்படக்கூடும். மேலும் தடுமாற்றம், மாறுபட்ட விழிப்புணர்வு ஏற்படக்கூடும்.

கடுங்காய்ச்சல், மூச்சுவிடுல் கடினமாதல், மாறுபட்ட விழிப்புணர்வுக் குணங்குறிகள் கடுமையாக அதிகரித்தல், உடற்சோர்வு போன்ற குணங்குறிகள் காணப்படின் வைத்திய ஆலோசனை பெற வேண்டும்.

### இந்த நோய்க்கு சிகிச்சை உண்டா?

இந்த நோய் பற்றிய ஆய்வுகள் நோய் முற்றிய நோயாளிகளுக்கும் நோய் ஆபத்து சாத்தியக்கூறுகள் அதிகமானவர்களுக்கும் மட்டுமே அவசியமாகும். ஆகவே எல்லோரும் பதற்றப்படவோ வைத்திய சோதனைகள் செய்யவேண்டியோ அவசியமில்லை. இந்த நோய் கடுமையாகுமிடத்து அதை எதிர்கொள்ளத் தேவையான வளங்களும் மருந்துகளும் நம் நாட்டில் உண்டு. ஆகவே இதைக்குறித்து கவலைப்படத் தேவையில்லை.

### அதிக கவனம் எடுக்க வேண்டியவர்கள் யார்?

கடுமையாக நோய் வாய்ப்படக்கூடிய சாத்தியக்கூறுகள் அதிகம் உள்ளவர்கள் 2வயதிற்கு உட்பட்டவர்கள், 65 வயதிற்கு மேற்பட்டவர்கள், கர்ப்பிணிகள், நீரிழிவு ஆஸ்மா, சிறுநீரக நோய், புற்றுநோய், உள்ளவர்கள் பிரட்னிசலோன் (Perdnisolone) மருந்து நீண்ட காலமாக பாவிப்பவர்கள்.

நீங்கள் மேற்குறிப்பிட்ட குழுவைச் சேர்ந்தவராயின் அதிக கவனம் எடுக்க வேண்டும்.

### இந்த நோயிலிருந்து பாதுகாப்பது எப்படி?

✱ சன நெருக்கடி மிகுந்த இடங்களை தவிர்த்தல்.

✱ சவர்க்காரம் கொண்டு அடிக்கடி கை கழுவுதல்.

✱ வாய் மற்றும் மூக்குப் பகுதிகளை தேவையின்றி தொடுவதை தவிர்த்தல்.

✱ மூக்கால் நீர்/சளி வடியும் நோயாளிகளிடமிருந்து குறைந்தது ஒரு மீற்றர் தூரம் தள்ளி நிற்றல்.

✱ வீடுகளிலும் அலுவலகங்களிலும் ஜன்னல்களைத் திறப்பதன் மூலம் காற்றோட்டத்தை அதிகரிக்கச் செய்தல்.

✱ Mask உபயோகிப்பின் மூக்கையும் வாயையும் மூடக்கூடியதாகச் சரியான முறையில் அணியப்படவேண்டும். தவறான உபயோகம் நோய் தொற்றும் சாத்தியக்கூறுகளை அதிகரிக்கும். நோய்த் தொற்றுதலைத் தவிர்க்க ஒரு சுகதேகி Mask அணிவதைப் பார்க்கிலும் நோயாளி நோய்பரவுதலைத்தடுக்க Mask அணிவதுசிறந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# இறுக்கம் நீக்கும் புன்னகை.....

*(சென்றவாரத்தொடர்ச்சி....)*

''வாய்விட்டுச் சிரித்தால் நோய்விட்டுப்போகும்'' என்பது பழமொழி. ஒருவரின் உடலுக்கும் உள்ளத்துக்கும் அதிகம் தொடர்பிருப்பதாக மருத்துவர்கள் கூறுகின்றனர். எப்போதும் மனப்பாரத்தோடும், எதிலும் நம்பிக்கையில்லாமலும் இருந்தால் நம்முடைய உடலில் உள்ள நோய் எதிர்ப்பு சக்தி குறையும் என்பதை அனேக மருத்துவ ஆராய்ச்சிகள் ஆமோதிக்கின்றன. ஆனால் முகத்தில் புன்னகை வீசினால் மனசுக்குள் மகிழ்ச்சி கீதமாக இசைக்கும். எப்போதும் கலகலவென்று சிரித்துக் கொண்டு வலம் வந்தால் நோய் நம் பக்கத்தில் வர அஞ்சும்.

புன்னகை மற்றவர்களை வசீகரிக்கின்றது. உங்களுக்கு ஒருவர் புத்திமதி சொல்லும் போது அவருடைய முகபாவனை எப்படி இருக்க வேண்டும் என்று நீங்கள் விரும்புவீர்கள்..? அவருடைய முகம் கடுகடுவென்று இருந்தால் அது அவருடைய கோபத்தையும் எரிச்சலையும் வெறுப்பையும் கூட வெளிப்படுத்தும். மறுபட்சத்தில் அவர் முகத்தில் இதமான புன்னகை தவழ்ந்தால் நீங்கள் சௌகரியமாக உணர்ந்து, அவர் சொல்லும் அறிவுரைகளைத் தாராளமாக ஏற்றுக்கொள்ளுவீர்கள் அல்லவா..? மன இறுக்கமான சூழலில் ஒருவருக் கொருவர் தவறாகப் புரிந்துகொள்ளுவது சகஜம். ஆனால் அந்தநேரத்தில் கூட புன்னகை வீசினால் மனஸ்தாபங்கள் மறையலாம்.

புன்னகை நல்லெண்ணங்களின் பூக்கள். புன்னகை செய் என்று சொன்னதும் பளீரென்று புன்னகை வீச நாம் ஒன்றும் திறமையான நடிகர்கள் அல்ல, அது போல் புன்னகைக்க நாம் விரும்புவதும் இல்லை.

**(வளரும்)**

## மரணத்தின் நியதி...

காலங்கள் கடக்கும் போது
இறைவன் தன்னுடன் ஆன்மாவை
அழைக்கின்றான் என்று கூறும்
வாய்மொழியைக் கண்ணறியக்
கண்டது யார்? இவ்வுலகில்

எமதர்மனின் உன்னத தொழில்
உயிர்பறிப்பது ஆனால்
இப்பாரினில் மனிதனே
எமனின் தொழிலைப் புரிகிறானே
நொடிகள் விலகும் வேளைதனில்
எமனிற்கே வேலை இன்றி
இருக்கலாம் அல்லவா மனிதா!
அனைத்துக் கொடுமைகளையும் கண்டு
உயிரற்ற ஜடமாய் இருக்கும் காலம் இன்று
உயிர் உடலை விட்டுப்பிரியும் வேளையில்
பாசம் எனும் கயிறு வேரோடு அறுந்து
செல்கிறதே அதை தடுப்பது யாரம்மா?
மனித வாழ்நாளில் ஒவ்வொரு வேளையும்
பலவித கண்டு பிடிப்புக்களில் மிதப்பதை
நீ அறிவாய் ஆனால் எங்கு இருக்கிறது?
எவ்வாறு இங்கு வருகிறது? எங்கே செல்கிறது?
என்று கண்டுபிடிப்பதுண்டா?
இயலாத காரியத்தின் பேச்சு எதற்கு நண்பா
கொடூரமான மரணம் இவ்வுலகில் உருவான
அனைவரிற்கும் இலவச அன்பளிப்பாகக் கிடைக்கும்
மரணத்தின் நியதியை எவராலும் மாற்றியமைக்க முடியாது
கிருஷ்ண பகவத்கீதை போன்று பூமியின்
ஒவவொரு செய்கையும் விதியைப் பொறுத்தே
நிகழ்கிறது என்பது மெய்தானா கண்ணே?
ஒத்திகை முடிந்து விட்டது மனித குலமே
நாடகத்தைச் சந்திக்கலாம் உயிர் உள்ளவரை.....

இ.லக்ஷிகா

**ஆறாவது விவாதமேடைப் பகுதியில் 'எமது இளையோர் மத்தியில் எய்ட்ஸ் பற்றிய விழிப்புணர்வு 'இல்லை' என்ற அணி வெற்றி பெற்றுள்ளது. இதில் இல்லை என்ற அணிக்காக 1226 வாக்குகளும், இருக்கிறது என்ற அணிக்காக 460 வாக்குகளும் கிடைத்துள்ளன.**

**விழிப்புணர்வு இல்லை என்ற அணிக்காக வாக்களித்தவர்களில் தேர்ந் தெடுக்கப்பட்டவர்கள்:**

இ.சிந்துஜா – வைரவர் கோயில் வீதி, அரியாலை.
சி.அனோஜனா – கோயில் வீதி, நல்லூர்.
கே.சரண்கா – விளையாட்டரங்க வீதி, கோப்பாய்.

**சிறந்த ஆக்கத்தை அனுப்பியவர்:**

சி.லினேஸ் – ஊர்காவற்றுறை.

**சிறந்த ஆக்கங்களை அனுப்பியோர்:**

க.சோபிகா
எஸ்.அசோக்கமாலா
து.சுஜிதா
து.திலக்
சி.கயனி

**சிறந்த கவிதை அனுப்பியவர்:**

ஏ.எம்.கமால்

## குடாநாட்டு மாணவர்களின் பரீட்சைப் பெறுபேறுகளில் முக்கிய பங்கு வகிப்பது....




### பாடசாலை

இன்றைய மாணவர்கள் ஒழுக்கத்துடன் கூடிய கல்விப்பெறுபேற்றையும் கல்விப்பெறுபேற்றுடன் கூடிய இணைப்பாடவிதானச் செயற்பாட்டுப் பெறுபேற் றையும் பெறவேண்டும். சமநிலை ஆளுமை விருத்தியைப் பெறவேண்டும். இதுவே உயர்ந்த பெறுபேறு ஆகும்.

பாடசாலையில் கற்பிக்கும் ஆசிரியர்கள் கல்வியமைச்சினால் தராதரம் பார்த்துத் தெரிவு செய்யப்பட்டவர்கள் அல்லது பயிற்று விக்கப்பட்டவர்கள். தனியார் கல்வி நிறுவனங்களில் அப்படியில்லை.

பணம் ஈட்டுவது ஒன்றே குறிக்கோள். எனவே அரைத்த மாவை அரைக்கும் செயற்பாடே அங்கு நடைபெறுகிறது. 'பகிடிவிட்டுப் படிப் பித்தல்' எனும் கவர்ச்சிகாட்டி, பாடம் 15 நிமிடம், பம்பல் 30 நிமிடம், தேநீர் அருந்துதல் 10 நிமிடம், சுயபுராணம் 5 நிமிடம், பிந்திவருதல் 10 நிமிடம், முந்திச் செல்லுதல் 10 நிமிடம் எனவும் நேரச் சுரண்டல் இடம்பெறுகிறது. மாணவரது சுயதிறன் வெளிப்பாடான ஆக்கத்திறன், பரிசோதனைமுறை எதுவும் அங்கு இல்லை.

ஒரு வகுப்பறை முகாமைத்துவத்தில் 40 மாணவருக்குமேல் அமைந்தால் எந்த வித்துவானாலும் எதுவும் செய்யமுடியாது. ஆனால் தனியார் கல்வி நிலையங்கள் 100 பேர், 200 பேர், 900 பேர், 1000 பேர் எனக் கொண்டு திருவிழாவும், நெரிசல்களும், சல்லாபங்களும் நடக்கின்றன.

அத்துடன் ''தனியார் கல்வி நிறுவனங்களைத் தமது பெறு பேற்றுக்குக் காரணமான நிறுவனம் என மாணவர்கள் ஏன் விளம்பரப் படுத்து வதில்லை?'' இதிலிருந்தே நீங்களே விளங்கிக் கொண்டிருப் பீர்கள். பெறுபேற்றுக்கு யார் காரணம் என்று.

நாக. தமிழிந்திரன்

### தனியார் கல்வி நிலையம்

அனேகமான பாடசாலை மாணவர்கள் பாட சாலை சென்றாலும் விடுமுறை நாள்களில் தனியார் வகுப்புக்குச் செல்லத் தவறுவதில்லை. மாண வர்கள் பாடசாலை விட்டு வீடு வந்ததும் சாப்பிடாமல் தனி யார் கல்வி நிறுவனத்திற்குப் படிப்பதற்குச் செல்கின்றனர். அதற்குக் கா ரணம் இல்லாமலில்லை.

தனியார் வகுப்புக்களில் சட்டக்கட்டுப்பாடு இல்லை. எனினும் மாணவர்கள் முன்னேறி வருகின்றனர். ஆனால் பாடசாலைகளில் சட்டக்கட்டுப்பாடு இருந்தும் மாணவர்கள் வேண்டத்தகர்த இன்னல் களை எதிர்கொள்ளகின்றனர்.

மாணவர்கள் பாடசாலைக்கு மட்டும் சென்றால் பாடங்கள் விளங்கு வதில்லை. தனியார் கல்வி நிறுவனத்திற்கும் செல்வதால் தான் மாணவர்கள் அதிக பெறுபேற்றினைப் பெறுகின்றனர். தனியார் கல்வி நிறுவனங்களில் மாணவர்களுக்காகப் பல மாதிரி வினாத்தாள் வகுப் புக்கள் இடம்பெறுவதனால் மாணவர்கள் அதிக பெறுபேற்றி னைப் பெறுகின்றனர். ஆகவே பரீட்சைப் பெறுபேறுகள் அதிகம் பெறு வதற்கு முக்கியபங்கு வகிப்பது தனியார் கல்வி நிறுவனம் ஆகும்.

இர.தாரங்கனி, தரம் 11,
சுண்டிக்குளி மகளிர் கல்லூரி, கைதடி மேற்கு.

## விவாதமேடை

இளைய சமூகத்தின் விவாதத்திறனுக்குக்களம் அமைத்துக் கொடுப்பதற்காக ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. எனவே

**குடாநாட்டு மாணவர்களின் பரீட்சைப் பெறுபேறுகளில் முக்கிய பங்கு வகிப்பது தனியார் கல்வி நிறுவனங்களா? பாடசாலைகளா?**

என்ற விவாதத்துக்கு உங்கள் கருத்துக்களை முன்வைத்து மோதுங்கள். வெற்றியைத் தீர்மானிப்பதும் நீங்களே. வெற்றிபெறும் என நீங்கள் கருதும் அணிக்கு வாக்களிக்க முடியும். வெற்றி பெறும் அணிக்கு வாக்களித்தவர்களில் மூவர் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்குப் பரிசில் வழங்கப்படும். அத்துடன் சிறந்த விவாதம் அனுப்புவோரில் ஒருவர் தெரிவு செய்யப்பட்டுப் பரிசில் வழங்கப்படும்.

**இளைஞர், யுவதிகளே!**

உங்களின் திறமைகளை வெளிக்கொணரவும், பிரச்சினைகள் பற்றிப் பேசவும், தேடல்களுக்குத் தீனி போடவும் 'இளவல்கள் வட்டம்' என்ற இந்தப் பகுதி மலர்ந்துள்ளது. இப்பகுதிக்கான உங்கள் படைப்புகளையும் ஏதாவது சந்தேகங்களையும் விமர்சனங்களையும் கீழேயுள்ள படிவத்தோடு இணைத்து அனுப்பி வையுங்கள்.

*'இளவல்கள் வட்டம்',*
*'உதயன்',*
*361, கஸ்தூரியார் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

பெயர் :-..............................
முகவரி:-..............................
..............................
.............. திகதி .............. கையொப்பம்

## இளவல்வட்டம் வாக்குச் சீட்டு

**குடாநாட்டு மாணவர்களின் பரீட்சைப் பெறுபேறுகளில் முக்கிய பங்கு வகிப்பது**

| | | | |
|---|---|---|---|
| தனியார் கல்வி நிறுவனங்கள் | ☐ | பாடசாலைகள் | ☐ |

பெயர்: ..............................
முகவரி: ..............................
..............................
அடையாள அட்டை இல. ..............................

**உங்கள் தீர்ப்புக்களை 27.01.2011ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கவும். இந்த வாக்குச் சீட்டுடன் அனுப்பப்படும் வாக்குகள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீர்வேலி ஸ்ரீ முருகன் மாதர் சி.க.வ.கூ.சங்கம்

தொகுப்பு: ஞான ஆதவன்




"கூட்டுறவு" என்ற சொல் புனிதமும் வாழ்வியலோடு இணைந்த வலிமையும் கொண்டது. உயிரிகளின் வாழ்வுடனும் வளர்ச்சியுடனும் கூட்டுறவுப் பண்புகள் இரண்டறக் கலந்துள்ளன. அந்தவகையில் மனிதன் தோன்றிய காலம்முதல் வாழ்வுக்கும் வளர்ச்சிக்கும் உறுதுணையாக இருந்து இன்றைய உயர்நிலைக்கு மனித இனத்தை மேல்நிலைப்படுத்தியது. கூட்டுறவு இயக்கத்தின் தந்தையாக இங்கிலாந்தைச் சேர்ந்த 'றொபேட் ஓவன்' (1771- 1858) போற்றப்படுகின்றார்.

றொபேட் ஓவனின் கூட்டுறவுச் சிந்தனையில் உள்ள உயர்ந்த கருத்துக்களை 'றொச்டேல்' முன்னோடிகள் ஒருங்கமைத்து 1844ஆம் ஆண்டில் கூட்டுறவுக் கொள்கையாக உலகுக்குப் பிரகடனப்படுத்தினர். இலங்கையில் 1906 ஆம் ஆண்டு கூட்டுறவு அம்சங்கள் பொருந்திய கடன் கொடுக்கும் கூட்டுறவு அமைப்பு தெல்தெனியாவில் உள்ள தும்பறைக் கிராமத்தில் முதலில் உருவாக்கப்பட்டது.1911 ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க முதலாவது கூட்டுறவுச் சட்டத்தின் பிரகாரம் இலங்கையில் முதலா வது ஐக்கிய நாணய சங்கம் 1912 ஆம் ஆண்டு மாத்தறை மாவட்டத்தில் உள்ள வெல்லுபடபத் கிராமத்தில் உருவாக்கப்பட்டது. யாழ்.மாவட்டத்தில் முதலாவது ஐக்கிய நாணய சங்கம் 1916 ஆம் ஆண்டு கரவெட்டியில் உருவாகிப் பதிவு செய்யப்பட்டது.

1911 ஆம் ஆண்டில் இருந்து 1940 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியை யாழ். மாவட்டத்தில் ஐக்கிய நாணய சங்கங்களின் காலப்பகுதி எனக் கருதும் அளவுக்கு ஐக்கிய நாணய சங்கங்கள் கிராமிய மட்டத்தில் செயற்பட்டு வந்தன. யாழ். மாவட்டத்தின் கூட்டுறவு அமைப்பின் தந்தை எனப் போற்றப்படும் பெரியார்.வீ.வீரசிங்கம் அவர்களின் முயற்சியினால் ''யாழ்.மாவட்ட மலையாளப் புகையிலை உற்பத்தியாளர் சங்கம்'' 1933 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. மலையாளப் புகையிலைச் செய்கை யாழ். மாவட்டத்தில் மேல்நிலை பெற்றிருந்ததையடுத்து சுருட்டுக் கைத்தொழிலில் கணிசமான அளவு மக்கள் ஈடுபட்டனர். 1940 ஆம் ஆண்டு காலப்பகுதியில் ''கோப்பாய் சுருட்டுத் தொழிலாளர் ஐக்கிய சங்கம்'' நிறுவப்பட்டது. சங்கத்துடன் இணைந்த நிலையில் 200 இற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் சுருட்டுக் கைத்தொழிலில் ஈடுபட்டு வந்தனர்.

இரண்டாம் உலக மகாயுத்த காலத்தில் உணவுப் பஞ்சம் ஏற்பட்டதையடுத்து இறக்குமதி செய்யப்பட்ட உணவுப் பொருள்கள் 'கூப்பன் முறைமூலம்' பங்கீட்டு அடிப்படையில் பொதுமக்களுக்கு விநியோகிக்கப்பட்டன. வலி.கிழக்குப் பிரிவில் 60இற்கும் மேற்பட்ட நிலையங்களுக்கூடாகப் பங்கீட்டு உணவுப் பொருள்கள் விற்பனை செய்யப்பட்டன. கூட்டுறவுப் பண்டகசாலைகளுக்கும் ஏனைய நிறுவனங்களுக்கும் உணவுப் பொருள்களை விநியோகிப்பதற்கு வசதியாக வலி.கிழக்கு கூட்டுறவுப் பண்டக சாலைகளின் சமாஜம் ஆரம்பிக்கப்பட்டு 1944.09.25 இல் பதிவு செய்யப்பட்டதோடு பண்டகசாலைகளின் சமாஜத்துக்கான களஞ்சியம் நீர்வேலியில் நிறுவப்பட்டு அதனூடாகக் கூப்பன் பங்கீட்டு உணவுப்பொருள்கள் விநியோகம் செய்யப்பட்டன. 1955 ஆம் ஆண்டு வலி. கிழக்கில் 16 பலநோக்குக் கூட்டுறவுச் சங்களும் 28 பண்டகசாலைகளும் 20 தனியார் கூப்பன் கடைகளும் செயற்பட்டன. 1940-1948 காலப்பகுதியில் வலி.கிழக்கில் ''விவசாய அபிவிருத்தி விளைபொருள் விற்பனைக் கூட்டுறவுச் சங்கங்கள்'' ஆரம்பிக்கப்பட்டு விவசாய உற்பத்திகளைச் சந்தைப் படுத்தலில் தனித்துவமான பங்களிப்பை மேற்கொண்டன.வலி.கிழக்கில் கூட்டுறவுத்துறைக்குத் தனியிடம் உண்டு.



பொன்விழாக் கண்டு ஓங்கி உயர்ந்து நிற்கும் நீர்வேலி ஸ்ரீ முருகன் மாதர் சிக்கனக்கடன் வழங்கும் கூட்டுறவுச்சங்கம் நீர்வேலி கந்தசாமி கோயில் வடக்கு வீதியில் வீதிக்கு வடக்குப் பக்கத்தில் அமைந்துள்ளது.

(தொடரும்..)

# வலி.கிழக்கு பிரதேச செயலகம்




(சென்றவாரத் தொடர்ச்சி)

வலி.கிழக்குப் பிரதேச செயலகம் யாழ்ப்பாணம்-பருத்தித்துறை பிரதான வீதியில் 9 ஆவது கிலோ மீற்றரில் வீதிக்கு மேற்குப் புறத்தில் கோப்பாயில் அமைந்துள்ளது.

பிரதேச செயலகங்களுக்கு எனப் பொதுமைப்படுத்தப்பட்டு வடிவமைக்கப்பட்ட மாடிக்கட்டடம் 14 பரப்பு வளாகத்தில் பொருத்தமான கட்டமைப்புக்களுடன் அமைந்துள்ளது.இந்த அமைவிடம் இலங்கையின் பொது நிர்வாகக் கட்டமைப்பில் '' மணியகாரர் '' பிரிவு செயற்படத் தொடங்கிய காலம் தொடக்கம் குறித்த ஒரே இடத்தில் அமைந்துள்ளது. புதிய கட்டட நிர்மாணத்துக்குப் பொதுமக்களின் நிதி உதவியுடன் காணி கொள்வனவு செய்யப்பட்டு வழங்கப்பட்டதோடு அந்த நிதியில் சுற்றுமதிலும் கட்டப்பட்டது.

புதிய மாடிக் கட்டடம் இரண்டாயிரமாம் ஆண்டு நிர்மாணிக்கப்பட்டது. தற்பொழுது மருதலிங்கம் பிரதீபன் அவர்கள் பிரதேச செயலராகப் பணியாற்றுகின்றார்.

வலி.கிழக்கின் முதலாவது மணியகாரராக வேலுப்பிள்ளையும் அவரைத் தொடர்ந்து எஸ். தம்பிப்பிள்ளையும் கடமையாற்றினர். இலங்கை சுதந்திரம் அடைந்த பின்னர், மணியகாரர் என்ற பதவிப் பெயர் 'பிரிவுக் காரியாதிகாரி' (D.R.O)என மாற்றப்பட்டு நிர்வாக அமைப்புத் தொடர்ந்தது. 1970ஆம் ஆண்டு காரியாதிகாரி நிர்வாகப் பிரிவு உதவி அரச அதிபர் பிரிவு (A.G.A) என மாற்றப்பட்டது. 2003 ஆம் ஆண்டு உதவி அரச அதிபர் என்ற நிர்வாகப் பெயர் பிரதேச செயலர் பிரிவு என மாற்றப்பட்டுப் பிரதேச செயலகங்கள் செயற்படத் தொடங்கின.

வலி. கிழக்குப் பிரிவில் மணியகாரர் பதவியில் ஆரம்பித்து இன்று வரை 23 பேர் வரையில் நிர்வாகப் பொறுப்பை ஏற்றுச் சிறப்புறப் பணியாற்றியுள்ளனர்.

எஸ். வேலுப்பிள்ளை - மணியகாரர்
எஸ். தம்பிப்பிள்ளை - மணியகாரர்

**காரியாதிகாரிகள்**

எஸ். தெய்வேந்திரம்பிள்ளை - 1939-1942
டி.என். செல்வரத்தினம் - 1943-1946
கே. சுப்பிரமணியம் - 1947 -1950
தி. முருகேசம்பிள்ளை - 1951-1954
ச. ஸ்ரீனிவாசன் - 1955-1958
யே.து.சபாபதிப்பிள்ளை - 1958 - 1962
ந.வேதாரணிய சேயோன் - 1963-1967
வ.கந்தப்பிள்ளை- 1967-1972

**உதவி அரச அதிபர்கள்**

வ.கந்தப்பிள்ளை -1972-1976
க.மாணிக்கவாசகர் - 1976-1977
வ. சொக்கலிங்கம் - 1978-1979
சி. அம்பலவாணர் - 1979-1981
க.கிட்டிணர் - 1981-1985
க. சபாபதிப்பிள்ளை -1985-1986
க.குலேந்திரன்- 1986-1989
சி. முருகேசபிள்ளை 1989-1992
க.கனகரத்தினம் - 1992 -1993
இ.இளங்கோ - 1993-1993
க.கேதீஸ்வரன் - 1993-2003

**பிரதேச செயலர்கள்**

க.கேதீஸ்வரன் 2003-2005
பி.செந்தில்நந்தனன் - 2005 - 2005
சீ.ஏ.மோகன்றாஸ் - 2006-2010
ம.பிரதீபன் - 2010.11.08 ஆம் திகதியிலிருந்து கடமை புரிந்து வருகின்றார்.

**உதவிப் பிரதேச செயலர்கள்**

க.இராசதுரை - 2003- 2004.
திருமதி. சா. அஞ்சலிதேவி - 2003- 2006
திருமதி.சி. நிமலினி- 2006 - 2007
செல்வி.ச. பிரேமினி - 2007-01-01 ஆம் திகதியில் இருந்து கடமை புரிந்து வருகின்றார்.

வலி. கிழக்குப் பிரிவில் மணியகாரர் பதவியில் ஆரம்பித்து இன்று வரை 23 பேர் வரையில் நிர்வாகப் பொறுப்பை ஏற்றுச் சிறப்புறப் பணியாற்றியுள்ளனர்.

கிராமத் தலைமைக்காரர் பிரிவு நிர்வாக அமைப்பு இருந்த காலப்பகுதியில் வலி. கிழக்குப்பிரிவு பத்தமேனி இடைக்காடு, அச்சுவேலி, புத்தூர் மேற்கு, புத்தூர் கிழக்கு, சிறுப்பிட்டி, நீர்வேலி, ஊரெழு, உரும்பிராய், கோப் பாய் வடக்கு, கோப்பாய் தெற்கு எனப் பத்துப்பிரிவுகளாக இருந்து வந்தது.

கிராமத் தலைமைக்காரர்கள் குறித்த கிராமத்தில் செல்வாக்கு, அந்தஸ்து, கல்வித்தகைமை உடையவர்கள். குறித்த கிராமத்தில் உள்ள மக்களின் விருப்பத்துடன் (குரல் வாக்கெடுப்பு) தெரிவு செய்யப்பட்டு நியமிக்கப்பட்டனர். கிராமத் தலைமைக்காரர் முறையுடன் கிராம சேவையாளர் முறையும் இணைந்து கிராம சேவையாளர்கள் நியமிக்கப்பட்ட போது இந்தப் 10 பிரிவுகளும் செயற்பட்டன.

1991 ஆம் ஆண்டு விசேட சேவை உத்தியோகத்தர்கள், பயிர்ச்செய்கை உத்தியோகத்தர்கள், கிராம சேவை அலுவலர்களாக உள்வாங்கப்பட்டபோது 31 பிரிவுகளாக வகுக்கப்பட்டு அதிசிறப்புக் கிராம அலுவலர் ஒருவரும் நியமிக்கப்பட்டுக் கிராம மட்டத்தில் நிர்வாகச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இவை ஜே/257- ஜே/287 வரை இலக்கங்கள் கொண்டவை.

நிர்வாகப் பன்முகப்படுத்தல் கட்டமைப்பில் சமூக சேவைகள், காணி, நிர்வாகக் கணக்கு, சமுர்த்தி புள்ளி விவரம், விளையாட்டு , கலை, கலாசாரம் , விவசாயம், குடியகல்வு, குடிவரவு, ஆள்பதிவு, வாகனப்போக்குவரத்துப் பதிவுகள், சிறுவர் நலம், விதாதா வள நிலையம் உள்ளிட்ட பல்வேறு திணைக்களப் பிரிவுகளும் உள்ளடங்கிய ஒன்றிணைந்த செயற்பாட்டு மையமாக மக்களுக்கான சேவைகளை வழங்கி வருகின்றது.

யாழ். மாவட்டத்தில் ஆகக்கூடிய குடித்தொகையையும் கிராமஅலுவலர் பிரிவு எண்ணிக்கையையும் கொண்ட வலி. கிழக்குப் பிரதேச செயலர் பிரிவை இரண்டாகப் பிரித்துச் செயற்படவைப்பதற்கான முன்மொழிவுகள் நாடாளுமன்ற மட்டத்தில் முன்வைக்கப்பட்டுள்ள போதிலும் அது இன்றுவரை செயலுருப் பெறாமல் இருப்பதைக் கருத்தில் கொண்டு அரசியல் மற்றும் நிர்வாகத் தலைமைகள் செயற்படுவது காலத்தின் கட்டாயமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒய்வுநிலை அதிபர்
## உயர்திரு அ.பஞ்சலிங்கம்
## அவர்களின் பவளவிழா



காலம்: - 08.01.2011
சனிக்கிழமை
பிற்பகல் 3 மணி
இடம்: - கொக்குவில்
இந்துக் கல்லூரி

நலிவுற்றோரை
வளப்படுத்தும்
நல்லாசானை
இன்றுபோல்
என்றும் வாழ
வாழ்த்துகின்றோம்.

COLLEGE 0F COMPUTING.
இணுவில்.
(சி/574133)

# VISA - வீசா
## Consultancy Service

**UK, USA, CANADA, AUSTRALIA, NEW ZEALAND, SWITZERLAND, FRANCE, GERMANY, NORWAY, DENMARK,**

Visit / Tourist, Business, Family Students, Migration, Medical Visas

**Call : 0776 209 887**

**SIC,** 734, Hospital Road, Jaffna.

## நிறுவனத் தலைவர்களுக்கான கண்காணிப்புக் குழுக்கூட்டம்

யாழ்ப்பாணம்,ஜன.6

சுகாதாரத் திணைக்களத்தின் கீழ் இயங்கும் வைத்திய நிறுவனங்களுக்கும், அரச சார்பற்ற நிறுவனங்களுக்குமான மாதாந்த மாவட்ட கண்காணிப்புக் குழுக்கூட்டம் நாளை வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும்.

இக்கூட்டத்தில் சம்பந்தப்பட்டோர் தவறாது சமுகமளிக்குமாறு பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ம)

### வேலையாள் தேவை

கோழிப் பண்ணையில் தங்கி நின்று வேலை செய்யக்கூடிய ஆள் தேவை. வயது (18-40). தரமான ஊர்க்குஞ்சுகள் விற்பனைக்குண்டு. விவரங்களுக்கு தொ.பே: 0217200616, 0777700716

### கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான No.1பிறிமா புறொயிலர் கோழிக் குஞ்சுகள் நியாயமான விலையில் (100/=) 06.01.2011 காலை விநியோகிக்கப்படும். முன்பதிவு செய்யவும் (பின்பு 100 வீதம் இறைச்சிக் கோழிகள் திருப்பி வாங்கப் படும்).

நல்லூர் பாம் சென்ரர்
19, முருகேசர் லேன், நல்லூர்.
T.P: 0212226944

### முன்பள்ளி ஆசிரியருக்கான விண்ணப்பம் கோரல்

மேற்படி இணுவில் மஞ்சத்தடி விவேகானந்த முன்பள்ளியால் கற்பித்தல் செயற்பாட்டுக்குத் தகுதியான ஆசிரியர்களிடமிருந்து விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன. விண்ணப்பத்தினைத் தாமாகவே சுயமாகத் தயாரிக்கப்பட்ட சுயவிவரங்களுடன் 09.01.2011 ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணிக்கு முன்பள்ளி நிலையத்தில் நேர் முகப் பரீட்சைக்கு நேரடியாகச் சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

செயலாளர்
சி.கோகுலராஜ்
தலைவர்
க.செந்தில்குமரன்.
விவேகானந்த ச.ச.நிலையம்

### வாடகைக்கு

யாழ். பல்கலைக்கழகத்திற்கருகில் சகல வசதிகளுடன் தனியறையும், அத்துடன் சமையல்செய்து சாப்பிடக்கூடியவருக்கு சமையலறையுடன் படுக்கை அறையும் வாடகைக்குண்டு. தங்கள் கைத்தொலைபேசி உட்பட சகல விவரங்களுடன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல:4105, C/o உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

### பதவி வெற்றிடம்

ராம் கபப சிற்றி
306, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 1252

1. பொதிசெய்வோர் (பெண்கள்) 2. கணினி இயக்குநர் (ஆண்கள்)

யாழ். மாநகரசபைக்கு உட்பட்டவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

காலம்: 08.01.2011 சனிக்கிழமை
நேரம்: முற்பகல் 10 மணி

தகைமையுடையவர்கள் நேர்முகத் தேர்வுக்கு சமுகமளிக்கவும்.

## பதவி வெற்றிடங்கள்

துணுக்காய்ப் பகுதிப் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கீழ்வரும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இதற்கான விண்ணப்பப் பத்திரத்தையும் மேலதிக விவரங்களையும் சங்கப் பணிமனையில் பெற்றுக் கொள்ளலாம்.

| பதவி | குறி.இல |
|---|---|
| 1. இலிகிதர் | 302/15 |
| 2. இலிகிதர் | 302/14 |
| 3. விற்பனையாளர் | 308/17 |
| 4. கிளை முகாமையாளர் | 208/14 |
| 5. லொறிப் பாதுகாவலர் | 314/16 |
| 6. காவலாளி | 315/17 |
| 7. சாரதி | 312/14 |
| 8. கிராமிய வங்கி முகாமையாளர் | 205/12 |

விண்ணப்ப முடிவுத் திகதி: 20.01.2011

தலைவர்,
துணுக்காய்ப் பகுதிப் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்,
துணுக்காய்.
(108493)

### பெயர் மாற்றம்

பாண்டவெட்டை, சுழிபுரத்தில் வசித்துவரும் முருகேசு பொன்னம்பலம் ஆகிய நான், 01.01.2011 முதல் எனது பெயரை முருகேசு கேதீஸ்வரன் எனச் சம்பந்தப்பட்ட சகல ஆவணங்களிலும் மாற்றம் செய்துள்ளேன் என்பதை இத்தால் சகலருக்கும் அறியத்தருகின்றேன்.

முருகேசு கேதீஸ்வரன்
ஜே/174, சுழிபுரம் கிழக்கு பாண்டவெட்டை,
கிராம அலுவலர் பிரிவு. சுழிபுரம்.
(சி/574401)

இனிய தமிழ்ப்புத்தாண்டு மற்றும் பொங்கல் வாழ்த்துக்கள்

# தைப் பொங்கலை முன்னிட்டு


Unbelievable Sales

# JAFFNA ELECTRICAL நிறுவனத்தின்

## என்றும் எங்கும் இல்லாத அதிரடி விலைக்கழிவு

(05.01.2011 முதல் 14.01.2011 வரை)

LG No 1 Dealer in SriLanka




**Abans உத்தரவாதத்துடன்**

# LG JAFFNA ELECTRICAL

141, Power House Road, Jaffna. T.P: 021 222 8378, 5766.
94 (6), Stanley Road, Jaffna. 021 222 2353
No: 04, New Market, Chavakachcheri. T.P: 021 2270 268
No.135, A9 Road, Kilinochchi. T.P: 021 228 0008
Cool Line: 0777725258

Authorized Dealer for **Abans**

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# கூட்டுறவுப் பரிசோதகர்கள் லஞ்சம் பெற்றால் அவர்களுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கப்படும்

## கிழக்கு மாகாண கூட்டுறவு அமைச்சர் எச்சரிக்கை

திருகோணமலை,ஜன. 6

இலஞ்சம் பெறும் கூட்டுறவுப் பரிசோதகர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனக் கிழக்கு மாகாண சுகாதார மற்றும் கூட்டுறவு அபவிருத்தி அமைச்சர் எம்.எஸ். சுபைர் தெரிவித்தார்.

கூட்டுறவுத் திணைக்களத்தின் மட்டக்களப்பு மாவட்ட உதவி ஆணையாளர் அலுவலகத்தில் மாவட்டத்திலுள்ள கூட்டுறவுப் பரிசோதகர்கள் அடங்கிய கூட்டம் கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது. இக்கூட்டத்திலேயே மாகாண அமைச்சர் சுபைர் மேற்கண்டவாறு கூறினார்.

மட்டக்களப்பு மாவட்ட கூட்டுறவு அபவிருத்தி உதவி ஆணையாளர் கிருபைராஜசிங்கம் கூட்டத்துக்குத் தலைமை வகித்தார்.

மாகாண அமைச்சர் சுபைர் தொடர்ந்து பேசுகையில், "கிழக்கு மாகாணத்தில் கூட்டுறவுத்துறையை பலவீனப்படுத்த ஒருபோதும் நான் அனுமதிக்க மாட்டேன். சில கூட்டுறவுப் பரிசோதகர்கள் இலஞ்சம் பெற முற்படுகின்றனர் எனத் - தகவல்கள் கிடைக்கின்றன.

அவ்வாறு இலஞ்சம் பெறும் கூட்டுறவுப் பரிசோதகர்களுக்கு எதிராக நான் சட்ட நடவடிக்கை எடுக்கத் தயங்கமாட்டேன். கூட்டுறவு பரிசோதகர்கள் தமது கடமையை நேர்மையாகவும் பக்கச் சார்பின்றியும் மேற்கொள்ள வேண்டும்.

வெள்ள நிவாரணம் வழங்கப்பட்டுவரும் இந்தக் காலகட்டத்தில் சரியாக அது மக்களுக்கு வழங்கப்படுகின்றதா என்பதில் அவதானமாக இருக்கவேண்டும்.

கூட்டுறவுச் சங்கங்களைப் பரிசோதித்தல், அவற்றின் அறிக்கைகளைச் சமர்ப்பித்தல், ஊழல் மோசடிகள் இடம்பெறும் கூட்டுறவுச் சங்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுத்தல் ஆகிய நடவடிக்கைகளில் கூட்டுறவுப் பரிசோதகர்கள் ஈடுபட வேண்டும்.

கிழக்கு மாகாண சபையின் கூட்டுறவு அமைச்சு இன்று கிழக்கு மாகாணத்திலுள்ள கூட்டுறவுத்துறையை மேம்படுத்துவதில் கூடிய பங்களிப்பை செய்து வருகின்றது.

இதற்கு கூட்டுறவுப் பரிசோதகர்களாகிய நீங்களும் ஒத்துழைப்புகளை வழங்க வேண்டும்- என்றார். (ளி )

## வெற்றியின் பரிசு...



விருது: சம்மாந்துறை ஸ்டார் பாலர் பாடசாலையின் கலைவிழா அண்மையில் நடைபெற்றது. இந்த விழாவில் கௌரவ விருந்தினராகக் கலந்துகொண்ட சாமஸ்ரீ தேசகீர்த்தி பீ. பிரதீபன் பாடசாலை ஆசிரியை செல்வி ஆர். ஜெனீஸாவுக்கு விருது வழங்குகின்றார். அருகில் பாடசாலையின் அதிபர் எம்.ஐ.எம். உவைஸ், கிராம சேவகர் யூ.எல்.எம் சலீம் ஆகியோர் நிற்கின்றனர். (ளி )

# அம்பாறை மாவட்டத்தில் மீன்பிடித் தொழில் பாதிப்பு

அம்பாந்துறை, ஜன.6

காலநிலை சீர்கேடு, கடற்கொந்தளிப்பு ஆகியவை காரணமாக அம்பாறை மாவட்டத்தில் ஆழ்கடல் மீன்பிடித்தொழில் ஸ்தம்பிதம் அடைந்துள்ளதை அடுத்து குளிரூட்டப்பட்ட மீன்களுக்குப் பலத்த கிராக்கி ஏற்பட்டுள்ளது. அம்பாந்தோட்டை, காலி, புத்தளம் ஆகிய தூர இடங்களிலிருந்து இங்கு கொண்டு வரப்படும் மீன்களைக் கொள்வனவு செய்வதில் வியாபாரிகளும், பொதுமக்களும் முண்டியடிக்கின்றனர். இதனால் இங்கு மீனுக்குப் பலத்த கிராக்கி ஏற்பட்டுள்ளது.

ஒவ்வொரு வருடமும் ஒக்ரோபர் மாதம் தொடக்கம் அடுத்து வரும் பெப்ரவரி மாதம் வரையிலான காலப்பகுதியில் கடற்கொந்தளிப்பு, பலத்த மழையும் கொட்டும் அம்பாறை மாவட்டத்தில் கல்முனை, சாய்ந்தமருது, காரைதீவு ஆகிய கரையோரப் பிரதேசங்களில் இக்கால நிலையால் தற்போது ஆழ்கடல் மீன்பிடித் தொழில் பாதிக்கப்பட்டுள்ளது. மீன் பிடிக் கலங்களும் பாதுகாப்புக் கருதி




கரையில் இழுத்து வைக்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது. (ளி)

# மட்டு. மாவட்டத்தில் கிணறுகளுக்கு குளோரின் தெளிக்க நடவடிக்கை

மட்டக்களப்பு, ஜன.6

கிழக்கு மாகாணத்தில் கடந்த சில தினங்களாகப் பெய்த கடு மழையினால் ஏற்பட்ட வெள்ளம் காரணமாகத் தொற்றுநோய்கள் பரவுவதைத் தடுக்கும் பொருட்டு மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள சகலரின் வீடுகளிலுமுள்ள கிணறுகளுக்குக் குளோரின் பவுடர் தெளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனக் கிழக்கு மாகாண சுகாதாரப் பணிப்பாளர் டாக்டர் எம்.தேவராஜன் தெரிவித்தார். இதற்காக கொழும்பிலிருந்து குளோரின் பவுடர்பெறப்பட்டுள்ளது. ஒவ்வொரு பிராந்திய சுகாதார அலுவலகப் பிரிவுகளிலுமுள்ள சுகாதார வைத்திய அதிகாரிகளின் ஆலோசனையுடன் பொதுச் சுகாதார பரிசோதகர்களால் இந்நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் இதுவரை எங்கும் தொற்று நோய்கள் பரவியதற்கான தகவல்கள் எதுவும் கிடைக்கவில்லை என்றும் சுகாதார அதிகாரிகள் இது தொடர்பில் விழிப்பூட்டல் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர் என்றும் பணிப்பாளர் டாக்டர் தேவராஜன் மேலும் தெரிவித்துள்ளார். (ளி)

# தம்புள்ள வர்த்தக மைய நிர்வாகத்தை அமைச்சின் கீழ் கொண்டுவரத் தீர்மானம்

## அமைச்சரின் திடீர் வருகையின் பிரதிபலிப்பு

தம்புள்ள, ஜன.6

தம்புள்ள பொருளாதார வர்த்தக மத்திய நிலையத்தில் நடைபெறுவதாகக் கூறப்படும் பல்வேறு மோசடிகள் சம்பந்தமான முறைப்பாடுகளையடுத்து அந்நிலையத்தின் நிர்வாகத்தை கூட்டுறவு உள்நாட்டு வர்த்தக அமைச்சின் கீழ் கொண்டு வருவதற்கு அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்ணான்டோ தீர்மானித்துள்ளார்.

வர்த்தக மத்திய நிலையத்துக்கு கடந்த ஞாயிற்றுக்கிழமை அமைச்சர் திடீர்பயணமொன்றை மேற்கொண்டிருந்தார்.

நிர்வாகக் குழுவொன்றால் இந்த மத்திய நிலையத்தின் நிர்வாகம் இதுவரை மேற் கொள்ளப்பட்டு வந்தது. எனினும், இங்கு பல்வேறு ஊழல்களும் மோசடிகளும் நடைபெற்றுள்ளன.

உதாரணமாக மாதாந்தம் 80 ஆயிரம் ரூபா வாடகைக்கு அரசு வழங்கிய கடையொன்றை இடைக்கால ஒப்பந்தம் மூலமாக வேறொரு வருக்கு மாதாந்தம் ஒன்றரை லட்சம் ரூபா வாடகைக்கு நிர்வாகம் வழங்கியுள்ளது.

இது சம்பந்தமாக விசாரணைகளை மேற்கொண்ட அமைச்சர் உடனடியாக அக் கடையை சுவீகரிக்குமாறு உத்தரவிட்டார்.

இவ்வாறே இப்பிரதேசத்தில் கூட்டுறவுச் சங்கத்துக்கு சொந்தமான கடையொன்றும் இடைக்கால ஒப்பந்தம்மூலமாகவேறொருவருக்கு கொடுக்கப்பட்டிருந்தது. அந்தக் கடையையும் சுவீகரிக்குமாறு அமைச்சர் பணிப்புரை விடுத்தார்.

பொருள்களைப் பதுக்கி வைத்துக் கொண்டு அதிக விலைக்கு விற்பவர்கள் மற்றும் ஊழல் மோசடிகளில் ஈடுபடுப வர்கள் எவராயிருந்தாலும் எவ் வித பாராபட்சமுமின்றி வர்த்தக நிலையத்திலிருந்து வெளியேற்றப்படுவர் என அமைச்சர் எச்சரித்தார்.

இந்த வர்த்தக நிலையத்தின் பாதுகாப்பு ஒழுங்குகள், சுத்திகரிப்புப் பணிகள் ஆகிய வற்றைப் பொறுப்பேற்குமாறு அமைச்சர் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

அத்துடன் வர்த்தக நிலையத்தில் பணிபுரியும் சகலருக்கும் உத்தியோக பூர்வ அடையாள அட்டைகளை வழங்க அமைச்சு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்றும் அமைச்சர் தெரிவித்தார். (ளி)

# பொலிஸ் சோதனை என்ற போர்வையில் பணத்துடன் மாயமானவருக்கு வலைவீச்சு

கண்டி, ஜன.6

கண்டி நகரில் பாதசாரியொருவரின் கைப்பையிலிருந்த 60 ஆயிரம் ரூபா பணத்தை சூட்சுமமாகக் கையாடிச் சென்ற நபரைக் கைதுசெய்வதற்குப் பொலிஸார் நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

கண்டி,யட்டிநுவர வீதியில் கைப்பையுடன் நடந்து சென்று கொண்டிருந்த வியாபாரியொருவரைக் குறிப்பிட்ட நபர் நிறுத்தியுள்ளார்.

அவர் தன்னைப் பொலிஸ் உத்தியோகத்தர் என்று அறிமுகப்படுத்திக் கொண்டதுடன் பையில் போதைப்பொருள் உள்ளதா எனச் சோதிக்க வேண்டுமெனவும் கூறியுள்ளார்.

வியாபாரியும் பையைக் கொடுத்துள்ளார். பையைப் பரிசோதிக்கும் பாவனையில் அதற்குள் இருந்த 60 ஆயிரம் ரூபாவை எடுத்துக் கொண்ட இவர் தலைமறைவாகிவிட்டார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கண்டிப் பொலிஸின் குற்றத் தடுப்புப் பிரிவினர் மேலதிக விசாரணைகளில் ஈடுபட்டுள்ளனர். (ளி)

# மத்திய மாகாணத்தில் 93 வைத்தியசாலைகளை அபிவிருத்தி செய்ய ரூ.23 கோடி நிதி ஒதுக்கீடு


மாத்தளை, கண்டி மற்றும் நுவரெலியா மாவட்டத்திலுள்ள வைத்தியசாலைகளை அபிவிருத்தி செய்து நவீன மயப்படுத்துவதற்கு மத்திய மாகாண சுகாதாரத் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது என மத்திய மாகாண சுகாதார மற்றும் தேசிய வைத்திய அமைச்சர் சுனில் கே.அமரதுங்க தெரிவித்தார்.

நுவரெலியா மாவட்டத்தில் 18 வைத்தியசாலைகளும், மாத்தளை மாவட்டத்தில் 28 வைத்தியசாலைகளும், கண்டி மாவட்டத்தில் 47 வைத்தியசாலைகளும் இவ்வாறு அபிவிருத்தி செய்யப்படவிருக்கின்றன என்றும் அவர் தெரிவித்தார். (ளி)

# ஊவா மாகாண முன்பள்ளி ஆசிரியைகளுக்கு நிரந்தரச் சம்பளம் வழங்க அமைச்சரவை அனுமதி

கொழும்பு, ஜன.6

ஊவா மாகாணத்தில் பணியாற்றும் 188 முன்பள்ளி ஆசிரி




யைகளுக்கு நிரந்தர சம்பளம் வழங்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாக ஊவா மாகாண சுற்றுலா அபிவிருத்தி அமைச்சரும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மஹியங்கனை ஆசனத்தின் பிரதம அமைப்பாளருமான அநுரவிதானகமகே தெரிவித்தார்.

கடந்த சனிக்கிழமை ஊவா மாகாணத்தின் மஹியங்கனை ரிதிமாலியத்த பிரதேசத்தின் இரு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட 77 முன்பள்ளி ஆசிரியைகள் பங்குபற்றிய வைபவம் ஒன்று மஹியங்கனை [illegible] பொரகெதர ஹோட்டலில் நடைபெற்றது.

இதில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அநுர விதானகமகேயின் சனசமூகமன்றத்தால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்த நிகழ்வில் பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தேனுக விதானகமகே, மஹியங்கனை ரிதிமாலயத்த பிரதேச செயலாளர்கள் [illegible] கொண்டனர்.

(204-5)

# ஹற்றன், மஸ்கெலியா, பொகவந்தலாவையில் மாணவர்களுக்குப் பாதுகாப்பு பற்றி முறையீடு

ஹற்றன், மஸ்கெலியா, பொகவந்தலாவை போன்ற நகரங்களில் உள்ள பாடசாலைகளிலும், அதனை அண்டியுள்ள பாடசாலைகளிலும் கல்வி கற்று வரும் மாணவர்களுக்குப் போதிய பாதுகாப்பு இல்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.நாட்டில் இடம்பெற்றுவரும் கடத்தல்கள் மற்றும் சிறுவர் துஸ்பிரயோகங்கள் காரணமாக இந்தப்பகுதிப் பெற்றோர் தமது பிள்ளைகளைத் தனியாகப் பாடசாலைகளுக்கு அனுப்புவதற்கு அச்சம் தெரிவிக்கின்றனர்.

எனவே பாடசாலை மாணவர்கள் விடயத்தில் பாதுகாப்புத் தரப்பினர் அதிகூடிய கரிசனை காட்டவேண்டும் என இங்குள்ள பெற்றோரும் நலன்விரும்பிகளும் கோரிக்கை விடுக்கின்றனர். (ளி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரமார்த்தரின் பக்தி




(தொடர்ச்சி)

அதற்குள் கீழே இறங்கிப் போன மடையன் மறுபடியும் மேலே ஏறி வந்து, ''குருவே.. நான் கீழே இறங்கிப் போனேன். அங்கே இரண்டு பேர்; ஒருவன் குண்டாக இருந்தான்; இன்னொருவனுக்குத் தாடியும் மீசையும் உள்ளது. இருவரும் அரண்மனையை விட்டு வெளியே போகிறார்கள். நிச்சயமாக அவர்கள் இரண்டு பேரும் திருடர்களாகத்தான் இருக்க வேண்டும்'' என்று மூச்சு வாங்கக் கூறினான்.

''அப்படியா? அப்படியானால் உடனே அவர்களைப் பிடித்தாக வேண்டுமே!'' என்ற பரமார்த்தர், ''எல்லோரும் வாருங்கள், கீழே போவோம்'' என்றபடி இறங்கினார்.

எல்லோரும் வேகமாக அரண்மனை வாசலுக்கு ஓடிவந்து பார்த்தனர். மடையன் சொன்னபடி இரண்டுபேர், குண்டாக ஒருவரும், ஒல்லியாக ஒருவரும் வேகமாக மறைந்து மறைந்து போவது தெரிந்தது.

அப்போது அங்கே சில காவலர்கள் ஓடிவந்தார்கள். அவர்களிடம், ''மடையர்களே! அதோ பாருங்கள், இரண்டு திருடர்கள் அரண்மனையிலிருந்து பணத்தையும் நகைகளையும் திருடிக் கொண்டு போகிறார்கள். ஓடிப்போய் அவர்களைப் பிடியுங்கள்!'' என்று கோபத்துடன் திட்டினார் பரமார்ததர்.

வீரர்கள், குரு காட்டிய திசையில் ஓடினார்கள். பரமார்த்தரும், சீடர்களும் ''திருடன்! திருடன்! விடாதே, பிடி!'' என்று கத்தியபடியே பின்னாலே துரத்தினார்கள். அதற்குள் சத்தம் கேட்டு அரண்மனையிலும் நகரத்திலும் எல்லோரும் விழித்துக் கொண்டார்கள். எல்லோரும் தெருவுக்கு ஓடி வந்து பார்த்தனர். இராஜ வீதியில் ஒரே கலவரம், கூக்குரல்கள். அப்போது மூடன், ''அதோ...அதோ.. பிடியுங்கள்'' என்று கத்தினான்.

பரமார்த்தரும் சீடர்களும் அந்த இருவர் மீதும் தடால் என்று விழுந்து உருண்டு அவர்களைக் கெட்டியாகப் படித்துக் கொண்டனர். வீரர்கள் அவர்களை விலக்கி திருடர்களை உற்றுப் பார்த்தனர். உடனே, ''அரசே! மந்திரியே! நீங்களா?!'' என்று வியந்தனர். எல்லோரும் அரசர் காலில் விழுந்து, ''எங்களை மன்னியுங்கள்! இந்தக் குருவும் சீடர்களும்தான் உங்களைத் திருடர்கள் என்று கூறினர்'' என்று நடுங்கியபடி கூறினர்.

பரமார்த்தருக்கும் சீடர்களுக்கும் ஒன்றுமே புரியவில்லை. அரசரையே திருடன் என்று சொல்லி விட்டோமே என்று பயந்து நடுங்கினார்கள். கோபம் அடைந்த மக்கள் குருவையும் சீடர்களையும் அடிப்பதற்குச் சென்றனர்.

உடனே அரசர், ''பொதுமக்களே! நானும் மந்திரியும் நகர சோதனைக்குச் செல்வது தெரியாமல் பரமார்த்தகுரு தவறாக நினைத்து விட்டார். உண்மையிலேயே திருடர்களாக இருந்திருந்தால் என்ன ஆகியிருக்கும்? ஆகவே திருடர்களைப் பிடிக்க வேண்டும் என்ற நல்ல எண்ணம் கொண்ட சீடர்களையும், பரமார்த்தருக்கு இருக்கும் அரச பக்தியையும் நான் பாராட்டுகிறேன். பரமார்த்தரும் சீடர்களும் இரவில் கூடத் தூங்காமல் காவல் செய்வதை நினைத்துப் பூரிப்படைகிறேன். இதற்காக நாளையே அவர்களுக்காக ஒரு விழாக் கொண்டாடுவோம்!'' என்று கூறினார்.

மக்களும் ''பரமார்த்தகுரு வாழ்க! சீடர்கள் வாழ்க!'' என்று முழக்கமிட்டனர்.

குருவுக்கும் சீடர்களுக்கும் சந்தோஷமாக இருந்தது.

(முற்றும்)

# எங்கள் பூமி ஈழபூமி

பகலவனிடமிருந்து வந்தது எங்கள் பூமி
பந்துபோலச் சுற்றி தன்னைத் தானே வலம்வரும் பூமி
பகலும் இரவும் தோன்றும் பூமி
பலகோடி தாவர உயிரினங்களை ஈன்று தந்த பூமி
பரம்பரை பரம்பரையாக வாழ்ந்த எங்கள் தாயகப் பூமி
பாசை தமிழ் பேசி எழுதும் பூமி
பருவகாலங்கள் ஆறு தந்தது எங்கள் பூமி
பாலை முல்லை நெய்தல் இறிஞ்சி மருதம் நிலம் கொண்ட பூமி
பனைகள் வானுயர வளர்ந்து கேட்பபெல்லாம் கொடுக்கும் பூமி
பசுக்கள் பாலைப் பொழிந்து தாய்போல அணைத்திடும் பூமி
பகலவனை பொங்கி வழிபடும் தமிழர்கள் வழும்பூமி
பல்லாயிரம் தமிழர்கள் விடுதலைக்காய் இரத்தம் சிந்திய பூமி
பாரினில் நிற்பதற்கு தமிழர்க்கு நிழல்தரும் ஈழபூமி

பூ.ரகுபாலன் (பசுமை ஆர்வலர்)

# அறிவை வளர்க்கும் விடயங்கள்

* உடலிலே மிகப் பெரிய உறுப்பு - கல்லீரல்
* மனிதனில் உள்ள வியர்வைச் சுரப்பிகள் - 20 லட்சம்
* மனித உடலின் வெப்பநிலையைக் கட்டுப்படுத்துவது - தோல்
* இரவில் மட்டும் நடக்கும் பந்தயம் - நாய்ப்பந்தயம்
* உலகின் மிகப் பழைமையான விளையாட்டு - நீச்சல்
* அவுஸ்திரேலியாவின் தேசிய விளையாட்டு - கிரிக்கெட்
* இலங்கை மத்திய வங்கி ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு - 1950
* உலகின் மிகப் பெரிய இந்துக் கோவில் - அங்கோவாட்
* உலகிலே மிக நீளமான எரிமலை - கொடக்ஸி
* அவுஸ்திரேலியாவின் தலைநகரம் - கன்பரா

ப.கோபிநாத், தரம் - 6, யாழ்-இந்துக்கல்லூரி.

# நாடுகள் குறிப்பவை

ஜனநாயக நாடு - இந்தியா
கிறிஸ்தவநாடு - பிலிப்பைன்ஸ்
கம்யூனிச நாடு - சீனா
இஸ்லாமிய நாடு - இந்தோனேசியா
இந்துமத நாடு - நேபாளம்
சனத்தொகை குறைந்த நாடு - வத்திக்கான்

நிஸா

# ஈக்கள் பற்றிய அரிய தகவல்கள்

* அதன் பெரிய கண்களும் நூற்றுக் கணக்கான கூட்டுக் கண்களின் தொகுப்பு.
* ஈ ஒரே நேரத்தில் தனது ஒர காலில் இருப்பது இலட்சம் கிருமிகளைக் கொண்டுவந்து தான் உட்காரும் பண்டத்தில் சேர்க்கும் .
* உறைய வைக்கும் சக்தியுடைய திரவம் இதன் உறிஞ்சு குழாய் மூலம் சுரக்கின்றது. இதனால் நோயையும் பரப்புகின்றது.
* இதற்கு இருக்கும் உணர் கொம்புகள் இப்பணியைச் செய்கின்றன.
* ஈயின் 6 கால்களிலும் சுரக்கும் திரவம் தலைகீழாக ஏறினாலும் ஒட்டிக் கொண்டு உட்காரவும் நகரவும் உதவுகிறது.

லோ.தானுஜன்,
கொக்குவில்.

# தமிழ் நாளே வருக...

திருநாளாம் - தமிழர்
பெருமை கூறும்
தமிழ் நாளாம்!
வறுமை களையும்
சூரியத் தேவனின்
திருமுகம் தொழுகின்ற
நிறை நாளாம்!
பகைமைகள் அகற்றி
மனச் சுமைகளை நீக்கி
உறவுகள் இணைகின்ற
நன் நாளாம்!
உயிரினில் கலந்த - நன்றி
உணர்வினை நாமும்
ஊரோடு செலுத்திடும்
உன்னத நாளாம்!
அன்புடன் குடும்ப
உறவுகள் அனைத்தும்
அமுதாக்கியே மகிழ்வுறும்
அன்பு நிறை நன் நாளாம்
தைநாளே வருக - தைத்
திருநாளே வருக!
தமிழர் மனங்களோடிணைந்த
தமிழ் நாளே வருக
மனச் சுமைகள் நீங்க
வாழ்வு வளம் பெற
நிம்மதி தரும் எம்நாளே வருக!

சி. விஷ்ணுவர்மன்
புளியங்கூடல்




# மொழிகளின் சிறப்புப் பெயர்கள்

தமிழ் - பக்தி
பிரெஞ்சு - காதல்
ஆங்கிலம் - வணிகம்
கிரேக்கம் - சட்டம்
இத்தாலி - இசை
உருது - கவிதை

சோபியா

# பொன்மொழிகள்

* ஒரு பொருளை இழந்த காலத்திலும் மனம் தளராமல் உறுதியுடன் இருக்க வேண்டும். - ஔவையார்
* உண்மையைச் சொல்லுவதற்காகத் தூக்கு மரம் ஏற வேண்டி வந்தாலும் தயாராக இருங்கள். - காந்தியடிகள்
* மன உறுதி இல்லாதவனுடைய உள்ளம் குழம்பிய ஒரு கடலுக்குச் சமமானது. - பாரதியார்
* முதியவர் ஒருவருக்கு அளிக்கப்படும் கௌரவம் கடவுளுக்குச் செய்யப்படும் மரியாதையாகும்.- நபிகள் நாயகம்
* மாறுதல்கள் எல்லாம் இயல்பானவை என்று அனுமதியாகவும் ஏற்றுக் கொள்ளவேண்டும். - சுவாமி சின்மயானந்தர்
* நிலத்திற்கு அழகு நெல்லுக்கு கரும்பும், குளத்திற்கு அழகு தாமரை, பெண்ணுக்கு அழகு நாணம், மனிதனுக்கு அழகு நற்செயல்கள். - விளம்பிநாகனார்

ப.கோபிநாத், தரம்-6, யாழ் இந்துக் கல்லூரி.

# சிறுவர்களின் ஆற்றல்...





சந்தோசம்: உரும்பிராய் கிட்ஸ் பார்க் பாலர் பாடசாலையில் கற்கும் மாணவர்களுக்கு ஊக்கக் கற்றல் உதவிப் பயிற்சி நெறி அண்மையில் வழங்கப்பட்டது. 5 நாள்கள் செயற்பாட்டைக் கொண்ட இந்த நிகழ்வில் சிறுவர்களின் ஆற்றுகையும் நிகழ்த்தப்பட்டது. கல்லூரி அதிபர் அ.பஞ்சலிங்கம் தலைமையில் நிகழ்வுகள் இடம்பெற்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூடானில் சில தென் மாகாணங்களை உள்ளடக்கிப் புதிய நாடு விரைவில் உதயம்

## 22 வருட உள்நாட்டுப் போருக்கு முடிவு

ஜூபா, ஜன. 6

ஆபிரிக்க நாடான சூடானிலிருந்து தெற்கு மாகாணங்கள் சில இணைந்து தெற்கு சூடான் எனும் புதிய நாடு உருவாகவுள்ளது.

இதற்கான மக்கள் வாக்கெடுப்பு கடந்த 2ஆம் திகதி நடந்தது. எண்ணெய் வளம் கொழிக்கும் பெரிய ஆபிரிக்க நாடுகளில் சூடான் நாடும் ஒன்று.

இதன் தெற்கு மாகாணங்கள் தனியாகப் பிரிந்து தெற்கு சூடான் நாடு உருவாக் கடந்த 2005ஆம் ஆண்டு ஏற்பட்ட ஒப்பந்தத்தின்படி மேற்கொள்ளப்பட்டது. ஏறத்தாழ 22 ஆண்டுகளாக நடந்த உள்நாட்டுப் போரினால் இதுவரை 3.5 இலட்சம் மக்கள் பலியாகியுள்ளனர்.

அதன் பின்னரே மக்கள் வாக்கெடுப்பு மூலம் சூடான் நாட்டை வடக்கு, தெற்கு என பிரிப்பதா, வேண்டாமா என தீர்மானிக்கப்பட்டது. அதன்படி கடந்த 2ஆம் திகதி தெற்கு சூடான் மக்கள் வாக்கெடுப்பு ஆணையாளர் சான்ரீக்மடுவாட் முன்னிலையில் நடந்தது.

இந்நிலையில் மக்கள் வாக்கெடுப்பு குறித்து ஆலோசனை செய்ய சூடான் ஜனாதிபதி ஒமர்அல்-பஷீர் தலைநகர் ஜூபா நகருக்கு வந்தார். அவருக்கு ஜூபா விமான நிலையத்தில் தெற்கு சூடானின் செல்வாக்குமிக்க அரசியல் தலைவர் சால்வாகிரர், தகவல் தொடர்புத்துறை அமைச்சர் பார்னாபா மாரியால் ஆகியோர் சிவப்பு கம்பள வரவேற்பு அளித்தனர்.

பின்னர் பத்திரிகையாளர்களுக்குப் பேட்டியளிக்கையில், ''சூடான் இரண்டாகப் பிரிவது தனிப்பட்ட முறையில் எனக்கு வருத்தம் அளிக்கிறது. எனினும் மக்களுக்கு நல்லது நடந்தால் சரிதான்'' என்றார்.

மக்கள் வாக்கெடுப்பு 100 சதவீதம் முடிந்துவிட்ட நிலையில் பெரும்பாலான மக்கள் சூடான் இரண்டாகப் பிரிவதை விரும்புகின்றனர். விரைவில் சூடான் இரண்டாகப் பிரிந்து தெற்கு சூடான், வடக்கு சூடான் என அழைக்கப்படும் என செய்தி நிறுவனங்கள் தெரிவிக்கின்றன. (எ)

# பாகிஸ்தான் பாஞ்சாப் மாநில ஆளுநர் சொந்தப் பாதுகாவலரால் சுட்டுக்கொலை



பாகிஸ்தானின் பஞ்சாப் மாநில ஆளுநர் சமல்தான் தாஸீர் அவரது பாதுகாப்பு உத்தியோகஸ்தர் ஒருவரால் கடந்த செவ்வாய்க்கிழமை சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமாபாத்தில் உணவகமொன்றிலிருந்து தனது வாகனத்தை நோக்கி நடந்து வந்தபோது பாதுகாப்பு ஊழியர் ஒருவரால் அவர் சுடப்பட்டார்.

56 வயதான தாஸீரின் உடலில் 9 துப்பாக்கி குண்டுகள் பாய்ந்துள்ளன.

ஆளுநரை சுட்டுக்கொன்ற பின் மேற்படி பாதுகாப்பு ஊழியர் தானாகக் சரணடைந்தார் என்று தெரிவிக்கப்பட்டது. ஆளுநர் சல்மான் தாஸீர் நாட்டின் புனிதச்சட்டங்களை நிந்தித்து பேசியதால் அவரைக் கொன்றதாகவும் இதற்காகத் தான் பெருமையடைவதாகவும் அந்த பாதுகாப்பு உத்தியோகஸ்தர் தெரிவித்ததாக அவரை விசாரித்து வரும் அதிகாரிகள் கூறியுள்ளனர்.

பல்வேறு விடயங்கள் குறித்து வெளிப்படையாக கருத்துக்களை தெரிவித்துவந்த தாஸீர், இஸ்லாமிய ஆயுதக் குழுக்களை கடுமையாக விமர்சித்து வந்தவர் என்றும் குறிப்பிடப்படுகின்றது. (ம)

# மீண்டும் வெள்ள அபாயத்தில் ஆஸி.ராக்ஹேம்ப்டன் நகர்

## நாட்டின் பிற பகுதிகளில் இருந்து துண்டிப்பு

ராக்ஹேம்ப்டன், ஜன. 06

ஆஸ்திரேலியாவின் குயின்ஸ்லேண்ட் மாகாணத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பிற பகுதிகள் எல்லாம் வெள்ள நிர் வடிந்தது ஓரளவு மீண்டு வரும் நிலையில், ராக்ஹேம்ப் டன் நகர் மீண்டும் வெள்ள அபாயத்தில் சிக்கியுள்ளது.

அதன் அருகில் ஒடும் ஆறுகளில் நீர்மட்டம் மேலும் உயர வாய்ப்பிருக்கிறது என அதிகாரிகள் எச்சரித்துள்ளனர்.

ஆஸ்திரேலியாவின் வட பகுதியிலுள்ள குயின்ஸ் லேண்ட் மாகாணம், கடந்த ஒரு மாத காலமாக வெள்ளத்தில் சிக்கி சீரழிந்து வருகிறது. வெள்ளத்தால் இதுவரை அம்மாகாணத்தில் இரண்டு இலட்சம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

22 நகரங்கள் நீரில் மூழ்கியுள்ளன. பல பகுதிகளில் தரை வழிப் போக்குவரத்து துண்டிக்கப்பட்டுள்ளது.

குயின்ஸ்லேண்ட் மாகாணத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகள் கொஞ்சம் கொஞ்சமாக மீண்டு வருகின்றன. அங்கு நிவாரணப் பணியில் இராணுவம் ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

நிலக்கரிச் சுரங்கங்களில் 75 சதவீதம் மூடப்பட்டுவிட்டன என அம்மாகாண முதல்வர் அன்னா பிளிக் தெரிவித்துள்ளார்.

அபாயத்தில் ராக்ஹேம்ப்டன் மாகாணத்தின் பிற பகுதிகளில் வெள்ள நிவாரணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில், ராக்ஹேம்ப்டன் நகர் நாட்டின் பிற பகுதிகளிலிருந்து முற்றிலும் துண்டிக்கப்பட்டு விட்டது.

அதன் அருகில் ஓடும் பிட்சோரி ஆற்றின் நீர்மட்டம் தற்போது 31 அடியாக உள்ளது. இது மேலும் உயரும் என்று வானிலை மைய அதிகாரிகள் எச்சரித்துள்ளனர். நகரின் முக்கிய விமானநிலையம் மூடப்பட்டு விட்டது. மேலும், சாலைகள் பல வெள்ளக் காடாக காட்சியளிக்கின்றன.

இதனால், மக்கள் போக்குவரத்துக்கு சிறிய படகுகளைப் பயன்படுத்தி வருகின்றனர். தற்போது இராணுவச் சிப்பாய்கள் படகுகள் மூலம் அங்கு உணவு மருந்துப்பொருள்களைக் கொண்டு செல்கின்றனர். தேவைப்பட்டால் ஹெலிக்கொப்டர்கள் பயன்படுத்தப்படும் என்று பிரதமர் ஜூலியா கில்லார்ட் தெரிவித்துள்ளார்.

மொத்தம் 75 ஆயிரம் பேர் வசித்து வரும் அந்நகரில், மக்கள் வீடுகளை விட்டு வெளியேற வேண்டும் என்று பொலிஸார் வற்புறுத்திய போதும் பலர் அங்கிருந்து நகர மறுத்து வருகின்றனர்.

தற்காலிக முகாமில் இப்போது ஆயிரத்து 500 பேர் தங்கியுள்ளனர். இதனால் மீட்புப் பணியில் மேலும் தொய்வு ஏற்பட்டுள்ளது. வெள்ளத்தில் பாம்புகளும் சேர்ந்து வருவதால் மக்கள் கட்டாயமாக வீடுகளை விட்டு வெளியேறவேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே, இறந்த மூன்று பேர் பாம்புக் கடித்துதான் இறந்து போயினர் என்பது குறிப்பிடத்தக்கது.

பொருளாதாரப் பாதிப்பு

* இந்த வெள்ளத்தால் இதுவரை 5,000 கோடி ரூபாய்க்கும் மேல் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.
* ஆஸ்திரேலியாவின் மிக முக்கிய ஏற்றுமதியே நிலக்கரி தான். அது குயின்ஸ்லேண்ட் மாகாணத்தில் தான் அதிகளவில் கிடைக்கிறது. வெள்ளத்தால் சுரங்கங்கள் மூடப்பட்டுள்ள நிலையில் ஏற்றுமதி தேறுவதற்கு இன்னும் ஓரிரு மாதங்கள் ஆகலாம்.
* வெள்ளத்தால் விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளதால், பழங்கள், காய்கறிகள், பால், அதைச் சார்ந்த உணவுப் பொருள்கள் ஆகியவற்றின் விலைகள் எகிறி விட்டன.
* வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்கள் தங்களுக்கான காப்புறுதித் தொகையை அதிகளவில் நிதி நிறுவனங்களிலிருந்து வாங்கி வருவதால் நாட்டின் பிரபல 'சன் கார்ப்' என்ற காப்புறுதி நிறுவனம் திங்கட்கிழமை பங்குச் சந்தையில் 3 சதவீதம் வர்த்தகத்தை இழந்தது.
* இருப்பினும் வெள்ளத்தால் ஏற்பட்ட இந்த மொத்த இழப்பு நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 0.4 சதவீதம் மட்டுமே என்கின்றனர் நிபுணர்கள்.

# பனிக்கரடிகளுக்கு என்ன மதிப்பு ஆராய்கிறது கனேடிய அரசு



கனேடிய சமூகத்தில் துருவப் பனிக் கரடிகள் பெற்றுள்ள மதிப்பு என்னவென்று மதிப்பீடு செய்வதற்கான ஆராய்ச்சி ஒன்றுக்கு கனேடிய அரசு உத்தரவிட்டுள்ளது.

அண்மைய ஆண்டுகளாக துருவக் கரடியின் வாழ்விடங்கள் சுருங்கி வருவதோடு அந்த வகைக் கரடிகளின் எண்ணிக்கையும் கிடுகிடுவென வீழ்ச்சி கண்டு வருகின்றது.

கனடாவின் தேசிய சின்னங்களில் ஒன்றாக விளங்கும் இந்த விலங்கினத்தை எவ்வாறு பாதுகாப்பது என்பது தொடர்பில் கனடாவில் கருத்து வேற்றுமையும் காணப்படுகிறது.

கனேடியர்கள் பெரும்பான்மையானோர் துருவக் கரடி ஒன்றை நேரில் கண்டிருக்கமாட்டார்கள். ஆனாலும் கனடாவோடு இந்த விலங்கு அதிகம் தொடர்புபடுத்திப் பார்க்கப்படுகிறது.

துருவக் கரடிகளுக்கு வர்த்தக ரீதியில் ஒரு பண மதிப்பு இருப்பதென்பது வேறு. ஆனால், தற்போது கனேடிய அரசு உத்தரவிட்டுள்ள இந்த ஆராய்ச்சியானது இப்படியான பொருளாதார கண்ணோட்டத்தையும் தாண்டி ஆராயும் என்று கனேடிய சுற்றாடல் அமைப்பைச் சேர்ந்த மேரி டெய்லர் கூறுகிறார். (ம)

# எதியோப்பியாவில் படகு விபத்து: 80 பேர் பலி


எத்தியோப்பியா நாட்டைச் சேர்ந்தவர்கள் வந்து கொண்டிருந்த படகு ஒன்று ஏமனில் விபத்துக்குள்ளானதில் 80 பேர் பலியாகி இருக்கலாம் என்று அச்சம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எத்தியோப்பியா நாட்டைச் சேர்ந்தவர்கள் இரு படகுகளில் ஏமன் நாட்டுக்கு குடியமர்வதற்காக படகு ஒன்றில் சென்று கொண்டிருந்தார்கள்.

இந்த இரு படகுகளும் நடுக்கடலில் சென்று கொண்டிருந்த போது, திடீரென கவிழ்ந்து விபத்துக்குள்ளாகின.

இந்த விபத்தில் 80 பேர் வரை பலியாகி இருக்கக்கூடும் என அஞ்சப்படுகிறது.

இருப்பினும் அவர்களை தேடும் பணி தொடர்ந்து நடைபெற்று வருவதாக ஏமன் நாட்டு உள்துறை அமைச்சு தெரிவித்துள்ளது. (ம)



2011 இன் முதலாவது சூரிய கிரகணம் செவ்வாய்க்கிழமை நடந்தது. சூரியனின் ஒரு பகுதி மட்டுமே மறையக்கூடிய இந்த கிரகணம் இந்த முறை அதிகமாக மத்திய கிழக்கு மற்றும் ஐரோப்பிய நாடுகளில் காணக்கூடியதாக இருந்தது என்று கூறப்பட்டது.

# ஈரானின் முன்னாள் மன்னர் ஷாவின் புதல்வர் தற்கொலை

ஈரானின் முன்னாள் ஷா வம்சத்தைச் சேர்ந்த இளைய புதல்வர் அலிரீஸா பலாவி அமெரிக்காவில் தற்கொலை செய்துகொண்டார்.


இதுகுறித்து பி.பி.சி. செய்தி நிறுவனம் வெளியிட்டுள்ள செய்தியில், ஈரானில் 1979ஆம் ஆண்டிற்கு முன்னர் மன்னராக இருந்த ஷா முகமது ரீஸா பலாவி என்பவரின் ஆட்சி கடந்த 1979ஆம் ஆண்டு ஏற்பட்ட இஸ்லாமியப் புரட்சி மூலம் முடிவுக்குவந்தது.

நாடு கடத்தப்பட்ட இவர் கடந்த 1980 ஆம் ஆண்டு எகிப்தில் தஞ்சமடைந்திருந்தபோது உடல்நலக்குறைவால் இறந்தார். இவருக்கு இரு புதல்வர்களும், ஒரு புதல்வியும் இருந்தனர்.

இந்நிலையில் அப்போது இளவரசாக இருந்த இளைய புதல்வர் அலி ரீஸா பலாவி (வயது - 44) கடந்த சில ஆண்டுகளாக மன அழுத்தத்தினால் பாதிக்கப்பட்டிருந்தார் என்றும் அதற்காக சிகிச்சை எடுத்துக்கொண்டிருந்தார் என்னும் பின்னர் திடீரென தற்கொலை செய்து கொண்டார் என்றும் அவரது உறவினர்கள் தெரிவித்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரவுண்ஸிடமிருந்து யாழ் மண்ணில் மேம்படுத்தப்பட்ட சேவைகள்




பிரவுண்ஸ் அதன் வட பிராந்திய மத்திய நிலையத்தினை யாழ் மண்ணில் ஆரம்பித்துவைத்துள்ளது.

பிரவுண்ஸ் மத்திய நிலையமானது ஒரே கூரையின் கீழ் அதன் சேவைத் தீர்வுகளை வழங்கவுள்ளது. இல.46, மணிக்கூட்டு கோபுரம் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் யாவருக்கும் வசதியாக நகரிற்கு அருகாமையிலே அமைந்துள்ளது.

பிரவுண்ஸ் மத்திய நிலையம் அதன் திட்டத்தை பல்வேறுப்பட்ட பண்டப் பெயர்க் கொண்ட பொருள் வரிசையான எழுதும் கருவி தொடக்கம் அதி வலுமிக்க அறுவடை செய்யும் இயந்திரம் வரை. வாடிக்கையாளர்களுக்கு விசால தெரிவுகளான இல்லம், அலுவலகம், வியாபாரம் மற்றும் விவசாயம் போன்றுவற்றை சந்தைப்படுத்துகின்றது.





மணிக்கூட்டு கோபுரம் வீதி, யாழ்ப்பாணத்தில் புதிய பிரவுண்ஸ் மத்திய நிலையம். ▲ திறப்பு விழாவில் நடைப்பெற்ற அம்சங்கள் மற்றும் நடனக்காட்சிகள். ▼







UK இல் இருந்து வருகை தந்த விசேட பிரதிநிதி ஊடாக...

SPOT ADMISSION

MARKETING MANAGEMENT | BUSINESS MANAGEMENT | TRAVEL & TOURISM | IT & COMPUTING

IELTS அவசியமில்லை

UK இல் பிரபல்யமான கல்லூரி மற்றும் பல்கலைக்கழகங்களில் மேற்குறிப்பிடப்பட்ட கற்கை நெறிகளுக்கு உடனடி அனுமதிகள் வழங்கப்படுகின்றன

வேண்டிய ஆவணங்களுடன் வரவும்

யாழ்ப்பாணத்தில்
hotel Lovusi
584, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். (BOC அருகாமை)
08-01-2011 (மு.ப 9.00 - பி.ப 4.00)

வடமராட்சியில்
ஸ்ரீ பரமானந்தா சிறுவர் இல்லம்
பருத்தித்துறை வீதி,
வதிரி, கரவெட்டி.
09-01-2011 (மு.ப 9.00 - பி.ப 4.00)

Coventry University London Campus
West London College WLC
HAMILTON COLLEGE
Nilai University College
Cambridge Management College

முற்பதிவுகளுக்கு 24 மணிநேரமும் தொலைபேசியில் தொடர்பு கொள்ளலாம்
077 60 70 924

AANGI
ACGC
Aangi Career Guidance Consultant
Point pedro road, Kondavil Junction, Kopay. TP 077 60 70 924

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்

### கந்தசாமி சிவராசா



வண் - வடமேற்கு, நாவலடி ஒழுங்கையைச் சேர்ந்த கந்தசாமி சிவராசா நேற்று (05.01.2011) புதன்கிழமை காலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வட்டுக்கோட்டை மேற்கைச் சேர்ந்த கந்தசாமி - சிவபாக்கியம் தம்பதியின் சிரேஷ்ட புத்திரனும் கல்வியங்காடு பெருமாள்-அன்னபூரணம் தம்பதியின் மருமகனும் காலஞ்சென்ற தேவமலரின் அன்புக் கணவரும் மலர்விழி, சிவமலர், ஜெகதீபன், பார்த்தீபன், சதீஸ் (பிரான்ஸ்) ஆகியோரின் அருமைத் தந்தையும் ஸ்ரீகாந், மகேந்திரராசா, துர்க்கா ஆகியோரின் மாமனாரும், விஷ்ணுதன், வைஷ்ணவி ஆகியோரின் அருமைப் பேரனும் சுலோசனா, ராஜேஸ்வரி, புனிதா, செல்வராணி ஆகியோரது அண்ணனும், தேவராசா, தேவரஞ்சன், குமார், திருச்செல்வம், தேவி, தேவசோதி, தேவசெல்வி, தேவராணி, தேவசீதா, ஆனந்த் ஆகியோரின் அன்பு மைத்துனரும் பரமலிங்கம் (ஊடகவியலாளர்), பன்னீர்ச்செல்வம், மோகனராஜா, இராசகுமார், ரமேஸ் (இத்தாலி) ஆகியோரின் சகலனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (06.01.2011) வியாழக்கிழமை நண்பகல் 12 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு தகனம் செய்ய எடுத்துச் செல்லப்படும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

நாவலடி ஒழுங்கை,
வண்-வட மேற்கு, யாழ்ப்பாணம். (108505)

தகவல்:
சி.ஜெகதீபன் (மகன்)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

### அப்புத்துரை சோமசேகரம்

(இளைப்பாறிய தபால் ஊழியர் - யாழ்ப்பாணம்)



தோற்றம்:
13.07.1938

மறைவு:
07.12.2010

திதி: பூர்வபக்க துதியை

நகைச்சுவையுடன் நாடகமேடையிலும் [தம்பி கொழும்பிலை]
நிஜவாழ்க்கையிலும் எல்லோரிடமும் அன்பாகப் பேசி
உறவினர்களை இன்முகத்துடன் வரவேற்றுப் பேசும்
உங்களை இனியெப்போது காண்போம் என ஏங்கும்
உங்கள் குடும்பத்தாருடன் துயர் பகிர்கிறோம்.

மணியம் பாக்கை,
பழைய மார்க்கட், யாழ்ப்பாணம்.

த.செல்வராசா
குடும்பத்தினர்.

## நடமாடும் பற்சிகிச்சை குடாநாட்டில் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜன.6

சுகாதார சேவைகள் திணைக்களத்தில் நடமாடும் பற்சிகிச்சை வாகனம் மூலம் பற்சிகிச்சை வழங்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கடந்த வாரத்தில் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்த இந்த நவீன வசதிகளைக் கொண்ட நடமாடும் பற்சிகிச்சை வாகனம் தனது பணிகளை ஆரம்பித்துள்ளது என்று சுகாதாரத் திணைக்களத்தினர் தெரிவித்தனர்.

இந்த நடமாடும் பற்சிகிச்சை வாகனத்தில் டாக்டர் ஒருவரும் தாதியரும் சேவையாற்றி வருகின்றனர். (ம-26)

### தவறி விட்டது

பற்றிமா வீதி, பண்டத்தரிப்பைச் சேர்ந்த ப.து.ஜோயல் அலிஸ்ரன் என்பவரது மோட்டார் சாரதிப்பத்திரம், வரிப்பத்திரம், காப்புறு திப்பத்திரம் என்பன 04.01.2011 அன்று சண்டிலிப்பாய்க்கும் பண்டத்தரிப்புக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ் உள்ள தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.
T.P-0772543253,0773248980

### மணமகன் தேவை

யாழ். இந்து கௌரவ, அரச உயர்பதவி வகிக்கும் 33வயது, செவ்வாய் தோசமற்ற பெண்ணுக்கு தகுந்த பட்டதாரி மணமகன் தேவை. சைவ போசனம் விரும்பத்தக்கது.
நேரடித்தொடர்பு- 0772844179

### German Swiss மொழி வகுப்புகள்

German Swiss, மொழி வகுப்புகள் தமிழ் மொழி பெயர்ப்புடன் நடைபெறுகின்றது. CDமற்றும் புத்தக விளக்கதுடன் Germanyல் இருந்து வந்த ஆசிரியரால் நடைபெறுகிறது.
10,Palaly Road, Jaffna.T.P.0771604823

### தவறிவிட்டது

புத்தூர் வடக்கு, மேம்பாய்ப்புலம் எனும் முகவரியைச் சேர்ந்த தவராசா உதயகாந்தி என்பவரது தேசிய அடையாள அட்டை [695273738V]கடந்த [29.12.2010] அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்குறிப்பிட்ட முகவரிக்கு அனுப்பி உதவவும்.

### வீடு வாடகைக்கு

இராமநாதன் வீதி, நாச்சிமார் கோயிலடியில் ஐந்து அறைகள், வாகனத்தரிப்பிடம் மற்றும் சகல வசதிகளும் கொண்ட வீடு வாடகைக்கு உண்டு.
(நிறுவனங்கள் விரும்பத்தக்கது)
தொடர்பு: 0779002040

## தேவை

ஆண், பெண்களுக்கான விடுதியில் தங்கியிருந்து பணிபுரிவதற்கு மேற்பார்வையாளர் (ஆண், பெண்), சமையல்காரர் (ஆண், பெண்) மற்றும் வேலையாள்கள் தேவை.

நாளை (07.01.2011) வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு நேரில் வரவும்.

140, கோயில் வீதி, யாழ்ப்பாணம்.
தெ.பே.: 222 5796


## அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

1257 நீலம்

வெற்றி இலக்கங்கள்

இடபம் 01 15 28 55 04-01-2011

ஜக்பொட் பரிசு ரூபா. 3,105,850/- வெல்லப்பட்டுள்ளது

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 249,529 | 20/- | 4,990,580/- |
| 2 இலக்கங்கள் | 22,979 | 40/- | 919,160/- |
| 1 இல. + லக்கினம் | 22,656 | 60/- | 1,359,360/- |
| 2 இல. + லக்கினம் | 2,080 | 200/- | 416,000/- |
| 3 இலக்கங்கள் | 607 | 1000/- | 607,000/- |
| 3 இல. + லக்கினம் | 59 | 10,000/- | 590,000/- |
| 4 இலக்கங்கள் | 03 | 200,000/- | 600,000/- |
| 4 இல. + லக்கினம் | 01 | 3,105,850/- | 3,105,850/- |
| பிரதான சீட்டிழுப்பில் பரிசுகளின் மொத்தம் | | | 12,587,950/- |
| இரண்டாம் வாய்ப்புக்கான பரிசுகள் | 672 | | 634,500/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 298,586 | | 13,222,450/- |

இந்த வெள்ளிக்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 2,000,000/-

### இரண்டாவது வாய்ப்பு

வெற்றி இலக்கங்கள்

மிதுனம் 13 23 32 51


ஜக்பொட் பரிசு ரூபா. 500,000/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 3 இலக்கங்கள் | 669 | 500/- | 334,500/- |
| 4 இலக்கங்கள் | 3 | 100,000/- | 300,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 500,000/- | - |
| இரண்டாவது வாய்ப்புக்கான மொத்தத் தொகை | 672 | | 634,500/- |

அடுத்த வெள்ளிக்கிழமைக்கான இரண்டாவது வாய்ப்பின் ஜக்பொட் ரூபா. 600,000/-


# மரண அறிவித்தல்

## சுப்பிரமணியம் சண்முகராசா (சண்முகம்)



வடலியடைப்பைப் பிறப்பிடமாகவும் வட்டுக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் சண்முகராசா (03.01.2011) திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம் மற்றும் அன்னலட்சுமி தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்ற வைத்திலிங்கம் மற்றும் சின்னம்மா தம்பதியினரின் மருமகனும் சுசீலாதேவியின் அன்புக் கணவரும் சாந்தீபன், ஜசிகரன், ஜீவரூபன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் தெய்வேந்திரம், அஞ்சலாதேவி, தர்மபாலன், சற்குணதேவி, மகேந்திரம், சிவசுந்தரம், சுசிலாதேவி, தயாளகுண தேவி, நவீந்திரராஜா, ரவீந்திரராஜா, பாலநாராஜணி ஆகியோரின் அன்புச் சகோதரனும் சாரதாதேவி, கிருஸ்ணபிள்ளை, சந்திரபவானி, காலஞ்சென்ற மனோகரன் மற்றும் சிவனேஸ்வரி, தேவலோஜினி, ஜோதீஸ்வரன், பத்மராணி, விக்னேஸ்வரன், சுகிர்தா, ரவீந்திரன், கணேசரெத்தினம், இராசரெத்தினம், சற்குணரெத்தினம், நவரெத்தினம், விஜயலட்சுமி, இராசலட்சுமி ஆகியோரின் மைத்துனரும் சரோஜினிதேவி, பேரின்பராஜா, வேலாயுதபிள்ளை, மங்கள இராஜேஸ்வரி, சிவமதி, குலசேகரம் ஆகியோரின் உடன் பிறவாச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.01.2011) வியாழக்கிழமை பகல் 1 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக விளாவெளி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
மனைவி, பிள்ளைகள்,
தெய்வேந்திரம் (சகோதரன்),
சுப்பிரா உணவகம், சங்கானை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.சி.சியின் கனவு அணியில் இலங்கையிலிருந்து முரளி மட்டுமே



ஐ.சி.சி தனது 2010ஆம் ஆண்டுக்கான கனவு அணியினை வெளியிட்டுள்ளது. இந்த அணியில் இலங்கையர்களில் அதிகூடிய வாக்குகளுடன் முரளீதரன் முதலிடத்தினைப் பிடித்துள்ளார்.

ஐ.சி.சியினால் வருடா வருடம் கனவு அணியினை தெரிவுசெய்து வருகின்றது. அந்த வகையில் 2010 ஆம் ஆண்டுக்கான வாக்கெடுப்பு கடந்த டிசெம்பர் மாதம் 22 ஆம் திகதி முதல் ஜனவரி மாதம் 2 ஆம் திகதி வரை இடம்பெற்றது. இதில் உலகெங்கிலுமுள்ள 97 நாடுகளைச் சேர்ந்த 6 லட்சம் ரசிகர்கள் வரையில் ஐ.சி.சியின் இணையத்தளத்தினூடாக வாக்களித்துள்ளனர்.

இந்த அணிக்கான போட்டியில் சகல அணிகளையும் பிரதிநிதித்துவப்படுத்தி 48 வீரர்கள் முன்னிலைப்படுத் தப்பட்டிருந்தனர்.

இதில் இலங்கை அணியைச் சேர்ந்த 6 வீரர்கள் பங்கெடுத்தவர்கள். முரளி, அரவிந்த டீ சில்வா,சனத் ஜெயசூரியா,றொமேஸ் களுவுத்தாரண,சமிந்த வாஸ், குமார் சங்கக்கார ஆகியோரே பங்கெடுத்துள்ளனர்.

இலங்கையைச் சேர்ந்த ஆறு வீரர்கள் பங்கெடுத்திருந்தபோதும் முரளிதரன் மட்டுமே அனைத்துலக கிரிக்கெட் சபையால் நடத்தப்பட்ட உலகின் மிகச் சிறந்த வீரர்களைக் கொண்ட அணியில் ஷேன் வோர்னை விடவும் அதி கூடிய வாக்குகளுடன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இறுதி அணியில் அவுஸ்திரேலிய மற்றும் இந்திய அணிகளைச் சேர்ந்த மூன்று வீரர்களும் மேற்கிந்திய தீவுகளைச் சேர்ந்த இரண்டு வீரர்களும் தென்ஆபிரிக்கா, இலங்கை,பாகிஸ்தான் நாடுகளைச் சேர்ந்த ஒரு வீரரும் இடம்பிடித்துள்ளனர்.

மேலும் தென்ஆபிரிக்கா - அவுஸ்திரேலியா அணிகளுக்கு இடையில் 2006 ஆம் ஆண்டு ஜொகன்னஸ் பேர்கில் இடம்பெற்ற ஒரு நாள் போட்டி ரசிகர்களால் மிகச்சிறந்த போட்டியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது. சிறந்த ஆரம்ப துடுப்பாட்ட வீரர்களாக இந்தியாவின் சச்சின் மற்றும் சேவாக் ஆகியோரும் மத்திய வரிசைத் துடுப்பாட்ட வீரர்களாக மேற்கிந்திய தீவுகளின் லாரா,வில் ரிச்சட் ,அவுஸ்திரேலியாவின் ரிக்கி பொண்டிங் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

சிறந்த சகல துறை ஆட்டக்காரராக இந்தியாவின் கபில் தேவ்வும் விக்கெட் காப்பாளராக அவுஸ்திரேலியாவின் கில்கிறிஸ்ட்டும் சுழல் பந்து வீச்சாளராக இலங்கையின் முரளியும் வேகப் பந்து வீச்சாளர் களாக பாகிஸ்தானைச் சேர்ந்த வாசிம் அக்ரம், தென்னாபிரிக்காவின் டொனால்ட், அவுஸ்திரேலியாவின் மெக்ராத் ஆகியோரும் ரசிகர்களால் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (15)

# சஹீர்கான் எனது பந்துவீச்சு குரு; ஆஷஷ் தொடரில் கலக்கி வரும் அண்டர்சன்



இங்கிலாந்து அணியின் முன்னணி வேகப்பந்து வீச்சாளர்களில் ஒருவர் அண்டர்சன். அவுஸ்திரேலியாவுக்கு எதிரான ஆஷஷ் டெஸ்ட் தொடரில் இவரது பங்களிப்பு முக்கியமாகஇருந்து வருகிறது. இரண்டு டெஸ்டில் இங்கிலாந்து வெற்றி பெற்று முன்னிலையில் இருக்க அண்டர்சன் காரணமாக இருந்தார்.

வேகப்பந்து வீச்சாளரான அண்டர்சன் ஆஷஷ் தொடரில் இதுவரை நடந்த நான்கு டெஸ்டில் 17 விக்கெட்டுகளை கைப்பற்றி உள்ளார். இந்தத் தொட ரில் அதிக விக்கெட்டுகளை கைப்பற்றிய வீரராக அவர் திகழ்கிறார். இந்த நிலையில்தான் சஹீர்கானிடம் இருந்து பந்து வீச்சில் சில நுணுக்கத்தை கற்றதாக அண்டர்சன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் கூறியதாவது:

2008ஆம் ஆண்டு நாங்கள் இந்தியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு விளையாடினோம். அப்போது சஹீர்கானிடம் இருந்து பந்து வீச்சில் சில நுணுக்கங்களை தெரிந்து கொண்டேன். அவர் பந்தை 'சுவிங்ஸ்' செய்வதில் சிறப்பாக செயல்பட்டார். பந்து எப்படி 'சுவிங்ஸ்' ஆகிறது என்பதை துடுப்பாட்டக்காரர்களுக்கு தெரியாத வகையில் அவர் வீசுகின்றார். சஹீர் கானிடமிருந்து இந்த நுணுக்கத்தை நான் கற்றுக் கொண்டேன். இது எனக்கு உதவியாக இருக்கிறது. இதேபோல பல்வேறு சர்வதேச வீரர்களிடம் இருந்து பந்துவீச்சு பற்றிய நுணுக்கம் கற்று இருக்கிறேன். பாகிஸ்தான் வீரர் முகமது ஆசிப்பிடம் இருந்தும் சில நுணுக்கம் கற்று இருக்கிறேன் - இவ்வாறு அண்டர்சன் கூறினார். (15)



# இயன் சப்பல் இந்தியாவின் பக்கம்



2010ஆம் ஆண்டின் சிறந்த உலக கிரிக்கெட் அணியைத் தேர்வு செய்துள்ள கிரிக்கெட் நிபுணரும் இந்தியாவின் முன்னாள் பயிற்றுவிப்பாளருமாகிய இயன் சப்பல் அந்த அணியில் ஒரு அவுஸ்திரேலிய வீரரைக் கூடச் சேர்க்கவில்லை. மாறாக இந்தியாவின் டோனி, டெண்டுல்கர், சேவாக், சஹீர்கானைச் சேர்த்துள்ளார். தென்ஆபிரிக்காவிலிருந்து 5 வீரர்களை தனது சிறந்த அணியில் சேர்த்துள்ளார்.

டெய்லி டெலிகிராப் பத்திரிகையில் இந்த அணியை வெளியிட்ட இயன் சப்பல். ஒவ்வொரு வீரரைப் பற்றியும் தனது கருத்தைப் பதிவு செய்துள்ளார்.

2006ஆம் ஆண்டு தனது உலக அணியில் 6 அவுஸ்திரேலிய வீரர்களைத் தேர்வு செய்த இயன் சப்பல் இந்த முறை தனது அணியில் ஷேன் வொட்சனுக்கு மட்டும் இடமளித்துள்ளார். அதுவும் 12ஆவது வீரர் என்ற தகுதி மட்டுமே கொடுத்துள்ளார்.

சேவாக் பற்றிக் குறிப்பிடுகையில்,ஒரு டெஸ்ட் போட்டியின் துவக்கத்திலேயே இரண்டு மணி நேர ஆட்டத்தி னுள்ளேயே இவர் வெற்றியைத் தீர்மானிக்கும் அபாய வீரர். இப்போதைய உலகக் கிரிக்கெட்டில் அதி அபாய வீரர் சேவாக்தான் என்றார்.

சச்சின் டெண்டுல்கார் பற்றிக் குறிப்பிடுகையில், பொண் டிங் போல் அல்லாமல் வயதாவதன் தடுப்பணைகளையும் வெற்றிகரமாகக் கடந்து வந்துள்ளார். அனைத்தையும் விட முக்கியமானது பந்து வீச்சாளர்களை ஆதிக்கம் செலுத்த விடாமல் தனது பழைய திறமையை இப்போது கலையாக மாற்றியுள்ளார்.

டோனி மற்றும் சஹீர்கான் தேர்வு செய்யப்பட்டதைப் பற்றி இயன் சப்பல் கூறுகையில், டோனி சீரான முறையில் துடுப்பெடுத்தாடி வருகிறார். அணிக்கு ஓட்டங்கள் தேவைப்படும்போது ஓட்டங்களைக் குவிக்கிறார். விக்கெட் கீப்பராகவும் போதுமான அளவுக்கு திறமை காண்பித்து வருகிறார். ஒரு கப்டனாக அவரிடம் போதியளவுக்கு திறமை உள்ளது.

சஹீர்கான் ஒரு அபாயகரமான பந்து வீச்சாளராக வளர்ந்துள்ளார். புதிய பந்து, பழைய பந்து இரண்டிலும் அவர் அபாய வீச்சாளர். நல்ல திறமையான அணிகளுக்கு எதிராகவும் அவர் சிறப்பாக விளையாடி வருகிறார்- இவ்வாறு கூறியுள்ளார் இயன் சப்பல்.

சப்பலின் 2010 உலக அணி வருமாறு:

சேவாக், கிரேம் ஸ்மித், ஹஷிம் அம்லா, சச்சின் டெண்டுல்கர், ஜக் கலிஸ், ஏ.பி.டிவில்லியர்ஸ், டோனி (கப்டன்), கிரேம் ஸ்வான், டெய்ல் ஸ்டெய்ன், சஹீர் கான், அண...

# சுகமான ஓய்வு - கும்ளே கிரிக்கெட்டிலிருந்து விடை பெற்றார்

விளையாட்டு அரங்குகளில்

நான்காவது ஐ.பி.எல்., தொடருக்கான ஏலம் ஆரம்பிப்பதற்கு, இன்னும் 3 நாட்களே உள்ள நிலையில், ஏலத்திலிருந்து கும்ளே திடீரென விலகியுள்ளார். இருப்பினும், அணியின் தலைமை ஆலோசகராக தொடரவுள்ளார்.

கடந்த மூன்று ஐ.பி.எல் ரி-20 தொடர்களில் பெங்களூர் அணியில் விளையாடிய முன்னணி சுழல் ஜாம்பவான் அனில் கும்ளே. கடந்த இரு தொடர்களில், கும்ளே தலைமையில் பெங்களூர் அணி ஒரு முறை இறுதிப் போட்டிக்கும் (2009), அரையிறுதி போட்டிக்கும் (2010) சென்றது. இவர் இதுவரை பங்கேற்ற 42 ஐ.பி.எல். போட்டிகளில் 45 விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளார்...



கிரிக்கெட் சங்கத்தில் தலைவராகவும் தேர்வு பெற்றுள்ளார். இதனிடையே 4ஆவது தொடருக்காக, கப்டன் கும்ளே அணியில் இருந்து விடுவிக்கப்பட்டு, விராட் ஹோலியை மட்டும் தக்கவைத்துக் கொள்ள, பெங்களூர் நிர்வாகம் முடிவு செய்தது. இதனால் சொந்த வேலைகள் மற்றும் கிரிக்கெட் நிர்வாகத்தில் கவனம் செலுத்த இருப்பதாக தெரிவித்து, ஐ.பி.எல்.,தொடர் உட்பட அனைத்துவிதமான கிரிக்கெட் போட்டிகளில் இருந்தும், விலகுவதாக கும்ளே திடீரென அறிவித்துள்ளார்.

இதுகுறித்து கும்ளே தெரிவித்தமை வருமாறு:

கடந்த மூன்று ஐ.பி.எல். தொடர்களில் மகிழ்ச்சியுடன் பங்கேற்றேன். இது தவிர, கடந்த 20 ஆண்டுகளுக்கும் மேலாக போட்டிகளில் பங்கேற்று வந்த எனக்கு, கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெறும் நேரம் வந்து விட்டது. இதனால் எதிர்வரும் 8ஆம், 9ஆம் திகதிகளில் நடக்கும் வீரர்கள் ஏலத்தில் இருந்து விலக நான் முடிவு செய்துள்ளேன். இதுவரை எனக்கு ஆதரவளித்த ரசிகர்கள் மற்றும் அனைவருக்கும் எனது நன்றி.

ஒரு வீரர் என்ற முறையில், பெங்களூர் அணி நிர்வாகம் என்னை தக்கவைத்துக் கொள்ளாததால் நான் கோபப்படவில்லை. இந்த காரணத்துக்காக நான் ஏலத்தில் இருந்து விலகவில்லை. என்னை அணியில் வைத்துக் கொள்ளாததற்கு, வேறு ஏதாவது காரணங்கள் இருக்கலாம். இந்த முடிவு நானாகத்தான் வந்தேன். இதனால் எந்த மனவருத்தமும் எனக்கு இல்லை.

பெங்களூர் அணியின் தலைமை ஆலோசகராகப் பொறுப்பேற்பதில் மிகவும் ஆர்வமாக உள்ளேன். கடந்த இரண்டு தொடர்களில் அசத்தியதால் பெங்களூர் அணி மீது, எல்லோருக்கும் அதிக எதிர்பார்ப்புக்கள் ஏற்பட்டுள்ளது.

இதற்கேற்ப சவாலை ஏற்று, அணி நிர்வாகம் மற்றும் ரசிகர்களின் எதிர்பார்ப்பை நிறைவேற்றுவேன் என நம்பக்கை உள்ளது -இவ்வாறு கும்ளே கூறினார். (15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்தியாவுடனான இறுதி டெஸ்ட்:

# ஹர்பஜன் சிங்கின் சுழலில் மிரண்டது தென்னாபிரிக்கா

கேப்டவுன்,ஜன.6

இரண்டாவது இனிங்ஸைத் தொடர்ந்த தென்னாபிரிக்க அணியை, இந்தியப் பந்துவீச்சாளரான ஹர்பஜன் சிங் தனது சுழல் பந்து வீச்சு மூலம் திணறடிக்கவைத்தார். நேற்றைய ஆட்ட நேர முடிவின்போது தென்னாபிரிக்க அணி தனத இரண்டாவது இனிங்ஸிற்காக 341 ஓட்டங்களைச் சேர்த்த வேளையில் சகல விக்கெட்டுக்களையும் இழந்துள்ளது.

நான்காம் நாள் ஆட்டம் ஆரம்பித்தவுடனேயே, ஹர்பஜன் பந்தில் அடுத்தடுத்து பீற்றர்ஸன், அம்லா ஆகியோரின் விக்கெட்டுக்கள் வீழ்த்தப்பட்டன. காயம் காரணமாக விளையாட மாட்டார் என எதிர்பார்க்கப்பட்ட கலிஸ், நேற்றைய போட்டியில் நிதானமாக ஆடி இறுதி வரை ஆட்டமிழக்காது 109 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார். கலிஸின் உறுதியான போராட்டத்தால் தென்னாபிரிக்க அணியின் ஓட்ட எண்ணிக்கை கௌரவ இலக்கை அடைந்தது.

தென்னாபிரிக்கா சென்றுள்ள இந்திய அணி 3 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் பங்கேற்று வருகிறது. முதல் இரண்டு போட்டிகளில், இரு அணிகளும் தலா ஒரு போட்டியில் வெற்றி பெற்றதால், தொடர் 1-1 என சமநிலையில் உள்ளது. வெற்றியாளரை முடிவுசெய்யும் மூன்றாவது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி கேப்டவுனில் நடந்துவருகிறது.

முன்னதாக நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இந்திய அணி தென்னாபிரிக்கா அணியை முதலில் துடுப்பெடுத்தாடுமாறு பணித்தது. அதன்படி முதலாவது இனிங்ஸிற்காக துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்கா 362 ஓட்டங்களை எடுத்தது. இரண்டாம் நாள் ஆட்டநேர முடிவில், இந்திய அணி தனது முதல் இன்னிங்ஸில், 2 விக்கெட்டுக்கள் இழப்புக்கு 142 ஓட்டங்களை எடுத்திருந்தது. கம்பீர் 65 ஓட்டங்களுடனும், சச்சின் 49 ஓட்டங்களுடன் களத்தில் இருந்தனர்.



நேற்றுமுன்தினம் நடந்த மூன்றாம் நாள் ஆட்டத்தில், இந்திய அணி 364 ஓட்டங்களை எடுத்து சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. இந்திய அணி சார்பாக சச்சின் அதிகூடிய ஓட்டமாக 146 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார். இதில் இரண்டு சிக்ஸர்களும் 17 பவுண்டரிகளும் அடங்கும். கம்பீர் 93 ஓட்டங்களுடனும், ஹர்பஜன் சிங் 40 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர். அணித்தலைவர் டோனி ஓட்டமெதனையும் பெறாமல் ஆட்டமிழந்தார்.பந்து வீச்சில் தென்னாபிரிக்க சார்பாக ஸ்ரெய்ன் 5 விக்கெட்டுக்களை கைப்பற்றினார். 2 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் தனது இரண்டாவது இனிங்ஸை ஆரம்பித்த தென்னாபிரிக்க அணி, மூன்றாம் நாள் ஆட்டநேர முடிவில், இரண்டாவது இனிங்ஸில் 2 விக்கெட்டுக்கள் இழப்பிற்கு 52 ஓட்டங்களை எடுத்திருந்தது. பீற்றர்ஸன் (22), ஆட்டமிழக்காமல் இருந்தார். ஹர்பஜன் 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

நேற்று நான்காம் நாள் ஆட்டத்தைத் தொடர்ந்த தென்னாபிரிக்க அணிக்கு, இந்திய அணியின் சுழற் பந்துவீச்சாளர் ஹர்பஜன் சிங் ஆரம்பத்திலேயே அதிர்ச்சியளித்தார். பீற்றர்ஸன் (22), அம்லா (2) ஓட்டங்களுடன் ஹர்பஜன் சிங் பந்துவீச்சில் ஆட்டமிழந்து வெளியேறினர். பின்னர் கலீஸ், டி வில்லியர்ஸ் களம் புகுந்தனர். டி வில்லியர்ஸ் 13 ஓட்டங்களுடன் சகீர்கான் பந்துவீச்சில் ஆட்டமிழந்து வெளியேறினார். அடுத்து களம்புகுந்த பிறின்ஸ் (22), சர்மா பந்துவீச்சில் ஸ்ரீசாந்திடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். பின்னர் கலீஸுன் ஜோடி சேர்ந்த பௌச்சர் (55) நிதானமாக ஆடினார். இருப்பினும் டெண்டுல்காரின் பந்து வீச்சில் பௌச்சர் எல்.பி. டபிள்யூ முறையில் ஆட்டமிழந்தார். அதனைத் தொடர்ந்து களமிறங்கிய ஸ்ரெய்ன் (32),மோர்கல் (28),ரொஸ்ரோபி (8) ஓட்டங்களையும் பெற்று ஹர்பஜன் பந்து வீச்சில் ஆட்டமிழந்தனர்.

பந்து வீச்சில் இந்திய அணி சார்பாக ஹர்பஜன் சிங் 7 விக்கெட்டுக்களை கைப்பற்றினார்.

339 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் ஆட்டத்தின் இறுதி நாளான இன்று இந்திய அணி களமிறங்குகின்றது. எனவே இன்றைய ஆட்டத்தில் பரபரப்புக்கு பஞ்சமிருக்காது என எதிர்பார்க்கப் படுகின்றது. (15)

**விளையாட்டு அரங்குகளில்**

## 100ஆவது சதத்தை நெருங்கும் சச்சின்



இந்திய அணியின் நட்சத்திரத் துடுப்பாட்ட வீரர் சச்சின் டெண்டுல்கர் கடந்த ஆண்டு 7 சதங்களை அடித்திருந்தார். இந்த நிலையில் புத்தாண்டை அவர் சதத்துடன் தொடங்கியிருக்கிறார்.

✱டெண்டுல்கர் நேற்றுமுன்தினம் மோர்கலின் பந்து வீச்சில் சிக்ஸர் அடித்து தனது 51ஆவது சதத்தை நிறைவு செய்தார். அவர் சிக்ஸர் அடித்து சதத்தை எட்டுவது இது 6ஆவது முறையாகும்.

✱தென்னாபிரிக்காவுக்கு எதிராக இது அவரது 7ஆவது சதமாகும். தென்னாபிரிக்க மண்ணில் 5ஆவது சதமாகும். கேப்டவுனில் 2ஆவது சதமாகும்.

✱சர்வதேச அரங்கில் 100 சதங்கள் அடித்த 'செஞ்சரி' நாயகன் என்ற சிறப்பை டெண்டுல்கர் மிக விரைவில் எட்டுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. சர்வதேச கிரிக்கெட்டில் இதுவரை 97 சதங்கள் (டெஸ்டில் 51, ஒரு நாள் போட்டியில் 46) பதிவு செய்திருக்கும் அவர் 2011ஆம் ஆண்டில், 'சதத்தில் சதம்' அடிப்பார் என்று நம்பலாம். இந்தப் பட்டியலில் அடுத்த இடத்தில் ஆஸ்திரேலிய அணித் தலைவர் ரிக்கிபொண்டிங் 68 சதங்களுடன் (டெஸ்ட் 39, ஒரு நாள் போட்டி 29) உள்ளார்.

## ஆஷஸ் கடைசி டெஸ்ட்

# குக்-பெல் ஜோடியின் அதிரடி ஆட்டம் வலுவடைந்தது இங்கிலாந்து அணி



சிட்னி,ஜன.6

குக், பெல் சதம் கடந்து அசத்த, சிட்னி டெஸ்டில் இங்கிலாந்து வலுவான நிலையில் உள்ளது. இங்கிலாந்து அணி 7 விக்கெட்டுக்கள் இழப்பிற்கு 488 ஓட்டங்களை எடுத்து, ஆஸ்திரேலிய அணியை விட 208 ஓட்டங்களால் முன்னிலை வகிக்கிறது.

ஆஸ்திரேலியா, இங்கிலாந்து அணிகள் மோதும் வரலாற்று சிறப்பு மிக்க ஆஷஸ் டெஸ்ட் கிரிக்கெட் தொடர் ஆஸ்திரேலியாவில் நடக்கிறது. முதல் 4 போட்டிகளின் முடிவில் இங்கிலாந்து 2-1 என முன்னிலை பெற்றுள்ளது. கடைசி டெஸ்ட் போட்டி சிட்னியில் நடந்துவருகிறது. முதலில் துடுப்பெடுத்தாடிய ஆஸ்திரேலிய அணி, முதல் நாள் ஆட்ட நேரமுடிவில் 4 விக்கெட்டுக்கள் இழப்புக்கு 134 ஓட்டங்களை எடுத்திருந்தது. மைக்கேல் ஹஸி (12) ஆட்டமிழக்காமல் இருந்தார்.

நேற்றுமுன்தினம் இரண்டாம் நாள் ஆட்டம் நடந்தது. நடுவில் களம்புகுந்த ஹடின் (6), ஸ்மித் (18) சோபிக்கவில்லை. ஹசி (33) ஆறுதல் அளித்தார். அடுத்து வந்த ஜோன்ஸன் அதிரடியாக ஆடி ஓட்டங்களைச் சேர்த்தார். இவருக்கு ஹில்பென்ஹாஸ் நல்ல ஒத்துழைப்புக் கொடுக்க, ஆஸ்திரேலியா 200 ஓட்டங்களைக் கடந்தது. டெஸ்ட் அரங்கில் 6ஆவது அரை சதம் கடந்து வெளியேறினார் ஜோன்ஸன். இவர் 53 ஓட்டங்களைச் சேர்த்தார். ஹில்பெக்ஹாஸ் 34 ஓட்டங்கள் சேர்க்க, 106.1 ஓவரில் சகல விக்கெட்டுக்களையும் இழந்த ஆஸ்திரேலிய அணி முதல் இனிங்ஸில் 280 ஓட்டங்களை எடுத்தது. இங்கிலாந்து தரப்பில் அண்டர்ஸன் 4, பிரஸ்னன் 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பின்னர் முதல் இனிங்ஸை ஆடிய இங்கிலாந்து அணிக்கு ஸ்டிராஸ் அதிரடியான ஆரம்பத்தைக் கொடுத்தார். ஆஸ்திரேலிய பந்து வீச்சை நாலாபுறமும் சிதறடித்த இவர், டெஸ்ட் அரங்கில் 24 ஆவது அரைச் சதம் கடந்தார்.

நேற்றுமுன்தினம் நடந்த இரண்டாம் நாள் ஆட்டநேர முடிவில், இங்கிலாந்து அணி 3 விக்கெட்டுக்கள் இழப்புக்கு 167 ஓட்டங்களை எடுத்திருந்தது. குக் (61), அண்டர்ஸன் (1) களத்தில் இருந்தனர்.

நேற்று மூன்றாம் நாள் ஆட்டம் நடந்தது. தொடர்ந்து ஆடிய அண்டர்ஸன் 7 ஓட்டங்களுடன் சைடிலின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார். மறுமுனையில் குக் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திக்கொண்டிருந்தார். பின்னர் களம் புகுந்த கொலிங்வூட் (7) நீண்ட நேரம் நிலைக்கவில்லை. பீர் வீசிய பந்தில் ஹில்பென்ஹாஸிடம் பிடிகொடுத்து வெளியேறினார். அடுத்து குக்குடன் ஜோடி சேர்ந்தார் பெல். இந்த ஜோடி அதிரடியான ஆட்டத்தை வெளிப்படுத்தி அணியின் ஓட்ட எண்ணிக்கையை வெகுவாக உயர்த்தியது. மிகச் சிறப்பாகச் செயற்பட்ட பெல், சதம் கடந்து (115) ஜோன்ஸன் வீசிய பந்தில் கிளாக்கிடம் பிடிகொடுத்து வெளியேறினார். பின்னர் பிராஜர் களம்புகுந்தார்.

அதிரடியாக ஆட்டத்தை வெளிப் படுத்திக்கொண்டிருந்த குக் 198 ஓட்டங்களை எடுத்து வொட்ஸன் வீசிய பந்தில் ஹஸியிடம் பிடிகொடுத்து வெளியேறினார். பிராஜர் அரைச் சதம் கடந்து (54) வெளியேறினார். பின்னர் பிரஸ்னன் களம்புகுந்தார்.

நேற்றைய ஆட்டநேர முடிவில் இங்கிலாந்து அணி 141 ஓவர்கள் முடிவில் 7 விக்கெட்டுக்களை இழந்து, 488 ஓட்டங்களை எடுத்து வலுவான நிலையில் உள்ளது.

இங்கிலாந்து அணி ஆஸ்திரேலிய அணியை விட 208 ஓட்டங்களால் முன்னிலை வகிக்கின்றது.

நான்காம் நாள் ஆட்டம் இன்றாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்

### அம்பலவன் காசியன்

(பிச்சையப்பா)



கன்பொல்லையை வசிப்பிடமாகவும் பிறப்பிடமாகவும் கொண்ட பிரபல சந்தைக், கடை, குத்தகை வாணிபர் அம்பலவன் காசியன் (பிச்சையப்பா) காலமாகி விட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வேரோண்டை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கிரிதரன் (பெறாமகன்)
0776916344

(சி-574421)

## ஆண்டு 4 நினைவுகள்...



திருமதி நடராசா அழகம்மா

அவனியில் 02.06.1926 — விண்ணில் 22.12.2006

திதி: வளர்பிறை துதியை
06.01.2011

நன்றாய் எங்களை வாழ வைத்தீர் - அம்மா
நீங்கள் இல்லாத குறையை
யார் தீர்ப்பார் - அம்மா
என்றும் உங்கள் நினைவுகளில்

10/2, அம்பக்கர் லேன்,
பிரம்படி, கொக்குவில்.
- குடும்பத்தினர்.

## மூன்றாம் ஆண்டு நினைவலைகள்



மண்ணில்: 19.01.1921 — விண்ணில்: 10.01.2008

### அமரர் தவசிப்பிள்ளை இராமலிங்கம்

(ஓய்வுபெற்ற பஸ் காப்பாளர்)

திதி: மார்கழிப் பூர்வபக்க துதியை
06.01.2011

முக்கண்ணன் அடிசேர்ந்து முழுதாக
மூன்றாண்டு முடிந்து விட்ட போதினிலும்
முத்தான உங்கள் நினைவுகள் என்றும்
சொத்தாக எம்மனதில் நிறைந்திருக்கும்

நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
- குடும்பத்தினர்.

## 17ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் ★ 22 ★ 08 ★ 1938

மறைவு ★ 06 ★ 01 ★ 1994



### அமரர் சங்கரப்பிள்ளை நமசிவாயம்

(உரிமையாளர், அம்பிகா டிஸ்பென்சறி)

''வையத்துள் வாழ்வாங்கு வாழ்வான் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்''
என்ற குறள் வழி வாழ்ந்து இறைவனடி சேர்ந்த
எங்கள் குடும்பத் தலைவரின் ஆத்மசாந்திக்காக
எமது குலதெய்வமான நுணுவில் விநாயகரைப்
பிரார்த்திக்கின்றோம்.

சரசாலை வடக்கு,
சாவகச்சேரி.
(108517)
குடும்பத்தினர்.

## யாழ். பொது நூலகத்தில் கை படாத ஆங்கில நூல்கள்

யாழ்ப்பாணம், ஜன.6

ஜேர்மன் ஜி.ரி.இசற் நிறுவனத்தினால் யாழ். பொது நூலகத்திற்கு பெறுமதி வாய்ந்த ஆங்கில நூல்கள் வழங்கப்பட்டும் அந்த நூல்களை இதுவரை யாரும் பயன்படுத்தவில்லை என கவலை தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த வருடம் 2 மில்லியன் ரூபா பெறுமதி வாய்ந்த நூல்கள் கையளிக்கப்பட்டும் இதனை யாரும் பயன்படுத்தாதது கவலைக்குரிய விடயமாகும்.

எதிர்காலத்தில் மாணவர்களுக்கு மூன்று மொழியும் அவசியம் என்பதனால் அதனைப் பயன்படுத்தி நன்மையடையுமாறு யாழ்.பொதுநூலகத்தின் பிரதம நூலகர் எஸ்.தனபாலசிங்கம் தெரிவித்துள்ளார். (204-311)

## பொது நூலகம் வரும் சுற்றுலாப் பயணிகளிடம் 10 ரூபா அறவீடு

யாழ்ப்பாணம் பொது நூலகத்திற்கு வரும் சுற்றுலாப் பயணிகளிடம் இருந்து தலா 10 ரூபா அறவிடப்படும் என்று அறிவிக்கப்படவுள்ளது.

யாழ். மாநகர சபையில் அண்மையில் நடந்த கூட்டம் ஒன்றின் போது இந்த முடிவு எடுக்கப்பட்டதாக யாழ். நூலக பிரதம நூலகர் எஸ்.தனபாலசிங்கம் தெரிவித்துள்ளார். (204-311)

## படையினரால் வீதி புனரமைப்பு

வரணி படைமுகாமைச் சுற்றி அமைக்கப்பட்டிருந்த தற்காலிக வீதி படைத்தரப்பினரால் புனரமைப்புச் செய்யப்பட்டு வருகின்றது.

இந்த வீதி அண்மையில் பெய்த கடும் மழை மற்றும் இப்பாதையால் பயணிக்கும் கனரக வாகனங்களினாலும் பலத்த சேதமடைந்ததுடன், குண்டும், குழியுமாகக் காணப்படுவதனால் பயணிகள் சிரமங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

இந்த வீதியை படைத்தரப்பினர் புனரமைப்பதினால் இது வரை அனுமதிக்காத பிரதான பாதை கடந்த முதலாம் திகதி தொடக்கம் பயணிகள் போக்குவரத்துக்குதற்காலிகமாக திறக்கப்பட்டுள்ளது.

இந்தப் பாதை புனரமைக்கப்பட்ட பின்பு - மீண்டும்பிரதான பாதை மூடப்படலாம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.(204-122)


**SHAMROCK**
ஈச்சமோட்டை,யாழ்.
* A/L 2013 கலை, வர்த்தக, கணித, விஞ்ஞான பிரிவுகளுடன்
English & GIT
அரசியல்
S.S செந்தூரன்
B.A(Hons)(Poli sc.Spl)
* Gr.1 முதல்O/L வரை
* English Med. 6 to 11
* புலமைப்பரிசில் Gr.5
* I.C.T
(செயன்முறைகளுடன்)

**கட்டட வேலைகள் செய்து கொடுக்கப்படும்**
கட்டடங்கள் கட்டுதல், வீடு கட்டுதல், வீட்டு வரைபடம், மாபிள் பதித்தல், வயரிங், பைப் லைனிங், பெயின்ரிங், தச்சுவேலைகள் அனைத்தும் சிறந்த முறையில் செய்து கொடுக்கப்படும்.
தொடர்பு: 0750468200

**காணி விற்பனைக்கு**
வீடும் நல்லதண்ணீர்க் கிணற்றுடன் கூடிய 2 பரப்புக் காணி 5/1, வேலப்பர் வீதி, கனகரட்ணம் றோட், அரியாலையில் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0212226179, 0212226180

**காணி விற்பனைக்கு**
வீடு, கிணறு சுற்றிவர மதிலுடன் கூடிய 2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
சாஸ்திரியார் லேன், அரியாலை.
தொடர்பு: 0212226179 0212226180

**தேவை**
பிரின்டிங் வேலை செய்வதற்கு போட்டோசொப், கொரல் ரோவ், ரைப் செட்டிங் தெரிந்த பெண்கள் உடன் தேவை.
தொடர்பு:-0750478711

**Short Period Success**
'குறுகிய காலத்தில் முகாமையாளராக வேண்டுமா'
இளைஞர், யுவதிகளுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம். சாவகச்சேரியில் அமைந்துள்ள Innovage (Multi-National) கம்பனிக்கும் அதன் கிளைகளுக்கும் முகாமைத்துவத்துக்கான வெற்றிடங்கள் உள்ளன. தாங்களும் O/L, A/L சித்தி பெற்றவராயின் [illegible] பயிற்சியுடன் கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.
தொடர்புகளுக்கு:- Udaya:-0717494735, Srikanth:- 0770771377.


## 27th Year Remembrance of

### Late Mr. KARTHIKESU RAJENDRA

(Regional Manager, Salt Co-operation, Puttalam)

Born on 26 - 02 - 1932



At Rest 06 - 01 - 1984

Caring husband, Caring father, you reward is at hand
Our beloved father, We will never forget you. Memories carry us through, as the angels have carried you.The joy and love you gave us will never die.Loving you was easy. If love could have kept you here, you would never have gone. Appa you were a caring and dedicated father to all of us. Your memory will never will die.

Contact: Mrs. Kishani Rajanayagam
(Daughter)
850, Hospital Road,
Jaffna. (108527)

Fondly remembered and sadly missed by
Loving Family
"Thilaga Vasa"
College Lane,
Vaddukoddai.

## வீட்டுக் கிருத்திய அழைப்பு



கடந்த (08.12.2010) புதன்கிழமை அன்று சிவபதம் அடைந்த எமது அன்புத் தெய்வம்

அமரர்

### வைரவன் நாகலிங்கம்

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் (05.01.2011) புதன்கிழமை வில்லூன்றி புனித தீர்த்தக் கரையில் நடைபெற்றன. அன்னாரின் வீட்டுக் கிருத்தியக் கிரியைகள் நாளை (07.01.2011) வெள்ளிக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெறவுள்ளதால் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அவரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திப்பதோடு தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். (இந்த அழைப்பினை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்).

உசன்,
விடத்தற்பளை றோட்,
மிருசுவில். (108529)
- குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

### கந்தையா வேலுப்பிள்ளை



அராலி வடக்கு, அராலியைச் சேர்ந்த கந்தையா வேலுப்பிள்ளை நேற்று (05.01.2011) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - நாகம்மா தம்பதியரின் அன்பு மகனும் செல்லையா - இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் உருக்குமணியின் அன்புக் கணவரும் உதயகுமார், உதயராணி (சுவிஸ்), உதயநந்தினி, உதயறஞ்ஜினி, றயனகுமார், உதயபவானி (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், பரமானந்தன், கிருஷ்ணபிள்ளை, தேவராஜ், புனீதமலர் ஆகியோரின் அன்பு மாமனும், தீபன்ராஜ், அபர்ணா, ஜெபி, நவீனா, சயிந்தன், கயிந்தினி, தேனுஜா, தேனுஜன் ஆகியோரின் பாட்டனும் காலஞ்சென்றவர்களான செல்லம்மா, மாணிக்கம் மற்றும் சிவகுரு, இராசையா, சிவபாதம், நல்லம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.01.2011) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் நண்பகல் 12 மணிக்கு தகனக்கிரியைக்காக அராலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
அராலி வடக்கு,
அராலி.
மகன் - வே.உதயகுமார்.
(108506) மருமகன் - ச.கிருஸ்ணபிள்ளை.

### தம்பிமுத்து சண்முகநாதன்

(கிளை முகாமையாளர் - சாவகச்சேரி ப.நோ.கூ. சங்கம் சரசாலை மட்டுவில் கிளை)

சாவகச்சேரி, மட்டுவிலைப் பிறப்பிடமாகவும் சாவகச்சேரி சப்பச்சி மாவடியை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிமுத்து சண்முகநாதன் நேற்று (05.01.2011) அகால மரணமானார்.

அன்னார் ஞானசௌந்தரியின் (ஞானம்) அன்புக் கணவரும் சுகன்யா (லண்டன்), சுவீபன் (ஆண்டு 11, சாவகச்சேரி இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் சுதர்சனின் (லண்டன்) அன்பு மாமனாரும், சுயனின் பாசமுள்ள பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தாமோதரம்பிள்ளை வீதி,
சப்பச்சி மாவடி,
சாவகச்சேரி. (சி-574427)
தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐ.நா. நிபுணர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பயணம் தொடர்பில் சந்தேகம் ஏற்பட்டது'' என்று பேச்சாளர் தெரிவித்தார்.

இது தொடர்பில் 'இன்னர் சிற்றி பிரஸ்' கடந்த சில நாள்களாகத் தொடர்ந்து பல கேள்விகளை எழுப்பியது. பதில்கள் எவையும் ஐக்கிய நாடுகள் தரப்பில் வழங்கப்படவில்லை. இந்த நிலையில் சபையின் பேச்சாளரிடம் நேற்றும் கேள்வி எழுப்பப்பட்டது.

''இலங்கையில் ஐ.நா. நிபுணர்கள் குழு யார் யாரைச் சந்திக்கும், எந்த மட்டத்தில் இயங்கும் என்பன குறித்து ஒன்றும் தெரியாது'' என்று பேச்சாளர் தெரிவித்தார். (உ)

## குடாநாட்டில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணத்தில் சட்டமும், ஒழுங்கும் சீரழிந்துள்ளன என்று தெரிவித்த மாவை, இந்தச் சபையில் இருக்கும் மூத்த அமைச்சர்களும், பிரதமரும் இவ்விடயங் களை ஜனாதிபதியின் கவனத்துக்குச் சமர்ப்பித்து உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

''இச்சம்பவங்கள் தொடர்பாக நேற்று இந்தச் சபையில் கவனயீர்ப்புப் பிரேரணை ஒன்றை சமர்ப்பிக்க செயலாளர் நாயகத்துக்கு முன்னறிவித்தல் கொடுத் திருந்தோம். ஆனால் எமது அறிக்கையின் சிங்கள மொழி பெயர்ப்பு தக்க சமயத்தில் கிடைக்கவில்லை என்ற காரணத்தால் இன்று சமர்ப்பிக்க வேண்டியதாகிவிட்டது. எனவே, பிரதமர் இதற்குப் பதில் அளிக்க வேண்டும்''

- இப்படி மாவை சேனாதிராஜா வலியுறுத்தினார்.

குடாநாட்டில் சட்டமும், ஒழுங்கும் உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்றும் அவர் கோரிக்கை விடுத்தார்.

இக்குற்றச்சாட்டுகள் குறித்துப் சபையில் கருத்துத் தெரிவித்த சபை முதல்வரும், அமைச்சருமான நிமால் சிறி பால டி. சில்வா, கூட்டமைப்பிற்கு உடனடியாகப் பதில் அளிக்க முடியாது என்றார். பிரேரணை உரிய முறைப்படி சமர்ப்பிக்கப்படவில்லை என்றும், இதில் எவ்வளவு உண்மைத் தன்மை உள்ளது என்பதைக் கண்டறிய வேண்டும் என்றும் கூறினார்.

''இப்பொழுதுதான் இது எங்கள் கைக்குக் கிடைத்தது. எனவே உடனடியாகப் பதில் அளிக்க முடியாது'' என்று கூறிய அமைச்சர், ''நாங்கள் நினைத்து இருந்தால் நீங்கள் இன்று அறிக்கை சமர்ப்பிப்பதையும் தடுத்து இருக்கலாம். ஆனால், மனிதாபிமான விடயம் என்பதால் அனுமதித்தோம்'' என்றார்.

அமைச்சரின் கூற்றை ஆட் சேபித்தார் ஐ.தே.கட்சி உறுப்பினரான ஜோன் அமரதுங்க.

''உங்களுடைய அமைச்சர்களில் ஒருவரான டக்ளஸ் தேவானந்தாவே யாழ்ப்பாணத்தில் சட்டமும், ஒழுங்கும் சீர்குலைந்துள்ளதாக இந்தச் சபையில் தெரிவித்தார். அதுமட்டுமின்றி, கட்சித் தலைவர்களின் கூட்டத்திலும் இவ்விவகாரம் தொடர்பாக தனியான ஒரு விவாதம் நடத்துவதற்குப் பரிசீலனை செய்யப்பட்டது. இப்படியான நிலையில் அமைச்சருக்கு சந்தேகம் ஏற்படுவதற்குக் காரணமே இல்லை. எனவே, அமைச்சர் பதில் அளிக்கவேண்டும்'' என்றார் அவர்.

ஆனாலும், இவ்விடயம் முறைப்படி சமர்ப்பிக்கப்படவில்லை. எனவே, பதில் அளிப்பதற்கு அவகாசம் வேண்டும் என்றார் அமைச்சர்.

இதேவேளை கூட்டமைப்பு உறுப்பினரான எம்.ஏ.சுமந்திரன், நாடாளுமன்ற நிலையியற் கட்டளைப்படி, முறைப் படி செயலாளர் நாயகத்திடம் பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டது என்று சுட்டிக்காட்டினார்.

''நிலையியற் கட்டளையில் குறிப்பிட்டுள்ளதுதான் என்றாலும் பாதுகாப்பு விடயத்துடன் தொடர்புடையது என்பதால் சம்பந்தப்பட்ட அமைச்சருக்கும் அறிவித்திருக்கவேண்டும். எனினும், இவ்விடயங்களுக்கு அமைச்சர் நாளை (இன்று) பதில் அளிப்பார்'' என்று சபாநாயகர் அறிவித்தார். (உ-2)


## சேவைநலன் பாராட்டு



### திரு வல்லிபுரம் யோகநாதன்

(இலங்கை அதிபர் சேவை தரம் I)

40 ஆண்டுகள் கல்விச்சேவையில் ஆசிரியராய், அதிபராய், கோட்டக் கல்விப் பணிப்பாளராய் பணியாற்றி இன்று சேவையில் இருந்து ஓய்வுபெறும் திரு.வல்லிபுரம் யோகநாதன் அவர்களை மனதாரப் பாராட்டுகின்றோம். இவர் எமது பாடசாலையில் ஆற்றிய பணிகள் காலத்தால் அழியாதவை. மிக நெருக்கடியான காலத்தில் பாடசாலை அதிபர் பதவி ஏற்று கல்வியிலும், கல்வியோடு இணைந்த புறநிகழ்வுகளிலும் தேசிய ரீதியில் சாதனை படைத்ததை நினைவில் கொள்கின்றோம். இவரது ஓய்வுக் காலம் சிறக்கவும் ஆரோக்கியத்துடன் வாழவும் வாழ்த்திப் பிரார்த்திக்கின்றோம்.

கல்விச் சமூகம்,
கிளி/கிளிநொச்சி மகாவித்தியாலயம்.

(பி/574420)


## பீரிஸிடமும் சாட்சியம் ஆணைக்குழு தகவல்

கொழும்பு,ஜன.6

வெளிவிவகார அமைச்சர் அமைச்சர் ஜீ.எல்.பீரிஸிடம் சாட்சியம் பெறப்பட உள்ளது என நல்லிணக்க ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

2002ஆம் ஆண்டு யுத்த நிறுத்த உடன்படிக்கை அமுல்படுத்தப்பட்ட காலத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசின் பிரதான அமைச்சர்களிடமும் சாட்சியம் திரட்டப்பட உள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

முன்னாள் வெளிவிவகார அமைச்சர் ரோஹித போகொல்லாகம, முன்னாள் அமைச்சர் மிலிந்த மொறகொட ஆகியோரிடமும் உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு விசாரணைகளை நடத்தவுள்ளது.

எதிர்வரும் நாள்களில் இதற்கான அழைப்புக்கள் விடுக்கப்படும் என எதிர் பார்க்கப்படுகிறது.

## இறுதிப்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தாம் நிறுத்திக்கொள்வதாக அமெரிக்கா எச்சரித்திருந்ததாகவும் அச்செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனினும், இலங்கை அரசு இக்குற்றச் சாட்டை நிராகரித்திருந்ததாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (சி)

## 6 உள்ளூராட்சி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்கனவே தெரிவித்திருந்தார்.

அத்துடன் விளையாட்டுத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகேயும் இப்பிரதேசங்களிலுள்ள உள்ளூராட்சிச் சபையின் தேர்தல்களை பின்போடும்படி அரசைக் கோரியுள்ளார். (சி)

## திருநெல்வேலியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது. யாழ்ப்பாணப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

கொல்லப்பட்டவர் வன்னியில் இருந்து இடம்பெயர்ந்து முகாமில் வசித்துவிட்டு அண்மையிலேயே யாழ்ப்பாணத்தில் மீளக்குடியமர்ந்தவர் என்று தெரியவந்தது. (ஒ-9-10)

## யாழ்.கொலை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மளவில் இடம்பெற்று வருகின்றன. இதனால் மக்கள் பீதியில் உள்ளனர்.

ஆனால், இந்த அசாதாரண நிலைமையை அரசு கவனத்தில் எடுக்கவில்லை. அங்கு பெரிதாக எதுவும் இடம்பெறவில்லை என்ற நிலைப்பாட்டில் அரசு உள்ளது. இந்தக் கவனயீனம் பாரதூரமானது.

இந்த நாட்டு மக்கள் அனைவரையும் நாம் இலங்கையர்களாகவே பார்க்கவேண்டும். தமிழ், முஸ்லிம் மற்றும் சிங்களம் என்ற வேறுபாடு காட்டக்கூடாது. அனைவரையும் இலங்கையர்களாகப் பார்த்தால் மட்டுமே இவ்வாறான அசம்பாவிதங்களை இல்லாதொழிக்க முடியும்.

புலிகளை இல்லாதொழித்தது இந்நாட்டு மக்களை நிம்மதியாக வாழவைக்கத்தான். ஆனால், மீண்டும் அசம்பாவிதங்கள் இடம்பெற்றால் புலிகளை இல்லாதொழித்ததில் என்ன பலன் இருக்கின்றது.

யாழில் இடம்பெறுகின்ற அசம்பாவிதங்கள் மூலம் இந்த அரசு புலிகளை மீண்டும் தட்டி எழுப்பவே முயற்சி செய்கின்றது. இது நாட்டில் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும்.

அசம்பாவிதங்கள் யாழில் மட்டும் இடம்பெறவில்லை. தெற்கிலும் இடம் பெறுகின்றன. இந்த நிலைமையை அரசு கட்டுப்படுத்தவேண்டும். மக்கள் அனைவரும் நிம்மதியாகவும், சுதந்திரமாகவும் வாழக்கூடிய சூழலை அரசு உருவாக்கிக் கொடுக்கவேண்டும் - என்றார். (சி)

## 111 மேலதிக வாக்குகளால் அவசரகாலச் சட்டம் நிறைவேற்றம்

கொழும்பு,ஜன.6

அவரசகாலச் சட்டம் 111 மேலதிக வாக்குகளால் மேலும் ஒரு மாதத்துக்கு நீடிக்கப்பட்டது.

இதற்கான வாக்கெடுப்பு நேற்று நாடாளுமன்றத்தில் இடம் பெற்றது. இதன்போது அவசர காலச் சட்டத்துக்கு ஆதரவாக 134 வாக்குகளும் எதிராக 23 வாக்குகளும் அளிக்கப்பட்டிருந்தன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஐக்கிய தேசியக் கட்சி, ஜே.வி.பி. என்பன அவசரகாலச் சட்டத்தை எதிர்த்து வாக்களித்தன.

## யாழ்.மாணவர்களின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விசேடமாக ஒழுங்குபடுத்தப்பட்டுள்ள இரண்டு வார கால இந்தப் பயிற்சியை நேற்றுக் காலை பேராசிரியர் திருவாசகம் ஆரம்பித்து வைத்தார்.

நிகழ்வில் உரையாற்றிய அவர் மேலும் தெரிவிக்கையில், ''போரினால் பொருளாதாரமும் கல்வி, பண்பாடும் சிதைக்கப்பட்டதான சூழலில் வாழ்கின்ற தமிழர்களுக்கு சிறந்த கல்வியை வழங்குவதன் மூலம் இழந்தவற்றை மீளப் பெறமுடியும். சிதைந்துபோன கல்வியையும் பொருளாதாரத்தையும் மேம்படுத்த முடியும். தமிழ் மாணவர்களின் கல்வியை மேம்படுத்துவதற்கு உதவ நாம் தயாராக உள்ளோம். மனிதன் தலை நிமிர்ந்து நிற்பதற்கு கல்வியே சிறந்த ஆயுதமாகும்'' என்றார் துணைவேந்தர்.

இலங்கை தமிழ் மாணவர்கள் கற்பதற்கு ஏதுவாகச் சென்னைப் பல்கலைக்கழகக் கதவுகள் திறந்தே இருக்கும் என்றும் குறிப்பிட்ட அவர், ''அண்மையில் சென்னைப் பல்கலைக்கழகம் முக்கியமான ஒரு முடிவை எடுத்துள்ளது. இலங்கை தமிழ் மாணவர்கள் சென்னைப் பல்கலைக்கழகத்தில் கல்விகற்பதாக இருந்தால் அவர்கள் இந்திய மாணவர்கள் செலுத்தும் கட்டணத்தை மட்டும் செலுத்தினால் போதும். வெளிநாட்டு மாணவர்களாக அவர்கள் இனிவரும் காலங்களில் கருதப்படமாட்டார்கள் சென்னைப் பல்கலைக்கழகம் வெளிநாட்டு மாணவர்களிடம் இருந்து இந்திய மாணவர்களுக்கான கட்டணத்தை விடப் பலமடங்கு கட்டணத்தை அறவிடுகின் றது'' என்று தெரிவித்தார்.

எதிர்காலத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இதழியல் துறையின் வளர்ச்சிக்குச் சென்னைப் பல்கலைக்கழகம் அனைத்து வகைகளிலும் உதவிசெய்யும் என்றும் துணை வேந்தர் உறுதி அளித்தார்.

இந்த நிகழ்வில் சென்னைப் பல்கலைக்கழக இதழியல் மற்றும் தொடர்பாடல்துறைத் தலைவர் பேராசிரியர் ரவீந்திரன் தமிழ் இலக்கியத்துறைத் தலைவர் வி.அரசு, யாழ்.பல்கலைக்கழக ஊடகவளங்கள் பயிற்சிமைய இணைப்பாளர் தே.தேவானந்த் ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர்.

முதல் இரண்டு நாள் பயிற் சியில் குமுதம் பத்திரிகை, ஆறாந்திணை, என்.டி. ரி.வி, ஸி ரி.வி, அகில இந்திய வானொலி, பொதிகை தொலைக்காட்சி, இந்தியா ருடே ஆகிய ஊடக நிறுவனங்கள் சார்ந்த பல மூத்த பத்திரிகையாளர்கள் பயிற்சிகை வழங்குகிறார்கள். இவர்களோடு இந்திய மத்திய அரசு செய்தித் துறை உயர் அதிகாரி சண்முகம், மூத்த பத்திரிகையாளர் ஞானி, அமெரிக்காவின் லொயோலா பல்கலைக்கழக பேராசிரியை ஆர்டிமிஸ் ஆகியோரும் மாணவர்களுக்கான பயிற்சிகளை வழங்க உள்ளனர். (உ)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



இந்து நாகரிகத்துறைத் தலைவர் கலாநிதி
மா.வேதநாதன் அவர்கள்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்துநாகரிகத்
துறைப் பேராசிரியராக நியமிக்கப்பட்டதை
மிகவும் மனமகிழ்ச்சியுடன் வாழ்த்திப்
பாராட்டுகிறோம்.
எமது சிற்பாலயத்துடன் நெருக்கமான உறவு
கொண்டு தேவையான போது தகுந்த
ஆலோசனைகளை வழங்கிவரும் பேராசிரியர்
மா.வேதநாதன் எமது அருமைத்தந்தை அமரர் தேர்க்கலை அரசு
ஆ.ஜீவரத்தினம் அவர்களின் நெருங்கிய இனிய நண்பராகவும்
விளங்கியவர். அவர் இன்னும் இன்னும் பல பதவி உயர்வுகள்
பெற்றுப் புகழ் பெறவேண்டுமென்று எல்லாம் வல்ல
பத்திரகாளித்தாயின் பாதங்களைப் பணிகிறோம்.

ஆறுமுகம் சிற்பாலயம்.
(108515) காளிகோயிலடி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.



## பொற்காலம் தம்பை ஞானவைரவர் கோயில் பரிபாலன சபை
## கலந்துரையாடலும் பொதுக் கூட்டமும்

தெல்லிப்பழை தென்மேற்கு பொற்காலம் தம்பை ஞானவைரவர் கோயில் திருத்த வேலைகள் தொடர்பான கலந்துரையாடலும் பொதுக்கூட்டமும் நாளை (09.01.2011) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு கோயில் மண்டபத்தில் நடைபெறும். ஆலயத்துடன் தொடர்புடைய சகல மக்களையும் சமூகம் தருமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(108503) நிர்வாகம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணத்திலும் கண்காணிப்பு ‘கமரா’

கொழும்பு, ஜன. 06

பாதுகாப்புக் காரணங்களுக்காக யாழ். குடாநாட்டிலும் கண்காணிப்புக் கமெராக்களைப் பொருத்துவதற்கு அரசு தீர்மானித்துள்ளது எனத் தெரியவருகிறது.

யாழ். நகரத்தின் பாதுகாப்பை மேம்படுத்துவதற்காக இந்தக் கமெராக்கள் பொருத்தப்படவுள்ளன எனப் படைத் தரப்பு வட்டா ரங்கள் தெரிவித்துள்ளன.

ஆனால், இந்தத் தகவல் தொடர்பில் தமக்கு எதுவும் தெரியாது என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரசாந்த் ஜெயக் கொடி தெரிவித்துள்ளார்.

யாழ். நருக்குள் பிரவேசிக்கும் இடங்கள் மற்றும் கேந்திர முக்கியதுமிக்க இடங்களில் இந்தக் கமெராக்கள் பொருத்தப் படவுள்ளன.

கண்காணிப்புக் கமெராக்களை பொருத்தும் நடவடிக்கையின் இரண்டாம் கட்டமாக அவை யாழ்ப்பாணத்தில் பொருத்தப்பட வுள்ளன எனவும் இதன் மூலம் பொலிஸார் மற்றும் இராணுவத் தினரின் பணிகள் இலகுவாக அமையும் எனவும் தெரிவிக்கப் படுகிறது.

இதேவேளை, அநுராதபுரம் மற்றும் கண்டி நகரங்களிலும் கண்காணிப்புக் கமெராக்கள் பொருத்தப்படவுள்ளன எனத் தெரிய வருகிறது. (சி)


**புதிய பிரிவுகள் ஆரம்பம்**

AAT (Sri Lanka)
Fundation, Intermediate & Final
Medium :- English & தமிழ்
புதிய பிரிவுகள் ஆரம்பம்: 08.01.2011 சனிக்கிழமை 8.00 A.m

**Certificate Course in English**
Five Batches have Successfully completed the Course. 6th Batch will be Commenced on 08.01.2011
*Day Classes : Monday & Friday*
*Weekend Classes : Saturday & Sunday*

External Degree (Jaffna University)
G.A.Q., B.A. 1 & B.A. Final
1st in Com, B.com (I&II), Final
ஆரம்பம் : 08.01.2011 (Saturday) 9.00 A.M.

சட்டக்கல்லூரி அனுமதிப் பரீட்சை
- 35 வயதுக்குட்பட்டவர்கள்
- G.C.E. (O/L) ஆங்கிலம், தமிழ் "C" சித்திகள்.
- A/L பரீட்சையில் சித்தி

ஆரம்பம் : 08.01.2011 (Saturday) 11.00 A.M.

Further Details :
Director,
Jaffna College Undergraduate Dept.,
464, Hospital Road, Jaffna.

BCS @ IIS CITY CAMPUS
THE CHARTERED INSTITUTE FOR IT
bcs The Chartered Institute for IT
Certificate in IT
Diploma In IT
PG Diploma in IT



Register before 12th Jan for April 2011 Exam
Course Commences : 23 / 01 / 2011
IIS CITY CAMPUS
200,Sivan Pannai Road, Jaffna
Tel:-021 222 8060 Fax:-021 222 6933
Web:- iis.edu.lk

PHYSICS
N. எடிசன்
A/L 2011
மின் புலங்கள்
Mon, Tue 4.30-6.00pm
A/L 2012
அலைகளும் அதிர்வுகளும்
Tue, Thu 3.00-4.30pm
A/L 2011 Day
Paper Class
Thur, Fri 6 - 7.30pm
ஆரம்பம்: 06.01.2011 (Thur)
NEC
பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி சந்தி, யாழ்ப்பாணம்.

கணக்கீடு
A/L 2011 / Day
சனி, ஞாயிறு 4-6am
A/L 2012
கட்டுப்பாட்டுக் கணக்கு.
சனி, ஞாயிறு 3pm
S.தவா
B.com (Hons) (Acc.spl)
தனிப்பாட அனுமதி உண்டு
யூனிவேர்சல்
கந்தர்மடம்

கணக்கீடு
A/L 2011 / Day
ஆரம்பம் சனி 6am
A/L 2012
கட்டுப்பாட்டுக் கணக்கு.
ஆரம்பம் சனி 8am
S.தவா
B.com (Hons) (Acc.spl)
தனிப்பாட அனுமதி உண்டு
NIRU
கோண்டாவில்

வர்த்தகப் பிரிவு
A/L 2013
Acc: பாலகஜன்
Eco: அருணன்
B.St: பாலசுபேஷ்
ஆரம்பம்:- 08/01/2011
சனி:- 08.00 am
BEACON
யாழ். நகர்

A/L 2013
கலைப் பிரிவு
ஜனவரி - 08
காலை - 08.00 am
BEACON

**வெற்றித்தேர்வு நாடளாவிய பரீட்சை - 2011**
2011-தரம்:5, தரம்:4 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தயாராகும் மாணவர்களுக்கான சாதனை படைத்த வெற்றித்தேர்வு தொடர் பரீட்சைகள் ஆரம்பமாகின்றன.
அகில இலங்கையில் மாணவர்களை முதல் நிலைக்குக் கொண்டுவந்த, விசேட அங்கீகாரத்துடன் முதற்தர வினாப்பத்திரமான வெற்றித்தேர்வு தயார் நிலையில். தேவையான பாடசாலைகள் உடன் தொடர்பு கொள்க.
பாடசாலைகளுக்கு தரம்:5ற்கு 20 பத்திரங்கள். தரம்:4ற்கு 15 பத்திரங்கள்
யாழ் மாவட்ட தரம்:5, தரம்:4 மாணவர்களுக்கான விசேட பரீட்சை மையம். 34 பரீட்சைகளோடு திருத்தி புள்ளித்தாள்களுடன் மாணவர் நிலைப் பட்டியலும் வழங்கப்படும்.
முதலாவது பரீட்சை 09.01.2011 ஞாயிறு. 6am,8am,10am,2pm,4pm
இடம்: நல்லூர் சயன்ஸ் அக்கடமி
மேலதிக விபரங்களுக்கு: 0212290106,0773126807,0775388471

BRAIN POWER INSTITUTE
குருநகர். யாழ்ப்பாணம்.
A/L 2013 கலை, வர்த்தக பிரிவுகள்
எமது தனித்துவமான யாழ்.நகரின் முன்னணி ஆசிரியர் குழு.

| | |
|---|---|
| Eco-N.Bகஜிதரன் | Logic-திரு.றமணன் |
| Acc-திரு.பாலகஜன் | Christ-திரு.வசந்தன் |
| Com-திரு.பாலசுபேஷ் | Geo-திரு.ஆனந்தராஜா |
| Tamil-திரு.வசீகரன் | Eng-திரு.ஜைசன் |

ஆரம்பம் 07-01-2011 வெள்ளி மாலை 3 மணி
அனுமதிக்கு முந்துங்கள்!
நேரசூசி அலுவலகத்தில் பெறவும்.

**வேலை வாய்ப்பு**
அலுவலக வேலைக்கு ஒருவர் தேவை. ஓய்வூதியர் விரும்பத்தக்கது. (இருபாலாரும்)
கற்சுமி வெளியீடு
166, நாவலர் வீதி, யாழ். 0718474325

A/L 2013 கணித, உயிரியல் பிரிவுகள்
Che : S. வாசு
Phy : S. கஜன்
: N. எடிசன்
Co. Mat : R. சயந்தன்
Bio : V.A ஞானேந்திரன்
தமிழ் மொழிமூலம் English Medium வகுப்புக்கள்
ஆரம்பம் : 08-01-2011 சனி 8.00 மணி
NEC பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

A/L 2013
கலை, வர்த்தகப் பிரிவுகள்
ஜனவரி - 08
காலை - 08.00
DMI

யாழ் நகரில் முன்னணி கல்வி நிலையத்தில்
கணக்கீடு
AP. பகீரதன்
B.B.A (Fm Spl.)
A/L 2013
ஆரம்பம் : 08-01-2011 சனி 8.00 மணி
NEC பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

**விற்பனையாளர் தேவை**
எமது வியாபார ஸ்தாபனத்துக்கு விற்பனையாளர்கள் தேவை. 06.01.2011- 08.01.2011 வரை நேரில் சமுகம் தரவும்.
செல்வா எலக்ரிக்கல்ஸ்
இல:21, பலாலி வீதி, திருநெல்வேலிச்சந்தி.
T.P:- 0213218617.

தரமான கட்டட வடிவமைப்பு, சரியான மதிப்பீடு, அழகானதும், மிகநேர்த்தியானதுமான கட்டட வேலைகள் மற்றும், கட்டட வரைபடங்களுக்கு, நீண்ட கால அனுபவமும், திறமையும் கொண்ட தொழில்நுட்ப வியலாளர்களினால் உங்கள் கட்டடங்களை உரிய தவணையில், நிறைவான தரத்தில் பெற்றிட இதோ.....
யாழ்.நகரில் Graphic Design and Builder.
(1) Building Construction
(2) Building Planning
(3) Council Drawings
(4) BOQ
(5) Estimate
(6) Structural Designs
அனைத்திற்கும் நம்பிக்கையான ஒரே ஒரு தெரிவு.
No:- 26B, Brown Road, Jaffna.
Infront of Jaffna Technical College.
T.P No:- 0718474664.

பொருளியற் கல்லூரி
யாழ்.நகரில், இணுவிலில்.
A/L - 2013
கலை, வர்த்தகப் பிரிவு
பிரிவு II
ஜனவரி 8இல்
அனுமதிகளைப் பெற்றுக் கொள்ளவும்.

**மொழி வகுப்புகள்**
O/L எடுத்த மாணவர்கள்
A/L மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் , அரச ஊழியர்களுக்கான மிகவும் இலகுவான முறையில் எழுத, பேச, வாசிக்க ஆங்கிலம், சிங்களம் மொழி வகுப்புகள்.
ஆரம்பம்: 08.01.2011 சனி, ஞாயிறு
திகழ் கல்வி நிறுவனம் கே.கே.எஸ். வீதி, இணுவில்.
மற்ஸ் அக்கடமி உடுவில் மகளிர் கல்லூரி முன்பாக, உடுவில்.

A/L- வரலாறு ஆரம்பம்
தரம் 2013
இடம்:N.E.C கல்வி நிலையம், ஆனைப்பந்தி சந்தி.
காலம்: 08.01.2011 சனிக்கிழமை (08.00am)
ஆசிரியர்:- R.R. ஆனந்தன்.
குறிப்பு:- 8வருட கால ஆசிரியர் சேவையில் 159A பெறுபேற்றை உருவாக்கியதோடு பிறிதொரு பாடத்தில் இருந்து வரலாற்றுக்கு மாறிய 16 மாணவர்களை 6 மாதங்களில் தயார்படுத்தி அதில் 11 மாணவர்களை A பெறுபேற்றுக்கு உருவாக்கிய சாதனை ஆசிரியர்.

முழுமையான ஆங்கிலம்
Complete English
ஒவ்வொருவர் கையிலும் இருக்கவேண்டிய புத்தகம்
தினமும் 15 நிமிடம் செலவுசெய்து வீட்டிலிருந்தபடியே தமிழைப்போன்று சரளமாக ஆங்கிலம் பேச முடியும்.
ஒரு புத்தகத்தின் விலை : Rs.1100/-
MyWay 182, Stanley Rd, Jaffna

பல மாணவர்களின் வெற்றிக்கு வழியமைத்த முன்னணி ஆசிரியர் குழாமின் வழிகாட்டலில்....
A/L 2013
ஆரம்பம் : 08-01-2011
சனி காலை 8.00 மணி

வர்த்தகப் பிரிவு
கணக்கீடு : A.P பகீதரன்
பொருளியல் : NB. கஜிதரன்
வணி.கல்வி : S. யசோ

கலைப் பிரிவு
தமிழ் : A.K. கீர்த்திராஜன்
பொருளியல் : NB. கஜிதரன்
அளவையியல் : P. கமல்
புவியியல் : M. செல்வா
இந்துநாகரீகம் : T. ஸ்ரீஸ்
அரசியல் : A.K. றொபின்சன்
வரலாறு : R.R. ஆனந்தன்
நாட.அரங்கி : S.R. ரமேஸ்
கிறிஸ்தவம் : S. நிரோஜன்
NEC பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 06.01.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org